

929
25 JUN 1949
198935

# குங்குமம்

மாதர் மாதப் பத்திரிகை

டைரக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன் அவர்களால் காலேஜுகளுக்கும் பள்ளிக் கூடங்களுக்கும் சிபார்சு செய்யப் பட்டிருக்கிறது.


| | | |
|---|---|---|
| 1 வருடச் சந்தா | ரூ. | 6/- |
| 2 வருடச் சந்தா | ரூ. | 11/- |
| ஆயுட்சந்தா | ரூ. | 100/- |

★

குங்குமம் காரியாலயம்

'முரளி,' பச்சையப்பன் ஹாஸ்டல் ரோடு

சென்னை 10


Your brakes did need servicing.. see?
shellubrication means 'car care'
. . . a Burmah-Shell Service
ஷெல்லூப்ரிகேஷன்
BSK.122

VISIT

# MEERANS

for Textiles of every description.

Distributors of Buckingham & Carnatic Mill goods, Mettur Mill goods, Bombay & Ahmedabad goods.

STOCKISTS OF:

TWEEDS—
FURNISHING
FABRICS—
HOSIERY—
FOREIGN
IMPORTED
GOODS.

S. MEERA SAHIB & BROS.,

38, EVENING BAZAAR ROAD,

MADRAS

*It's Recognised*

# V. T. STORES

*Direct Importers of :*

Branded Grocery, Standard Provisions, Patent Medicines Toilet Wares, Paris Perfumeries, Smoking Requisites, Confectionery and Presentation Novelties and everything that the home needs.

*Always Shop at :*

## V. T. ABDUR RAHMAN & CO.

The Well Known Grocers, General Merchants and Mess Purveyors

275—A, CHINA BAZAR ROAD, G. T., MADRAS

25 JUN 1949

MADRAS

அரசாங்கம், நகர பரிபாலன சபைகள், ரயில்வே முதலிய ஸ்தாபனங்களுக்கு உயர்தரமான மரச் சாமான்கள் சப்ளை செய்பவரான

## கே. எஸ். வெங்கடேஸ்வரா

### அண்டு பிரதர்ஸ்

[10, பிராட்வே, சென்னை.]

உங்கள் வீடுகளை சுகமான ஆசனங்களாலும், அழகிய சாமான்களாலும் நிரப்ப காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

# குடந்தை

## கொள்ளேகால் ஸில்க் ஹவுஸ்

அற்புத வேலைப்பாடுகளமைந்த கொள்ளேகாலம் பட்டுச் சேலைகளும் பலவூர் நூல் ஜவுளிகளும் குறைந்த ஒரே விலையில் கிடைக்குமிடம்.

---

## கொள்ளேகால் ஸில்க் ஹவுஸ்

பட்டு ஜவுளி வியாபாரம்

99, பெரிய தெரு :: கும்பகோணம்



# "ஆத்ம ஜோதி"

அரிய செந்தமிழ் மாதப் பத்திரிகை


கௌரவ ஆசிரியர்: க. இராமசந்திரன்

பதிப்பாசிரியர்: நா. முத்தையா

உயர்ந்த கருத்துக்களைத் தாங்கி உலக மாந்தரை உய்விக்கும் ஒரே லக்ஷியத்தை உடைய இப்பத்திரிகை மனதுக்குச் சாந்தியளித்து ஒருமையை வளர்த்து, அழியா உயர் வாழ்வில் மனதைச் செலுத்த உத்தமமான வழிகாட்டி.

வருடச் சந்தா ரூபாய் 3/-

கிடைக்குமிடம்: 79/6, டோலஸ்பாகே ரோட்,
காவல்பிட்டி, சிலோன்.



# குங்குமம்



ஆசிரியை : எஸ். விசாலாக்ஷி

விரோதி—வைகாசி

சிமிழ் 1. திலகம் 8.

"குங்குமம்" காரியாலயம்

'முரளி'

பச்சையப்பன் ஹாஸ்டல் ரோடு,

சென்னை 10.

பெண்களுக்குச் சேவை செய்வதே குங்குமத்தின் முக்கிய நோக்கம்

# பொருளடக்கம்


பக்கம்

1. தலையங்கம் ... 7
2. தாழவைத்து வாழவைப்பவன்—பாட்டு ... 11
3. வாழ்க்கை நிழல் ... 12
4. அழகு—ஸ்ரீ திருப்புகழ் மணி ... 17
5. ஆனந்தாஸ்ரமம்—சாது ஸ்ரீ முருகதாஸ் ... 22
6. நமது புராண இதிஹாஸங்கள்—ஸ்ரீமதி வி. ராமன் ... 27
7. சுகாதாரக்கல்வி—ஸ்ரீ த. ந. ஸ்ரீ. ராகவாச்சாரி ... 30
8. ஜப்பானியப் பெண்கள்—சின்னப்பா ... 34
9. கண்ணனும் கந்தனும்—எஸ். வி. ... 38
10. சாந்தி—நாடகம்—வித்வான் வை. செல்லம்மாள் ... 44
11. தியாகியார்?—ருக்மணி எஸ். வி. ராஜகோபாலன் ... 53
12. பெண்களின் பொறுப்பு—டர்பன் திருமதி சா. மு. பிள்ளை ... 60
13. ஸ்ரீ கிருஷ்ண லீலா தரங்கிணி—ஸ்ரீ. டி. வி. சீதாராமய்யர் ... 73
14. ஆழ்வார் துதி—ஸ்ரீமதி மா. லக்ஷ்மி அம்மாள் ...
15. பானங்கள்—குமாரி சியாமளா ... 80


---

வசீகரம், சமையல், கேள்வி பதில், பெண்கள் பார்லிமெண்ட், சினிமா, அச்சிடுதல் முதலிய விசேஷ அம்சங்களும் உண்டு.

# பெண்களுக்குகந்த தொழில்-1

முதல் உலக மகாயுத்தத்தை விட இரண்டாவது யுத்தத்தில் பெண்கள், ஆண்களே செய்து வந்த பல தொழில்களில் ஈடுபட்டு திறமையாக வேலை செய்ததன் நிமித்தமாக தற்சமயம் யுத்தம் முடிந்தும் பல ஸ்திரீகள் உத்தியோக சாலைகளில் வேலை செய்து வருகின்றனர். இதுவும் ஆண் மக்களிடையே வேலையில்லாத் திண்டாட்டத்தை அதிகரிக்கும் ஒரு நிமித்தமாகும் என்று பலர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

பெண்ணும் ஆணும் சரி நிகர் என்று பாரதியார் பறை சாற்றினார். அதனால் ஆண்களின் அலுவல்கள் எல்லாவற்றிலும் பெண் மக்கள் சமபங்கெடுத்துக் கொள்ளவேண்டுமென்று பொருள் கொள்வது ஒவ்வாது. பல நூற்றாண்டுகளாகச் சில தொழில்களைச் செய்துவந்ததன் காரணமாக இயற்கையன்னை ஆண்களின் தேகங்களை ஒருவிதமாகவும், பெண்களை மற்றொரு விதமாகவும் சமைத்துள்ளாள். இதனாற்றான் பெண்மையுடன் மிருதுத்தன்மையும் ஆண்மையுடன் தேக வலிவையும் சேர்த்து கவிகளும் பாடுகிறார்கள். ஆண் மக்களைப்போல் கடினமான வேலைகளைச் செய்ய பெண்கள் உடல்நலம் மாற சிறிது காலம் வேண்டும்.

அப்படி மாற வேண்டுமா? அப்படி பெண்ணும் ஆணும் ஒரே அச்சில் வார்க்கப்பட்டு எல்லா அலுவல்களில் ஈடுபட வேண்டியது அவசியமா? இரண்டு கேள்விகளுக்கும் நுட்ப ஆராய்ச்சியாளர் "இல்லை" என்று ஒரே வார்த்தையில் பதில் கூறிவிடுவார்கள். இப்பகுதியில் தொடர்ச்சியாக பெண்களுக்குகந்த தொழில்கள் யாவை என்று ஆராய்வோம். என் கட்டுரையைப் படிக்கும் சகோதரிகள் தமது யோசனைகளையும் எழுதியனுப்பினால் எனது ஆராய்ச்சி பயனற்றதென்றறிந்து உளமகிழ்வேன்.

## கடை உதவியாளர்கள்

மேனாடுகளில் அநேகமாக எல்லாக் கடைகளிலும் விற்பனைக்கும், சரக்குகளை எடுத்துக் காட்டுவதற்கும் பெண்களே அதிகமாக உபயோகப்படுகிறார்கள். முக்கியமாக இல்லத்தின்

தேவைகளுக்குப் பெண்கள் சிறந்த விற்பனையாளர்களாக இருப்பார்களென்பதை ஒப்புக்கொள்வார்கள். கடைகளில் சாமான்கள் சேதமாகாமல் பார்த்துக்கொண்டு, வாடிக்கைக்காரர்களைத் திருப்தி செய்வதற்குப் பெண்கள் நிகரற்றவர்களாக இருப்பார்கள். பட்டினங்களில் வீட்டுச் சாமான்களையும் துணிமணிகளையும் வாங்க பெண்களே இப்பொழுது அதிகம் செல்கிறார்கள். அவர்களுடன் இனிமையாகப் பேசி நாணயமான விலைக்கு சுத்தமான சரக்கை விநியோகிக்க இளம்பெண்களை விட ஆண்களால் முடியாதென்று சொல்வதைத் தவறாகக் கருதமாட்டார்களென நினைக்கிறேன். அரசாங்கத்தார் பரீக்ஷார்த்தமாக கூட்டுறவுச்சங்க விற்பனை ஸ்தலங்களில் பெண்களை நியுமித்துப் பார்க்கலாம். தற்காலத்திலிருக்கும் பல ஊழல்களும் அதிருப்தியும் அகல்வது திண்ணம்.

பொறுப்பு வகிப்பதிலும் சிக்கனத்திலும் இனிய முகத்துடன் வரவேற்று இன்சொல் பேசி சரக்குகளை விற்பனை செய்வதிலும் பெண்கள் ஆண் மக்களுக்குச் சளைக்கமாட்டார்கள் பெரிய ஆங்கிலக் கம்பெனிகளில் ஆங்கிலோ இந்தியப் பெண்மணிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். நல்ல ஊதியமும் பெறுகின்றனர். மரியாதையோடு நடத்தப்படுகின்றனர். கடைகளுக்கு வரும் வாடிக்கைகாரர்களும் திருப்தியோடு செல்கின்றனர். வணக்கமாகவும் இனிமையாகவும் பேசி பொருள்களை நியாயமான விலைக்கு வாங்கும்படி கடைக்கு வருகிறவர்களை வற்புறுத்துவதில் அவர்கள் விசேஷ சாமர்த்தியத்தைக் காட்டுகின்றனர்.

மேனாடுகளில் கடை உதவியாளர் (shop-assistants) களுக்கென்று விசேஷப் பயிற்சிசாலைகளும், பரிட்சைகளும் யோக்கியதா பத்திரங்களும் உள. அத்தகைய பயிற்சிசாலையொன்றை நம் தமிழ் நாட்டிலும் நிறுவி பெண்மணிகளுக்கு வசதி ஏற்படுத்துகிறவர்கள் நாட்டிற்குப் பெருத்த நன்மையைச் செய்தவராவர் என்றால் மிகையாகாது.

இவ்வாறு பெண்களுக்கு வசதி ஏற்படுத்தினால் நம் நாட்டின் பேரியதோர் தீமையாகிய வரதட்சணை அரக்கனுக்குச் சாவுமணி தட்டியதே ஆகும். இப்பொழுது மாப்பிள்ளைகளுக்குக் கிராக்கி அதிகமாக இருப்பதால்தான்

கிரீடம் PURE ALUMINIUM THE CROWN முத்திரை

## பரிசுத்தமான அலுமினியத்திற்கு உத்தரவாதம்

கிரீட முத்திரை தரித்த அலுமினிய பாத்திரங்கள்தான் மிகவும் சிறந்தவை.

பார்வைக்குப் பளப்பளப்பாகவும், கையாளுவதற்கு சௌகரியமாகவும், சோப்பாலோ, மிருதுவான மண்ணாலோ, சாம்பலாலோ சுத்தம் செய்வதற்கு எளிதாகவும் அவை இருக்கின்றன.

அலுமினியம் குறைந்த எடையுள்ளதாலும், சீக்கிரம் சூடாவதாலும், ஈயம் பூசவேண்டிய அவசியம் இல்லாமையாலும், இவை மலிவாக இருக்கின்றன.

மனித சுகாதாரத்திற்கு கொஞ்சம்கூட கெடுதல் செய்யாதவை. மேலும் ஆகாரங்களின் தரத்தை உயர்ந்த நிலையில் வைத்திருக்கக் கூடியவை.

மற்றெல்லா கழிவுபட்ட உலோகங்களைவிட பழைய தேய்ந்துபோன அலுமினியம் அதிக விலைக்குப் போகிறது.

**எச்சரிக்கை:** மலிவான அலுமினியத்தைக் குறித்து உஷாராயிருங்கள். ஏனெனில் அது அசுத்தமாயிருப்பதுடன் சமையல் பாத்திரங்களுக்கு விரும்பத் தகாததாகவுமிருக்கிறது.

## ஜீவன்லால் (1929) லிமிடெட்

கீர்த்திவாய்ந்த "கிரௌன் பிராண்டு" அலுமினிய சாமான்கள் தயாரிப்பவர்கள்.

கல்கத்தா, பம்பாய், சென்னை, ராஜமன்றி, டில்லி, ஏடன், ரங்கூன்.

அந்த சரக்குக்கு 'கள்ள மார்க்கெட்' விலையாகிய வரதட்சணை கிடைக்கிறது. இதற்கு ஆதிகாரணம் பெண்ணாய்ப் பிறந்த ஒவ்வொருத்தியும் விவாகம் செய்துகொண்டேயாக வேண்டுமென்னும் ஓர் எழுதப்படா நிபந்தனை வழக்கத்திலிருப்பதேயாம். அந்த நிபந்தனைக்கு அஸ்திவாரம் பெண்கள் ஆண் மக்களின் பொருளாதார அடிமைகளாக இருப்பதுதான். ஆண்மகனுடன் சொத்தில் சமபங்கு கிடைத்துவிட்டதாலேயே பெண்களின் பொருளாதார நிலமை சீர்பட்டுவிடாது. பிதுரார்ஜித சொத்துள்ளவர்கள் மிகமிகச் சிலரேதான். பெரும்பாலோர் வாழ்க்கைக்கு ஆணின் உழைப்டையே ஆதாரமாகக் கொண்டுள்ளார்கள். பெண்களுக்கு நல்ல ஊதியம் கிடைக்கும் தொழில்கள் ஏற்பட்டால் அவர்கள் தமது வயிற்றுப் பிழைப்பிற்காக ஒருவனுடன் பிணைக்கப்படும் நிர்ப்பந்தம் இராது. அப்பொழுதுதான் உண்மையில் ஸ்திரீகளுக்குச் சம அந்தஸ்து கிடைத்ததாகும். சொத்துரிமையாலும், விவாக ரத்தாலும், சம்மத வயது உயர்வாலும் அவர்களுடைய பொருளாதார நிலை உயர்ந்து விடாது. ஏதோ ஒரு விஜயலட்சுமி பண்டிதர் அயல் நாட்டு தூதராவதாலும் ஒரு சரோஜினி கவர்னராகவும் பதவிவகித்தால் மட்டும் நாட்டின் 20 கோடி பெண்களின் வாழ்க்கை நிலை உயர்ந்து விடுமா? ஆண்மகன் சுய உழைப்பால் தன்னைக் காப்பாற்றிக் கொள்வதோடு ஒரு மனைவியையும் குடும்பத்யையும் இரட்சிக்க வேண்டுமென விதிகோலிய சமூகம் பெண்களை பொருளாதார அடிமைத் தளையில் மாட்டிவிட்டது. அத்தளையினின்றும் சுதந்திர இந்தியப் பெண்கள் விடுதலையடைய வேண்டுமானால் அவர்கள் ஆண்களுடன் அரசாங்க உத்தியோகங்களுக்கும், மற்றுமுள்ள பிரத்தியேகமான தொழில்களுக்கும் போட்டியிடுவதை விட்டு, நல்ல ஊதியத்தைக் கொடுத்து நாட்டின் செல்வத்தையும், பெருக்கும் வியாபாரத் துறைகளில் பணியாற்றுவதே சிறந்த முறை.

---

## தாழவைத்து வாழவைப்பவன்

ஆழக்கடல் குளித்து-ஆணிமுத்தெடுப்பது போல்
அருட்கடலில் நான் குளித்து-முருகனென்ற முத்தெடுத்தேன்
சூழநிற்கும் கள்வர் ஐவர்தட்டிப் பறிப்பாரோ
மாயப் பெருங்கள்ளி மயக்கி எடுத்தேகுவாளோ ?
பாழடிக்கும் ஆணவப்பேய் எடுத்து மறைத்திடுமோ
பாவி மனக்குரங்கு பல்லால் கடித்திடுமோ
தோழன் குமரேசன் துணையிருந்து என்னகத்தில்
துஷ்டர்கள் வாராமல் காவல் புரிவானோ ?
வேழ முகத்தான் இளையோன் வேலைக் கரத்தேந்தி
வேறொருவர் வாராமல் விழித்திருந்து காப்பானே
வாழவிடா வஞ்சகப்பேய் வந்து நுழையாது
ஏழை யுள்ளம் நீங்காது எம்பெருமான் இருப்பானே
தாழவைத்து வாழவைக்கும் தணிகைமலை நாதனிந்த
ஏழை யுள்ளம் நீங்காது என்றும் இருப்பானே
பேழைக்குள் பெரு நிதிபோல் பெருமான் முருகன் இந்த
பேதை மனதில் பெரும் பொருளாய் திகழ்வானே

—பிச்சின் தெளிவு—

---

## அட்டைப்படம்

சென்னையில் தண்ணீர் பஞ்சம். பணக்கார வீட்டுச் சிறுமிகள் இடுப்பில் குடமேந்தி அக்கம் பக்கத்து வீடுகளிலிருக்கும் கிணறுகளிலிருந்தும், கோயில் குளங்களிலிருந்தும் தண்ணீர் கொண்டு வருவது கண்களுக்குக் காட்சியாயிருக்கிறது.

# " வாழ்க்கை நிழல் "

(ஜி. வெங்கட்ராமன்)

[பேரறிவு படைத்த மானிடராகிய நாம் நம் எதிர்காலத்தில் நிகழக்கூடிய சம்பவங்களை முன்கூட்டியே அறிந்து, அதற்கேற்றாற் போல் நம் வாழ்க்கைப்படகை கஷ்டம், துக்கம், முதலிய அலைகளை எதிர்த்து ஓட்டவேண்டுமென்ற நோக்கம் கொண்டு ஸ்ரீ காளிதாஸர், வராகமிகிராசிரியர் முதலியோர் ஜோதிடம் என்னும் அரிய நூலை இயற்றி நமக்கு அளித்துள்ளனர்.

இது நாம் முன் செய்த நன்மை தீவினையை அனுசரித்து நம் வாழ்க்கையுடன் நிழல்போல தொடர்ந்து வருவதால் இதை "வாழ்க்கை நிழல்" என்று கூறலாம்.

ஜாதகத்தின் தன்மையை நன்கு ஆராய்ந்து பலத்தைச் சொல்லக்கூடிய ஜோதிட நிபுணர்கள் இல்லாமையாலும் ராசிகளின் நாழிகைகளைக்கூட புத்தக உதவியின்றி சொல்ல இயலாத போலி ஜோதிடர்களின் கும்பல் அதிகமாகிவிட்டதாலும், ஜோதிட சாஸ்திரத்தின் மதிப்பு சீரழிந்துக் கொண்டிருக்கிறது.

ஒவ்வொருவருக்கும் ஜோதிடத்தில் சிறிதளவாவது பயிற்சி அளித்து போலி ஜோதிடர்களை முறியடித்து அதற்கு உரிய மதிப்பை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன், ஒவ்வொருவரும் எளிதில் புரிந்துக்கொள்ளக்கூடிய வகையில் ஜோதிட சாஸ்திரக் கட்டுரைகளைத் தொடர்ச்சியாக வெளியிடப்படும்.]

ஜாதகப்பலன்களை அறிய முதலில் ஜாதகம் வேண்டுமாதலால் ஜாதகம் கணிக்கும் விதத்தை முதலில் ஆராய்வோம்.

ஒரு தினத்தை அதாவது 60 நாழிகையை மேஷம் முதலிய 12 ராசிகளுக்கும் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஷை ராசிகளின் நாழிகைகளை ஒவ்வொரு தேசத்திற்கும், ஒவ்வொரு விதமாய்ப் பிரிக்கப்பட்டிருக்கிறது. நம் தமிழ் நாட்டிற்குப் கீழ்கண்டவாறு ராசிகளின் நாழிகைகளை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது.

| ராசிகளின் பெயர். | | ராசிகளின் நாழிகை. | விநாழிகை |
|---|---|---|---|
| மேஷம், மீனம் | ,, | 4. | 15 |
| விருஷபம், கும்பம் | ,, | 4. | 45 |
| மிதுனம், மகரம் | ,, | 5. | 15 |
| கடகம், தனுசு | ,, | 5. | 30 |
| சிம்மம், விருச்சிகம் | ,, | 5. | 15 |
| கன்னி, துலாம் | ,, | 5. | 0 |

சூரியன் சித்திரை மாதத்தில் மேஷத்திலும், வைகாசியில் விருஷபத்திலும், ஆனியில் மிதுனத்திலும், ஆடியில் கடகத்திலும், ஆவணியில் சிம்மத்திலும், புரட்டாசியில் கன்னியிலும், ஐப்பசியில் துலாமிலும், கார்த்திகையில் விருச்சிகத்திலும், மார்கழியில் தனுசிலும், தையில் மகரத்திலும், மாசியில் கும்பத்திலும், பங்குனியில் மீனத்திலும் உதயமாகிருன்.

நாம் எந்த மாதத்தில் லக்னம் கண்டுபிடிக்க வேண்டுமோ, அந்த மாதத்தில் சூரியன் உதயமாகும் ராசிகளின் நாழிகைகளை, நமக்குத் தேவையான தேதிக்கு முன் தேதியைக் கொணடு பெருக்கி, அதை இருமடங்காக்கி, அதை 60ல் வகுத்தால் ஈவு நமக்கு வேண்டிய தினத்தன்று அந்த ராசியில் கழிந்த நாழிகையாகும்.

சூரியன் உதயமாகும் ராசிகளின் நாழிகைகளில் கழிந்த நாழிகைகளைக் கழித்தால் மீதி அன்றைய தினத்தில் அந்த ராசியின் இருப்பு நாழிகையாகும். இந்த இருப்பு நாழிகைகளுடன் வரிசைக் கிரமமாக ராசிகளின் நாழிகைகளைச் சேர்த்துக்கொண்டு வந்தால் நமக்குத் தேவையான நேரத்தில் எந்த ராசி நிகழ்ந்துகொண்டிருக்கிறதோ அந்த ராசிதான் லக்னமாகும்.

உதாரணம்: 1949ம் வருஷம் மார்ச்சு மாதம் முதல் தேதி (சர்வதாரி வருஷம் மாசிமாதம் 18ம் தேதி) செவ்வாய்க்கிழமை பகல் 11. 00. மணிக்கு ($12\frac{1}{2}$ நாழிகைக்கு) ஓர் குழந்தை பிறந்திருக்குமாயின் அதற்கு லக்னம் கண்டு பிடிப்போம்.

மாசி மாதத்தில் கும்பராசியில் சூரியன் உதயமாவதால் அந்த ராசியின் நாழிகைகளான 4-45-ஐ, நமக்குத் தேவையான தேதிக்கு முன் தேதியாகிய 17க் கொண்டு பெருக்கி ($4\text{-}45 \times 17 = 80.\ 45$) இதை இரு மடங்காக்கி ($80.\ 45 \times 2 = 161 \times 30$) 60ல் வகுத்தால் ஈவு ($161.\ 30 \div 60$) $= 2.\ 41\frac{1}{2}$ வருகிறது; அதாவது மாசி மாதம் 17ம் தேதியன்று கும்பராசியில் $2.\ 41\frac{1}{2}$ நாழிகை கழிந்து விடுதால், கும்ப ராசியில் இருப்பு ($4.\ 45 - 2.\ 41\frac{1}{2} =$) $2.\ 3\frac{1}{2}$ நாழிகையாகும்.

| | |
|---|---|
| கும்பராசியில் இருப்பு | $= 2.\ 3\frac{1}{2}$ நாழிகை |
| மீனம் | $= 4.\ 15$ ,, |
| மேஷம் | $= 4.\ 15$ ,, |
| | $= 10.\ 33\frac{1}{2}$ ,, |
| விருஷபம் | $= 4.\ 45$ ,, |
| | $15.\ 18\frac{1}{2}$ ,, |

$10.\ 33\frac{1}{2}$ நாழிகை முதல் $15.\ 18\frac{1}{2}$ நாழிகை வரை விருஷபலக்னம் நடப்பதாலும், ஜனனம் $12\frac{1}{2}$ நாழிகைக்கு ஆனதாலும் ஜன்ம லக்னம விருஷடம்.

(தொடரும்)

# ஏக்கமேன் ?

(ஸ்ரீமதி பாலாம்பிகை)

மாலைக் காலம் மலைப்பாறையொன்றின்மேல் உலகத்தையே மறந்து உட்கார்ந்துக்கொண்டிருக்கிறாள் ஒரு மாது. கோலத்தைப் பார்த்தால் உயர்ந்த செல்வாக்கிலுள்ளவள் போல் தோன்றுகிறது. அவள் காலடியிலோடும் அருவிநீர் மஞ்சள் வெயிலால் பொன்னையுருக்கி வார்த்தது போல் பிரகாசிக்கின்றது. அவளால் கைக்குழந்தை போல் வளர்க்கப்பட்ட மான் கன்று, தன் தலைவி தன்னைக் கவனியாததைக்கண்டு, ஏக்கத்துடன் அவள் முகத்தையே பார்த்துக்கொண்டு நிற்கிறது. அவளோ, மானையும் பார்க்கவில்லை. மனதைக் கவர்ந்திழுக்கும் சூழ்நிலையையும் நோக்கவில்லை. கவலையிலாழ்ந்து கற்சிலை போலமர்ந்திருக்கிறாள்.

அவள் கணவன் அம்மலை நாட்டையாளும் சிற்றரசன். சேரனது ஆட்சிக்குட்பட்டது அம்மலைநாடு. சேரனுக்குப், பாண்டியனுக்கும் போர் மூண்டது. அரசனுக்குதவியாகச் சென்றான் அவள் கணவன். சீக்கிரத்தில் திரும்பி வருகிறேனென்று சென்றவன், நாள்களும் வாரங்களும் கடந்து, மாதங்களிரண்டாகியும் வரவில்லை. சென்றவன் வென்றுமீள்வானோ, அன்றி மாள்வானோ வென்ற கவலை தலைவியின் நெஞ்சைப் பிடித்தழுத்துகிறது. தோழிகளோடு பேசவும் தோன்றவில்லை. தனிமையை விரும்பி மலைச்சாரலுக்கு வந்தாள். அப்பாறையைக்கண்டு அதிலுட்கார்ந்தாள்.

அவள் அந்தரங்கத்தோழி, அந்தப்புரத்தில் அரசியைக் காணாததால், அருவிக்கரைக்கு வந்தாள். செயலற்றுட்கார்ந்திருக்கும், தலைவியைக்கண்டாள். அவள் எதிரில் சென்று நின்றாள். சிந்தனையினால் சித்திரப்பாவைபோலிருந்த தலைவி அவள் வந்ததை உணரவில்லை. அவள் கவலையென்னவென்பதையறிந்த தோழி, இந்நிலையில், இவளை விடுவது பிசகு. யாரையாவது போர்களத்துக்கனுப்பி வேந்தனைப் பற்றிய தகவல்களை விசாரித்து வரச்சொல்லவேண்டும்; என்று நினைத்தாள். கையிலிருந்த பொற்குடத்தைக் கீழே வைத்தாள். பக்கத்

தூருக்குச் சென்று, அங்கு தன் உறவினனாகிய சிறுவனொருவனை வஞ்சிநகரத்திற்குச் சென்று போரின் நிலைமையை விசாரித்துவரும்படியனுப்பினாள். அரசனைப்பற்றிய நகவலொன்றும் தெரியவில்லை. அரசியோ, கவலையால் உருகி, வெளுத்து எலும்புக்கூடானாள். அரசன் சௌக்கியமாய்வந்து சேரவேண்டுமே என்று நினைத்துக்கொண்டே திரும்பிவந்தாள் தோழி. வழியில் ஒரு இடைச்சேரி குறுக்கிட்டது. அங்கு வசிக்கும் இடைச்சேரியில் சிலர் நினைத்த காரியம் நிறைவேறுதற்காக, முல்லைமலரையும், நெல்லையும் தூவி சகுனம் பார்த்துக்கொண்டிருந்தனர். அதே சமயத்தில், அருகிலிருந்த குடிசை வாயிலில், தாய்வரவுக்காக ஏங்கி நிற்கும் இளங்கன்றைக் கண்டு இடைப்பெண்ணொருத்தி, அன்புடன் அதன் கழுத்தைக்கட்டிக்கொண்டு "என்செல்வமே! அம்மா வரவில்லையே என்ற கவலையா? இதோ அரை நொடியில் வந்துவிடுவாள்" என்றாள். இந்நற்சொல்லைக் கேட்ட தோழி ஓடோடியும் சென்று, தலைவியெதிரே நின்றாள். அப்பொழுதும் இவள் வந்ததைத் தலைவியறியவில்லை. அவளருகில் சென்று கையை மெல்லப் பிடித்தாள். அப்பொழுதுதான் உறக்கத்தினின்றும் விழித்தெழுந்தது போல் திடுக்கிட்டெழுந்தாள் தலைவி.

தோழி அவள் கையைப் பிடித்துட்காரவைத்துத் தானும் அருகிலுட்கார்ந்து, "அன்னாய்! வருந்தாதே; அரசர் சீக்கிரத்தில் வந்து விடுவார். இப்பொழுதுதான் வஞ்சிமா நகருக்குச் சென்று நிலைமையறிந்துவரும்படி ஆளனுப்பிவிட்டுவந்தேன், வரும் வழியில் நற்சகுனமாயிற்று" என்றுதான் கண்டதையும் கேட்டதையும் கூறிக்கொண்டிருக்கும் சமயத்தில், குதிரையின் காலடிச் சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்தே வெற்றிச் சங்கினொலி கேட்டது. உற்றுப் பார்த்தாள் தேரில் அரசன் வந்து கொண்டிருப்பதைக் கண்டாள். தலைவி "அதோ வந்துவிட்டார்" என்று துள்ளியெழுந்தாள். அரண்மனைக்கு ஓடிச்சென்றாள். அதற்குள் அரசனையும் கண்டாள். பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமா?

---

# கன்னித்தாய்

(மெட்டு ; சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா)

ராகம் ஹுஸேனி] [தாளம் ஏகம்

கண்ணிகள்

1. ஆதி பராசக்தி அவள்திரு
நாமத்தை பாடிடுவோம்
ஜோதி நிலையுடையாள் கன்னித்தாய்
பாதத்தை நாடிடுவோம்.

2. வேதனும் படைப்பதில் அதைப்பரி
பாலிப்பதில் மாயனும்
வதைப்பதில் ஹரனும் கன்னித்தாய்
வேதத்திற் கெட்டாதவள்.

3. காலையிற் செங்கதிராம் உச்சி
வேளையில் வெண்கதிராம்
மாலையில் பொன்கதிராம் கன்னித்தாய்
நீல வானத்தினிடை.

4. தண்கதிர் சந்திரனும் வெகுண்டோடும்
அந்தகாரப் பொழுதில்
கண்கள் சிமிட்டுதல்போல் கன்னித்தாய்
விண்மீன் தானேயானுள்.

5. இன்ப துன்பமெல்லா அவள் செய்யும்
இந்திர ஜாலமடி
அன்பென்னும் பாசங்கொண்டால் கன்னித்தாய்
சொன்னபடி கேட்பாள்.

6. மாயைத்திறை மறவில் ஆணும்பெண்ணும்
ஆறும் முன்றுமாவாள்
நீயே கதியென்றுல் கன்னித்தாய்
தாயுருவாகி நிற்பாள்.

—சாது ஸ்ரீ முருகதாஸ்.

# அழகு

(ஸ்ரீ திருப்புகழ்மணி)

சூரபத்மனின் தசை அவனைக்கொன்ற முருகன் வேலின் கூர்மையில் ஏறிக்கொண்டிருக்கின்றதாம். வேலோ பராசக்தியின் கண்ணில ஏறி நடனம் புரிகின்றதாம். பராசக்தியோ தன் ஸ்வயப்பிரகாசத்தோடு பரமசிவனுடைய ஒரு பாகத்தில் ஏறி ஜ்வலிக்கின்றாளாம். பரமசிவனோ ஓர் விடையின் மேல் ஏறி விளங்குகின்றாராம். திருநீறானது பரமசிவன் மேல் ஏறி ஒளிர்கின்றதாம். திருநீற்றின் மேலே அழகு எனும் ஓர் தத்துவம் ஏறி விளையாடுகின்றதாம். ஆ! அழகுக்கு என்ன ஏற்றம் கற்பித்து விட்டார் ஸ்ரீ ஞானசம்பந்தமூர்த்தி. தேவாரம் பாடிய பெரியோர் 'அழகே' என்றழைப்பர் ஸர்வேஸ்வரனை. ஏற்றத்தின் ஏற்றம் அழகின் ஏற்றம். அழகே தெய்வம்! தெய்வம் அழகே! இதனாலல்லவோ மேல்நாட்டு ஞானிகள் கூட (God is Beauty) ஆண்டவன் அழகாய் இருக்கின்றார் என்று உபதேசித்துள்ளார்கள்.

ராமர்

தெய்வமே மானிட உருவமாய் தோன்றின், அழகெனும் பண்பு எவ்வாறு காணப்படும் என்று சற்று உணரவேண்டும். ஸ்ரீ ராமாவதாரத்தின் வடிவை கம்பர் சித்தரிக்கின்றார். மேகம் போல் கறுத்த நிறம். நீலவண்ணமாய் இருப்பது அழகுக்குக் குறைவு என்று நினைப்பது தவறு. இராமன் அழகை, சீதா கல்யாண சமயத்தில் விதேக தேசத்தில் எல்லோரும் பார்த்தார்களாம். கட்டழகனும். அழகான உறுப்புக்களால் அழகாக கட்டப்பட்ட அழகான சரீரமாம். "தோள்கண்டார் தோளே கண்டார்", "தொடுகழல் கமலம் அன்ன தாள் கண்டார் தாளே கண்டார்", "தடக்கை கண்டாரு மஃதே", வாள்போலும் கூர்மையான பார்வையும், பிளந்து நோக்கும் ஆற்றலுமுடைய தாய்மார்கள் கூட வடிவினை முடியக் காணவில்லையாம்.

"வாள்கொண்ட கண்ணார் யாரே வடிவினை முடியக் கண்டார்". அவரவர்கள் கண்ட உருப்பின் அழகே அழகு என்று அதை புலம்பிக் கொண்டிருந்தமையால் "ஊழ் கொண்ட சமயத்தன்னான் உருவு கண்டாரை ஒத்தார்" என்

றூர் கம்பர். தெய்வம் (ப்ரம்மம்) எப்படி எங்கும் நிறைந்திருக்கின்றதோ, அப்படி அழகு எனும் தத்துவம் எங்கும் நிறைந்து நிற்கின்றது. எங்கு தெய்வம் காணப்படுகின்றதோ அங்கு அழகும் காணப்படும். அழகைக் காண ஆற்றல் வேண்டும். பல இடங்களில் அழகு மறைபொருளாய் விளங்கும். உருவத்தில் அருவாய் விளங்கும். செய்கையில் சேவையாய் விளங்கும். குணத்தில் அன்பதாய் விளங்கும். சொல்லில் இனிமையாய் விளங்கும். அறிவினில் தெளிவாய் இலங்கும். மனத்தில் செம்மையாய் இலங்கும். பண்ணில் இசையாய் பாடலின் பொருளாய் எங்கும் நிறைந்த சோபையாய் மானிட அறிவுக்குக் கரைகாணாத தத்துவமாய் ஒளிருவது அழகு. ஸ்ரீ ராமர், ஸ்ரீ கிருஷ்ணன், ஸ்ரீ முருகன் இவர்கள் அவதாரக் காரணமாக அழகு போட்டி ஒன்று ஏற்பட்டு விட்டதாம். இந்த தெய்வ ரூபங்கள் அழகுக்கு ஓர் முத்திரையாகவே நின்று விட்டனவாம். கம்பர் சொல்வதைப் பாருங்கள். ராமன் யார்? அவர் லக்ஷணமும் எப்படியோ?

> தேறினன், அமரர்க்கெல்லாம் தேவராம் தேவர்தாமே!
> மாறி இப்பிறப்பில் வந்தார் மானிடராக மன்னோ!
> ஆறு கொள் சடிலத்தானும் அயனும் என்றிவர்கள் ஆகி
> வேறுள குழுவை யெல்லாம் மானுடம் வென்றதம்மா !

தெய்வம் அவதாரம் செய்ததால், மானிட அழகு எல்லா உலக அழகினையும் வென்றது. ப்ரம்மத்தின் அழகே ஓர் உருவாய்த்திரண்டு, மானிட ரூபமாய் அவதரித்த அந்த ராமனைக் காணாத கண்கள் மரங்களே, கண்ணல்ல வென்றும், கண்ட கண்ணுடையார்களே, கண்ணுள்ளார் என்றும் அநுமான் கூறியதை மனத்தில் வைப்போம். வெளிக் கண்ணால் பார்க்க முடியாத ராமனை இன்றும் எப்போதும் அகக் கண்ணால் பார்க்கலாம்.

> மண்ணுளார் விண்ணுளார் மாறுளார் வேறுளார்
> எண்ணுளார் திசையுளார் இயலுளார் இசையுளார்
> கண்ணுளார் ஆயினர் பகையுளார் கழிநெடும்
> புண்ணுளார் ஆருயிர்க்கமுதே போலுளார்.

உருவம் மாத்திரமா அழகு! நடை, உடை, பாவனை, செயல், தியாகம், நட்பு, கோபம், குற்றம் எல்லாம் அழகாய் அமர்ந்ததை உணரலாம்.

மானிடத்தை தெய்வீகத்தினின்றும் பிரித்து வரம்புகள் கட்டி ராமனை மானிடமா? தெய்வமா? என்று கேள்வி ஆராய்ச்சிகள் நடத்தி துணிபுகளை தீர்மானிக்கின்றார்கள் சிலர். மானிடம் தெய்வ லக்ஷணங்களை அடையலாம். "நானும் நீயும் ஒன்றானல் நவிலத்தகுமோ பேரின்பம்!" தெய்வமும் மானிடனாய் அவதரிக்கக் கண்டோம். மானிடமும் தெய்வத் தன்மையும், எங்கும் நிறைந்த ஒரு தத்துவத்தின் இரண்டு கோடிகள் (Poles) எனக்கருதுதல் வேண்டும்.

இவ்விரண்டையும் பிணைக்கும் அன்பு மானிடத்தின் இன்றியமையாத செல்வம். அழியாதது; குன்றாதது. அதைக் கொண்டு மானிடன் தெய்வத்தின் அழகையெலாம் பெற்றிட லாம். அவதாரத்தின் ஒரு கருத்து இதை உபதேசிப்பது அன்றோ?

நமது மனம் அழகானல் உலகெலாம் அழகாகும். அழ கற்ற உலகம் அருளற்ற நரகம், அன்பற்ற பாலைவனம் அன்றோ? பாலைவனத்தை நந்தவனமாக்கி, ப்ருந்தாவனமாக்கி, கோகுலத்தில் ஆயர்ப்பாடி போலும், யாலும் தேனும் பொங்கும் வான நாடாகச் செய்ய, அன்பு செயல் வேண்டும், அழகனைத் தொழல் வேண்டும்.

கண்ணன்

மற்றொரு அழகன் கண்ணன். அவன் அழகுக்கு ஒரு முத்திரை "சௌந்தர்ய முத்ராமணி". கையில் குழல். வானின்றிழிந்து வந்த குறிகாட்டும் தன் வண்ணம் நீலம். அன் பெனும் பால் வளர்க்க வந்த கருத்தின் படியே ஆயர்ப்பாடி வளர்ப்புத்தலம்.

> மண்டலம் நிறைந்த திங்கள் வதனமும் கமலக் கண்ணும்
> குண்டலம் சுடரும் காதும் குறுநகைப்பவளவாயும்
> தண்டுழாய் அலங்கல் மார்பும் தடக்கையோரிரண்டுமாகக்
> கண்டனர் மறையுங்காணுக் கரியவன் உருவமம்மா!

அழகிய உருவம். அழகிய குழல். அழகிய நடனம். குழலோ சையால் நற்பசுக்களை, (மக்களை) அழைத்துக் காத்து, நடனத் தால் காலத்தை வென்றளந்து தீயவைக்காய்த்து, அன்பர்க் காளான அழகே! சரண் சரண்!

முருகன்

மற்றுமொரு அழகன், கண்ணன் மருகன் முருகன்.

கமல மடமங்கை வதனத்தழகு காண்பள் லெக்ஷ்மி முருகன் முகத்தழகை போற்றுகின்றாளாம். ஏனோ?

அலங்கார முடிக்கிரண திரண்டாறு முகத்தழகிற்கு
அசைந்து ஆடும் குழை கவசதிரள் தோளும்—
அலர்தா மணித்திரளை புரண்டாட நிறைத்தகர,
தணிந்தாழி வளை கடக சுடர் வேலும்
சிலம்போடு மணிச்சுருதி சலங்கோசை மிகுத்ததிர
சிவந்தேறி மணத்தமலர் புனைபாதம்
திமிந்தோதி திமித்திமிதி தனத்தான தனத்தனன
தினந்தோறும் நடிப்பதுமற் புகல்வேனோ!

என்பர் அருணகிரியார் திருப்புகழில். ஆறுமுகமாம். ஒவ்வொன்றும் ஒரு பூர்ணசந்திரனும்! ஞான சொரூபமாய் விளங்குகின்றன. மேலே மணிகள் இழைத்தக் கிரீடங்களாம்! கையில் கொத்து கொத்தாக மணித்திரள்களால் கட்டப் பட்ட மாலைகள் அலங்காரம். வடிவேல் ஏந்தியகரம். வேதமொழி பேசும் சலங்கைகள். உலகுக்கு ரக்ஷகமாய் நிற்கும் தாள்கள். திருமேனி சுடர் போலும் "உடையழகு முதுஞான சொரூபகிரியிடமேவும் முகமாறும்". தேவர்களால் அலங்கரிக்கப்பட்ட மாலைகளில் வண்டுகள் ஹ்ரீம் ஹ்ரீமென்று சப்திக்கின்ற அழகு. பவளம் போல் உதடுகள், மழலைச் சொல் மழை பொழியும் செவ்வாய். வேதமே வாக்கானதால், வேத வாசனை அடிக்கின்றதாம் "துகிரிதழின் மொழிவேத மணம் வீச" என்றார் அருணகிரி. செவ்வான நடன ஸ்வரூபமாய் விளங்கும் முருகன் சிவந்த கிரணங்களால் சுற்றிலும் பிரகாசத்தைப் பொழிகின்றானும். ஓங்காரப் பொருள் தானென உபதேசிப்பது போலும்! ஆடிய மயில் மேல் ஆரோகணமாம். இந்த ரூப அழகு, ஒலியழகு, வண்ண அழகு, பேச்சழகு, மண அழகு, அன்பழகு, அருளழகு இவற்றைக்கண்ட தேவர்கள் கரைகின்றார்களாம்.

கமலமடமங்கை வதனத்தழகுகாண் பளக்
காரியமுகில் வண்ணனுஞ் செங்
கண்ணழகு காண்பன் வளர்கலை வாணிசொல்லழகு
காண்பன் முக்கண் தாதையும்
விமலமுறு சொற்பொருளினழகு காண்பன் விதி
வியன் கரத்தழகு காண்பான்

வீறு தோளழகிந்திராணி காண்பாளும் பர்
வேந்து வேலழகு காண்பா
னிமல மன வடியரடியழகு காண்பார் கவுரி
யின்று யின்னழகு காணபா
ணின்னுெத்த வாதித்தன் வடிவழகு காண்பனொரு
நீயு மவரோடு குழுமியே
யமல மென்னகையழகு காணலாஞ்சமயமீ
தம்புலீ யாடவாவே
யம்புய தடங்குலவு கம்பைவளர் கந்தனு-
னம்புலி யாடவாவே.

(பிள்ளைத் தமிழ்)

அழகே முருகனாய் அவதரித்த நேர்மையை அருணகிரி வியந்துரைப்பார் :—

எழுதரிய அறு முகமும் மணிநுதலும்
வயிரமிடையிட்டுச் சமைந்த செஞ்சுட்டி கலன்களும்
துங்கநீள் பன்னிரு கருணை விழிமலரும் இலகு பதினிரு
குழையும் ரத்னக் குதம்பையும் பத்மக் கரங்களும்
செம்பொன்னூலும் மொழிபுகழுமுடை மணியும்
அரைவடமும் அடியிணையும் முத்தச் சதங்கையும்
சித்ரசிகண்டியும் செங்கை வேலும்
முழுதுமழகிய குமரா கிரி குமரியுடனுருகும்
முக்கட் சிவன் பெறும் சத்புத்ரா உம்பர் தம்பிரானே!

ஆகவே தெய்வ உருவங்கள் எல்லாம் ஒவ்வொரு வகையான அழகின் ரூபங்கள். அன்பர் உள்ளத்தில் தித்திக்கும் உணர்ச்சியில் பாய்ந்து உருக்கும் தன்மை உடையது. அழகே உயிர், அழகே உடல், அழகே உணர்ச்சி, அழகே உலகம், அழகே தெய்வம் இவை யறியாது, தன்னைத் துன்புறுத்தி பிறரையும் துன்புறுத்தப்படும் மானிட அறிவின்மையே அழகிலா தொழிந்தது. அழகின் அறிவால் அறிவின்மை ஒழியும். கந்தப் புராண ஆசிரியர் ஸ்ரீ கச்சியப்ப சிவாச்சாரியார் முருகன் கழலழகை வர்ணிக்கின்றார்.

ஆயிர கோடிகாமர் அழகெலாம் திரண்டு ஒன்றாகி
மேயின எனினும் செவ்வேள் விமலமாம் சரணந்தன்னில்
தூயநல் எழிலுக்காற்றாதென்றிடில் இனைய தொல்லோன்
மாயிரு வடிவிற்கெல்லாம் உவமை யார் வகுக்க வல்லார்?

# ஆனந்தாஸ்ரமம்

(சாது ஸ்ரீ முருகதாஸ்)

இவ்வுலகில் ஞானிகளாலும், பதிவிரதா சக்திகளாலும் காப்பாற்றப்படும் சத்தியத்தால்தான், நாம் உண்டு உறங்கி, உடுத்து, உலாவ, மழை முதலிய இயற்கைகள் உதவுகிறது என்பதை மறந்து விடக்கூடாது! ஞானிகள் ஏழைக்கும் பணக்காரனுக்கும் தகுந்தபடி மாறி மாறி நடக்கும் பொம்மையோ சுயநலக்காரனோ அல்ல. எல்லா சமயத்திலும் ஆண்டவன் வடிவங்களான உலகுக்குள்ள குறைவுகளை தாங்கள் பெற்றுள்ள நிறைவால் நீக்கி சமத்துவமாக அன்பு மதத்தில் வாழ வைப்பதற்காகவே உள்ளவர்கள்.

ஞானிகள், பக்தர்கள், மகாத்மாக்கள் என்ற பெயரெல்லாம் ஆயிரமாயிரங் காலங்கள் செய்த சுயநல மற்ற தியாகத்தால் உள்ளமெல்லாம் தாய்மையால் நிறையப் பட்டவர்களுக்குச் சூட்டப்படும் அடைமொழிகள்.

பெரியவர்கள் பல கொடிய சோதனைகளை எல்லாம் கடந்தவர்கள். தியாக புருஷர்கள் என்பதால் அவர்கள் கடின சித்தர்கள் அல்லது சுயநலப் புலிகள் அல்ல. சன்னியாசியானாலும் உள்ளம் கனிவு உள்ளதுதான். அவர்கள் ஓர் சிறு அணுவளவுள்ள ஜீவனுக்கும் கஷ்டம் வரச சகிக்கமாட்டார்கள். உலக உயிர்களையெல்லாம் தன்னுயிராக நேசிப்பவர்கள். யாருக்கும் எப்பொழுதும் சந்தேகத்தையோ இடையூறுகளையோ கிளப்பாத முறையில் செய்கைகளை உணர்ந்து செய்பவர்கள். பாஞ்சாலி சபதத்தை பாடவந்த ஸ்ரீ பாரதி திருதிராஷ்டிரன் தன் கொடிய மகனுக்கு உண்மை தெளிந்தவர்களைப்பற்றி

நானெனும் (ஆ)ணவந்தள்ளலும் இந்த
ஞாலத்தைத் தானெனக் கொள்ளலும் பர
மோன நிலையில் நடத்தலும் ஒரு
மூவகைக் காலம் கடத்தலும் நடு
வான கருமங்கள் செய்தலும் உயிர்

யாவிற்கும் நல்லருள் பெய்தலும் பிறர்
ஊனைச் சிதைத்திடும் போதிலும் தனது
உள்ளம் அருளி நெகுத்தலும்,

என்று சொல்லுகிறார்.

"எவ்வளவு கொடிய நிலைமை வரினும் மக்கள் அஞ்சாது ஒழுக்கம், சத்தியம், கலாசாரம், அன்பு, சேவை, தியாகம் ஆகியவை குன்றாது பின்பற்றி தங்களுக்கும் நாட்டிற்கும குறைவற்ற அமைதி ஏற்படப் பாடுபட வேண்டும்" என்பதை உணர்ந்த மேற்சொன்ன தாய்மை சக்திகளான ஞானிகள் தாங்கள் ஆயிரங்கால முயற்சியால் பெற்ற அமைதியை ஓர் நிலையில் நின்று மக்களுக்கு உபதேசித்து அதன்படி அவர்களை நடக்கப் பார்த்து குறைதிருத்தி, வாழவைக்க ஏற்படுத்தும் பொது இடமே ஆஸ்ரமங்கள். இங்கு ஜாதிக்கட்டுப்பாடோ, மத உணர்ச்சியோ, உயர்வு தாழ்வோ வர நியாயமே இல்லை. அப்படி ஏதாவது இருப்பின் அது ஆ! ஸ்ரமத்தில் (மிகவும் கஷ்டத்தில்) தான் கொண்டு விடும்.

இப்படிப்பட்ட ஞானியரால் சேவையையே நோக்கமாகக் கொண்டு ஆரம்பம் செய்யப்பட்ட ஆஸ்ரமங்களில் ஒன்றுதான் ஆனந்தாஸ்ரமம். அதைப்பற்றிச் சென்ற குங்கும திலகங்களில் விவரித்தோம. இப்புனித ஆஸ்ரமத்தில் விளங்கும் தாயின் தாய்மையைப் பற்றிக் கவனிப்போம்.

ஆஸ்ரமத்திற்கு இடப்பக்கமாக உள்ள மலையின் மத்திய பாகத்திலுள்ள குகையிலும் ஆஸ்ரமத்திலுமாக 6 மாத காலம் தங்கியிருந்தபொழுது நடந்த ஓர் சம்பவம்.

ஆஸ்ரமத்தில் பல கட்டடங்கள் உண்டு. அவற்றில் யாத்திரை வாசிகளான சாதுக்களுக்கெனத் தனிமையும் இனிமையும் நிறைந்த கட்டடம் ஒன்று குரு தேவர் சமாதி (ராமதாஸரின் குருவான அவர் தந்தையினுடையது) க்கு எதிர் புறமாக அமைக்கப்பட்டுள்ளது. காவலாளி சாதுக்களை அவ்விடம் கொண்டு வந்து விடுவான். அவர்களும் பஜனையில் கலந்து கொள்ளலாம்.

அவர்களுக்கும் எவ்வித வித்தியாசமுமின்றி ஆகாரங்கள் வழங்கப்படும். சாதுக்கள் ஆரோக்கியமான உணவு அதிகப்படியாக உண்டு வீணில் சோம்பலுக்கிடம் கொடுத்து விடக்கூடாதென்று மூன்று நாட்கள் வரை தங்கலாம் என ஒரு நிபந்தனையுள்ளது. அவர்கள் மூன்று நாட்களுக்கு மேல் தங்கும்படி நேரிடுமாயின் தேக நலன்களை கவனித்துத் தங்கும்படி அனுமதிக்கப்படுவார்கள்.

ஓர் சாது தன் பத்தினியையும் ஓர் பிள்ளையையும் அழைத்துக்கொண்டு தள்ளாடித் தள்ளாடி ஆஸ்ரமத்திற்கு வந்து சேர்ந்தார். நாட்கள் மூன்றும் நான்கும் கழிந்தன. சாதுவும் குடும்பமும் போகவில்லை. விசாரித்ததில் சாது நடக்க முடியாது கால் வீங்கிப் படுத்திருப்பதாக அறிந்து கொண்டோம். அச்சாது குணமாகும் வரை இருக்கலாமென தாயும் குருநாதரும் சொல்லியிருந்ததும் தெரிந்தது.

நாளுக்கு நாள் கால் வீக்கம் அதிகரித்தது. டாக்டர் வந்து மருந்து உள்ளும் புறமும் கொடுத்துப் போனார். மருந்து குணம் தரவில்லை. மேலும் நகரவும் சக்தியின்றி அவன் வருத்தப் பட்டான். அச்சாதுவை கவனித்துக் கொள்ள பிரத்யேக ஆள் போடப்பட்டது. அவனுக்கும் சாதுவை தொடக்கூட அருவையாயிருந்தது. தாயே அவனுக்கு சில சமயம் வேலையாள் செய்ய வெறுத்த பணியை செய்வதைக் கண்டோம். சில அன்பர்களுடன் அங்கேயே தங்கி சேவையை செய்ய முற்பட்டோம். சாது விடும் மூச்சின் சப்தம் அக்கட்டிடத்திலுள்ள மற்ற சாதுக்களை நடுங்கி ஓடவைத்து விட்டது. ஸ்மரணை (நினைவு) போய்விட்டது. தாய் பலதரம் அவரை வந்து கண்டு போவாள். மறுநாள் ஆஸ்ரமத்தில் குருநாதரின் பிறந்த தினவிழா. அன்பர்கள் எல்லோரும் கூடி ஞானிகளின் மகிமையைப் பேசி மகிழ்ந்தார்கள். அன்று ராமதாஸகுருவும் கிருஷ்ணபாய் அன்னையும் சாதுவிடம் போனார்கள். பலநாள் மூடிக்கிடந்த சாதுவின் விழிகள் திறந்து கண்ணீர் பெருகிற்று. தாய் அவர் தலையில் கைவைத்து வாயில் தண்ணீர் விட்டாள். கருணை பொங்கும் குருநாதர் விழி அவனை அணைத்துக் கொண்

டது. பின் உடம்பு சடலமாய் விட்டது. அவன் பாக்கிய மே பாக்கியம்! ஒருவருக்கும் தெரியாது அவனை அடக்கம் செய்ய விரைந்து சென்றோம்.

தாயின் முன்னேற்பாட்டுப்படி குருநாதர் ஆஸ்ரமம் வந்துள்ள அன்பர்கள், குழந்தைகள் அனைவரையும் தன்முன் வைத்துக் கொண்டு பஜனையைப்பற்றி பேசிக் கொண்டிருந்தார். ஆஸ்ரமம் விட்டு அன்று வரை வெளி வராதத்தாய் சாதுவின் உடலை தாங்கிச் செல்லும் எங்களைத் தொடர்ந்து வந்தாள். கால் வலி பாராது கல்லிலும் முள்ளிலும் இரண்டு மைல்கள் நடந்தாள் தானும் நாம சங்கீர்த்தனம் சொல்லி அன்பர்களையும சொல்ல வைத்தாள். பெரிய பெரிய ஞானிகள் வேண்டிக் கிட்டாத நாம சங்கீர்த்தன கடைசி யாத்திரை அந்த சாதுவுக்குக் கிடைத்தது.

குறிப்பிட்ட இடமும் வந்தது. விறகுகள் அடுக்கப் பட்டிருந்தன. அதன்மேல் சாது கிடத்தப்பட்டான். சீமை எண்ணெய் ஊற்றிப் பற்றவைக்க ஓர் அன்பர் அனுப்பப்பட்டார். உடனே "நிறுத்து" என்ற கன்னடச் சொல் கேட்டுத் திரும்பினோம். அன்னை கிருஷ்ணு பாய் கருணை நிறைந்த கண்ணில் நீர் பொங்க "முருகா இங்கு பாரு. இவன் சில நாட்களாகவே அடிக்கடி 4 மணி 5மணி நேரம் இறந்தான் போலிருந்து மறுபடி பிழைத்துக் கொண்டவன். அதுபோல் இம்முறையும் இருந்து நெருப்பு வைத்துவிட்டால், பாபம் வீணாக செத்துப்போவானே! முருகா நீ கொஞ்சம் பார்த்து நாடியிருக்கிறதா சொல்" என்றாள்.

நாடி அடித்துக் கொள்வதைப் போலிருந்ததால் டாக்டர் வரவழைக்கப்பட்டார். டாக்டர் சாதுவின் உடலை தொட்டுப் பார்த்துவிட்டு கலகலவென சிரித்து விட்டார். "யார் சொன்னது உயிர் இருக்கிறதென்று. உயிர்போய் 5 மணி நேரமாயிற்று. மணி 9 ஆகப் போகிறது. சீக்கிரம் காரியத்தை முடியுங்கள்" என்று சொன்னார்.

"நிச்சயமாகவா" என்ற தாயின் கனிந்த கேள்விக்கு டாக்டர் சவமிருக்குமிடம் சென்று கண்கள், வாய் உதடு, முதலியவைகள் உயிர் பிரிந்த பின் எப்படி இருக்கும் என்று விவரமாகச் சொல்லி, நாடி பார்ப்பதற்காக அழுத்திப் பிடித்தமையால் தன்னுடியே எதிரொலி எடுத்துள்ளது என்று சொல்லி நெருப்பு வைக்கப்பட்ட பின் சிறிது இருந்து ஆஸ்ரமத்திற்கு பத்தரை மணிக்கு வந்தோம்.

தாயின் உள்ளக்கனிவை சிலர், கேலி செய்து அனுபவித்தார்கள். மறுநாள் ஆஸ்ரம விசேஷங்கள் நடந்தன. சாதுவின் மகனேயும் மனேவியையும் பல நாட்களுக்கு ஆஸ்ரமத்திலேயே வைத்திருந்து துக்கத்தைத் தேற்றி அவர்கள் சொந்த ஊருக்கு அனுப்பினுள்.

கருணை அன்பு என்பது எங்கும் உள்ளது. ஆனுல் காரணம் இல்லாமல் பிரதி பலனைக் கருதாமல் கருணை செய்வதுதான் தாயன்பு. இதுதான் தாய்மையின் மன அன்பு. இத்தாயன்பு பாரத நாட்டை நெடு நாளாகக் காத்து வந்துள்ளது. இனியும் மங்களமான வீரம் நிறைந்த தாய்மை மலிந்த தாய்மார்கள் தோன்றி நாட்டின் கொடுமைகளை எல்லாம் நீக்கி தாய்மை விளங்கச் செய்ய அன்னை கிருஷ்ணுபாயை எல்லா மங்கையரும் பின்பற்ற வேண்டும்.

வாழ்க மங்கையர் கற்பு
வாழ்க தாய்மை சக்தி
வாழ்க அவர்தரும் செல்வம்
வாழ்க தாய்மையாலமைதி.

# நமது புராண இதிஹாஸங்கள்

(ஸ்ரீமதி வி. ராமன்)

அறிவிற் சிறந்த மகரிஷிகள் தமது உயர்ந்த கருத்துக்களை மனிதவர்க்கம் எளிதில், புரிந்து கொள்வதற்காக காவியங்களை இயற்றினார்கள். உருக்கி வார்த்த செம்பொன்னும் மண்ணில் கிடந்தால், உருமாறி மண்ணோடு மண்ணாகக் கிடப்பது போல உயர்ந்த கருத்துகள் உவமைகளோடு சேர்ந்து உருமாறிவிட்டன. நாளடைவில் சூழ்நிலைகள் மாறிக்கொண்டே வருவதனால், பல நூற்றாண்டுகளுக்கு முன் என்ன அர்த்தத்தை மனதிற் கொண்டு கிரந்த கர்த்தா எழுதினார் என்று அறிவது மிகவும் முக்கியமான விஷயம். மண்ணிலிருந்து தோண்டி எடுக்கும் போது கூழாங்கல் போலிருக்கும் வைரத்தைப் பட்டையிட்டு செதுக்கினால்தான் கண்களைப் பறிக்கும்படி ஒளிவீசும். நமது காவியங்களின் உண்மையான தாத்பர்யங்களை யறிய விரும்பினால், முதன் முதலில் நாம் பல நூற்றாண்டுகள் பின்னோக்கிச் சென்று ஆதிகாலத்திருந்த சூழ்நிலையில் மானஸீகமாக அமர வேண்டும். பிறகு காவியத்தைப் பன்னிப் பன்னிப் பாடினால் உண்மைப் பொருள் ஒளிவீசி மனக்கண் முன்தோன்றும். பிறகு அதை மற்றோருக்கு எடுத்துச் சொல்வது எளிது.

பௌராணிகர் இராமாயணம் படிக்கிறார். ஹிட்லர் முதல் டோஜோ வரையில் எல்லோரையும் சந்தியில் இழுத்து வயிறு புண்ணாகும்படி நகைக்க வைத்துக்கேட்போருக்கு இன்ப முண்டாகும்படி மிகமிக ரஸமாக எடுத்துச் சொல்கிறார். "சாஸ்திரிகள் என்னமாய் சொல்கிறார் போங்கள். ரொம்ப பேஷ். நீங்கள் 'மிஸ்' பண்ணியிருக்கப்படாது" என்று நண்பருக்கு நம் அனுதாபம் தெரிவிக்கிறோம்.

எங்கேயோ எப்போதோ ராமன் என்று ஒரு இளவரசன் சக்களத்திப்போராட்டம் காரணமாக காட்டுக்குப் போகும்படி ஏவப்பட்டு அங்கு பெண்டாட்டியை யிழந்து திண்டாடிய கதையை மீண்டும் மீண்டும் மக்கள் ஆனந்தமாகக் கேட்பதற்கு என்ன காரணம்? அந்த ராமன் சீதையை மீண்டும் அடைந்த விவரமும், ராஜ்யபட்டாபிஷேகம் செய்துக்கொண்ட வர்ணனையும், ஏன் ஜனங்களைக் குதூகலமடையச் செய்கின்றன?

புண்ணிய கதை என்று ராமாயணம் கேட்கிறவர்கள் சிலர்! அதன் கலைத்திறனை வியந்து படிக்கிறவர்கள் சிலர். கம்பன் தரும் காட்சியைக்கண்டு மயங்கும் ரஸிகர்கள் சிலர். ஆனால் இராமாயணத்தின் தாத்பர்யத்தை யுணர்ந்து பரவசப் பட்டு அந்த விசேஷத்தை மற்ற மக்களுக்கும் பகிர்ந்தளிப்பவர் கள் அநேகரிரார்.

நமது புராணிகர்களில் சிலர் தமது சம்ஸ்கிருத திராவிட பாண்டித்யத்தை உபயோகித்து, புதிய அர்த்தங்களைக் கண்டு பிடிப்பதில் முனைகின்றனர். வரிகளுக்கிடையே படிப்பதில் சமர்த்தர்களாக இவர்களில் சிலர் உண்டு. கம்பரோ, வால் மீகியோ அவர்களது வாதப் பிரதிவாதங்களைக் கேட்டால், "இப்படி அனர்த்தம் நேரிடும் என்று தெரிந்திருந்தால் இந்த மகா காவியத்தை சிருஷ்டித்திருக்கவே மாட்டோமே," என்று சொல்வார்கள்.

புராணங்களை வியாக்கியானம் செய்கிறவர்கள் பெரும் பாலும் சம்பவங்களை அப்படியே நேர்ந்ததாக எடுத்துக் கொள் கிறார்கள். இது தவறு என்றோ, மேற்படி சம்பவங்கள் உண்மையன்று என்றோ சொல்லவில்லை. கவி தன் வாழ்க்கை யின் உன்னத லட்சியமாகத்தனது சிருஷ்டியைக் கருதுகிறார். தினசரி வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்களைச் சித்திரிக்கும் போது அவற்றில் தனது உள்ளத்தை அப்படியே கொட்டி விடுகிறான் கவி. அந்தச் சம்பவம் வெறும் எலும்புக் கூடுதான். அதை வைத்துக்கொண்டு பல தாத்பர்யங்களைப் புகுத்தி உன்னத லட்சியங்கள் மனித உள்ளத்தில் பசுமரத்தறைந்த ஆணிபோல் பதியவைப்பதே கவியின் முக்கிய நோக்கம். ஒரு வண்ணானும், வண்ணாத்தியும் சண்டையிட்டுக் கொண்டார்க ளாம். அதைக் கேட்ட ராமன் தன் மனைவியை, அவள் கர்ப்ப மாயிருந்ததையும் கருதாது கானகத்துக்கு ஓட்டி விட்டான் என்று புராணம் சொல்கிறது. இந்த சம்பவத்திற்காகவா புராணம் எழுதப்பட்டது. ராமனின் நேர்மையையும், செங்கோல் மன்னன் தனது வாழ்க்கை பழுது கூறப்படா வண்ணம் பார்த்துக் கொள்ளவேண்டும் என்பதையும் அறிவு றுத்தவே இந்தச் சம்பவத்தை மகரிஷி காவியத்திற்குள் புகுத் தினார். அப்பர் ஸ்வாமிகளின் தேவாரத்தில்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக்கை தொழ
கற்றுணைப்பூட்டி கடலிற்பாய்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயவே

என்ற பாசுரம் இருக்கிறது. அவரது உண்மையை நிரூபிக்க அவரைக் கற்றாணில் பிணித்துக் கடலிற்தள்ளினார்களாம். சுண்ணாம்புக் காளவாயில் போட்டுப் பொசுக்கினார்களாம். நமசிவாய என்னும் நாமம் அவரைக் கடலில் முழுகி மரித்துப்போகாவண்ணம் காப்பாற்றிற்றும். வெந்து சாம்பராகாமல் தடுத்ததாம். இந்த அற்புத நிகழ்ச்சிகள் நேரிடவில்லை என்று சொல்லவரவில்லை. நாம் உயிர் வாழ்ந்திருப்பதே பெரியதோர் அற்புத நிகழ்ச்சியன்றோ? அண்ட சராசரங்களை ஆண்டுவரும் ஆண்டவன் ஆற்றலுக்கு இவ்வற்புதங்கள் பெரிதல்லவே! அப்பர்சுவாமிகள் இந்த சம்பவங்களைச் சொல்வதற்காகவா தேவாரம் பாடினார் என்பதே கேள்வி.

இப்பொழுது சில சர்வகாலசாலைப் பட்டதாரிகள் புராணங்களின் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். இவர்கள் ஆசிரியர் வாழ்ந்த சூழ்நிலையில் ஆராய்ச்சி நடத்த வேண்டுமென்ற கொள்கையைக் கடைபிடிப்பதில்லை.

"ஸ்கந்த புராணத்தில் சிவன் என்னும் அந்தணனுக்குப் பிறந்த சுப்பிரமண்யன் என்ற பிராமண யுவன் தினைப்புனங் காத்துக் கொண்டிருந்த வள்ளி என்னும் குறத்தியை மணம் செய்துக்கொண்டதாக அத்தாட்சி யிருக்கிறது" என்றும்; "அம்பிகை அம்பாலிகை என்ற காசி ராஜன் புத்திரிகளுக்கு வைதவ்யம் நேர்ந்த பிறகு குழந்தைகள் பிறந்ததாக பாரதத்தில் சொல்லியிருப்பதால் மகாபாரத காலத்தில் விதவா புனர் விவாகத்திற்கு ஆதாரம் இருக்கிறது," என்றும்; "பாஞ்சாலி ஐந்து கணவன்களை மணம் செய்து கொண்டாள். ஒருவரோடு விவாகரத்து செய்துகொண்டு மற்றொருவரை ஒவ்வொரு ஆண்டிலும் சில காலத்திற்கு மணம் செய்துக்கொண்டதாக வியாக்கியானம் செய்யலாம்," என்றும் விபரீதமான வாதத்திற்குப் புராணங்களை மேற்கோள்களாக எடுத்துக் கொள்கிறார்கள்!

# சுகாதாரக் கல்வி

[பங்குனி மாதத்தொடர்ச்சி]

(ஸ்ரீ. த. ந. ஸ்ரீ. ராகவாச்சாரி)

அமெரிக்காக் கண்டத்து ஐக்கிய நாடுகளின் சுகாதாரக் கல்வி முறையின் விசேஷ அம்சங்களில் மூன்ருவது ;—

**மாணவ மாணவிகளது தேகசவுக்கிய நிலைமையைத் தகுந்த வைத்தியர்களைக் கொண்டு வருஷம் இருமுறையாவது பரிசோதிக்கச் செய்து அப்பரிசோதனைகளில் காணப்படும் குற்றங் குறைகளைச் செவ்வனே கவனித்துப் பரிகாரம் செய்து குணப்படுத்திக் குழந்தைகளின் தேக அபிவிருத்தியை வளரச்செய்தல்.** இப்பெரும காரியததில் பெற்ருேர்களும, உபாத்தியாயர்களும், வைத்தியர்களும் ஒத்துழைத்தாலன்றி பூரண பலன் கிட்டாது. ஆகவே பெற்ருேர்கள் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. நம் நாட்டில் கல்விப் பெருக்கம் ஏற்படவில்லை; ஆரம்பப் பாடசாலைகளில கட்டாயப் படிப்புப் படித்தும் சிறுவர் சிறுமியரது பெற்ருேர்களில் பெரும்பாலருக்குக் கல்வியறிவு விசேஷமாக இல்லை என்ற காரணத்தினல் பெற்ருேர் சங்கங்கள் அமைக்க முடியாதென்று நினைக்கலாம். ஆனல் சென்னை நகரத்திலுள்ள கார்ப்போரேஷன் பள்ளிக்கூடங்களில் படிக்கும் மாணவர்களின் பெற்ருேர்களடங்கிய சங்கங்கள் செவ்வனே நடந்து வருவதைப் பற்றி அடிக்கடி கேள்விப் படுவதிலிருந்து எல்லா ஊர்களிலுமுள்ள ஆரம்பப் பள்ளிக்கூட மாணவ, மாணவிகளின் பெற்ருேர்களுக்கும் சிறிது சிறிதாக நாளடைவில் ஊக்க முண்டாகும்படி செய்வது சாத்தியமென்றே தோன்றுகிறது. சமீபத்தில் முடிவடைந்த இரண்டாவது மகாயுத்தத்திற்குமுன் நமதுமாகாணத்து உயர்தரப் பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் தேகாரோக்கியப் பரிக்ஷை என்ற ஓர் அற்பப்பிரத்தியாம்ஞயம் நடைபெற்றது. பத்து வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களும் சிறுமியர்களும் 20 வயது அதிகப்பட்ட இளைஞர்களுமே இப்பரிக்ஷையில் சோதிக்கப் பட்டவர். இதனல ஏற்பட்ட குணம், நன்மை இரண்டும் சுத்தமானபூஜ்யமே. சுகாதார நிலையைப் பற்றிய பரீக்ஷயினல் நன்மையுற வேண்டில் ஆரம்பப் பள்ளிக்கூடம் கிண்டர்கார்டன் வகுப்புக்களில் படிக்கும் வெகு சிறுமாணவ மாணவிகளையே முதலில் கவனித்து அவர்களுடைய தேகாரோக்கிய நிலையை உறுதிப்படுத்துவது அவசியம். இச்சிறு பிராயத்தில்தான் (இளமூங்கிலை வளைப்பது எளிதுபோல) நல்ல அப்பியாசங்கள் பயிற்சியில் பிடிப்பட்டு நிலைபெறும். அல்லாமல் பத்துப்பன்னிரெண்டுவயதானபின் அதுவரையில் அனுபவத்திலும் பழக்கத்திலும் வந்துள்ள கெட்ட வழக்கங்களை மாற்றி நல்லவைகளை அனுஷ்டிக்கச் செய்வது சிரமசாததியமான காரியம். இதுநிற்க நமது மாகாணத்தில் நடத்தப் பெற்று வந்த ஆரோக்கியப் பரிசீலனை வெகு மேலேழுந்தவாரியாகவும், போதிய விவரங்கள் கவனிக்கப்பெருமலும் நடத்தப்

பட்டதுமன்றி, அந்த இளப்பமான பரிசீலனையில் காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்திக்க எத்தகைய முயற்சியு மெடுபடாமல், பணச்செலவு மட்டும் செய்யப்பட்டு வந்தது. அமெரிக்காவில், ஆரோக்கியப் பரிசீலனை வெகு ஜாக்கிரதையாகவும், ஊக்கம், துரிதம், உற்சாகம் இவையுடனும் செய்யப்படுவதுடன், அப்பரிசீலனைகளில காணப்படும் குற்றம் குறைபாடுகளை உடனே நிவர்த்திக்கப் போதிய சாதனங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் இச் சிறுவர் சிறுமியர்களுக்குத் தேவையான சிகிச்சை இலவசத்தில் கொடுத்துதவி, தேகாரோக்கிய நிலையைச் சரிப்படுத்துகிறார்கள். ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு பிரத்தியேக ஏடு பதிவு செய்யப்பட்டு அவ்வேட்டில் குழந்தையின் பற்பல அவயவங்களின் நிலையும் குறைவுபாடுகளும் குறிக்கப் பெற்று தேவையான சிகிச்சையானபின் மறுபடியும் பரிசீலனை செய்யப்பட்டு அதன் குறிப்புகளையும் பதிவு செய்யப்படுகிறது. ஆகவே சிறிது ஆரோக்கிய நிலைக்குன்றிய சிறுவர் சிறுமியரது தேகசவுக்கியப் பராமரிப்பு பள்ளிக்கூட அதிகாரிகளுடையவும பரிசீலனைக் கென்றேற்படுத்தப்பட்டுள்ள வைத்தியருடையவும் பொறுப்பாக்கி, சர்க்கார் வைத்தியசாலைகளில் இலவசச்சிகிச்சையும் கொடுபட்டு வருவதால் அந்நாட்டு இளைஞரது ஆரோக்கிய நிலை மேன்மையடைந்திருக்கிறது. முக்கியமாக குழந்தைகளின் கண்களில் காணப்பெறும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதோடு தேவையான மூக்குக் கண்ணாடிகளையும் குறைந்த விலைக்குக் கிடைக்கும்படி செய்கிறார்கள். குழந்தைகள் படிக்கும் போது புத்தகங்களை வைத்துக்கொள்ள வேண்டிய மாதிரி, தலையைக் கவிழ்ந்துகொண்டு புஸ்தகத்தைக் கண்களுக்கருகில் கொண்டு வந்து படிப்பதனால் ஏற்படக்கூடிய தீமைகள் இவைகளை தினந்தோறும் காட்டிக் குழந்தைகளுக்கு நல்ல வழக்கங்களைக் கற்பிப்பதனால் அவர்கள் நிற்பதிலும், நடப்பதிலும், உட்கார்ந்து படிப்பதிலும் நிமிர்ச்சியுடன் காணப்படுகிறார்கள். அவர்களது மனப்பாங்கும், நடத்தையுங்கூட நிமிர்ச்சி பெறுகிறது.

இன்னும் வைத்தியரது பரிசீலனையில் ஏதாவது ஒரு அவயவத்தைப் பற்றிய நேர்மையில் சிறிது சந்தேகமேற்பட்ட விடத்துங்கூட எக்ஸ்ரே (X-Ray) படமெடுத்து அதன் மூலம் நிலையை நிச்சயப்படுத்தி விடுகிறார்கள். இந்த எக்ஸ்ரே யுள்பட எல்லா சிகிச்சையும் பரிசீலனை முறைகளும் இலவசமாகவே செய்யப்பட்டு வருகின்றன. நமது மாகாணத்திலும் இப்போது ஒவ்வொரு ஜில்லாவின் முக்கியப் பட்டணங்களில் புதிய விசேஷ சிகிச்சை முறைகள் கையாளப்பட்டுவருவதால், விசேஷ சிகிச்சை பரிசீலனை செய்து சிறுவர் சிறுமியர்களது தேகாரோக்கிய நிலையைப் பராமரிப்பது சாத்தியமாகும். நமது நாட்டிலுள்ள பள்ளிக்கூடங்களின் தலைமை உபாத்தியாயர் (வைத்தியரது பரிசீலனைக்குப்பின்) குறைபாடுள்ள சிறுவர் சிறுமியர்களது தேகநிலையைப் பற்றி அவரது பெற்றோர்

களுக்குத் தெரியப்படுத்திப் பின்பு சர்க்கார் ஆஸ்பத்திரியின் தலைமையதிகாரியின் அனுமதியைக் கோரிப் பெற்று வாரம் இரண்டு மூன்று குழந்தைகளை யனுப்பிவைத்தால் அந்த ஆஸ்பத்திரிகளில் இலவச சிகிச்சை (விசேஷ சிகிச்சையுள்பட) கொடுப்படும் என்பதில் சந்தேகமில்லை. அக்குழந்தைகளின் பெற்றோர்கள் பணக்காரர்களாயிருக்கும்பக்ஷத்தில் குறைபாடுகளை நிவர்த்திசெய்து அனுப்பினாலல்லாது பள்ளிக்கூடத்தில் அனுமதிப்பதில்லை என்ற ஒரு நிபந்தனையை தலைமை உபாத்தியாயர் பெற்றோருக்குக் தெரியப்படுத்த வேண்டும். அவர்களுக்கு ஆக்ஷேபணையில்லாத பக்ஷத்தில் தானே ஆஸ்பத்திரிக்கனுப்பிக் குறையை நிவர்த்திக்க ஏற்பாடுசெய்வதாயும் அதனால் ஏற்படும் செலவை தரும்படி எழுதியனுப்பிப் பெற்றோரின் சம்மதத்தைப் பெறுவது கஷ்டமல்ல என்று தோன்றுகிறது.

இம்மாதிரிப் போதிய சாதனங்களை வெகு சீக்கிரத்தில், பெற்றோர்களது சம்மதத்துடன் சர்க்கார் அதிகாரிகள் திட்டஞ் செய்து சரிவரப் பரிசீலனை செய்வதற்கும் போதுமான வைத்தியர்களையும் நியமித்தலவசியம். இந்த விஷயத்தில் ஆலசியமும் அலக்ஷ்யமும் தடங்கலும் ஏற்பட்டால் நம் நாட்டுச் சிறுவர்களின் தேகாரோக்கிய நிலை மேம்பாடடைவது துர்லபம்.

பி. ஸீ. ஜி. வாக்ஸின் என்ற க்ஷய ரோகத்தடுப்பு மருந்தை சிறுவர் சிறுமிகட்கு ஊசிமூலம் குத்தி க்ஷயரோகம் வராமல் தடுப்பதற்கென்ற நல்ல எண்ணத்துடன் சர்க்கார் சுகாதார அதிகாரிகள் ஒரு புதிய விந்யாஸத்தை ஆரம்பித்துள்ளனர். க்ஷயரோகத்தை வரவொட்டாமல் தடுப்பதற்கேற்றவோர் முறையென விஞ்ஞானிகள் பலர் அபிப்பிராயப் படுகின்றனர். ஆனால் இதை உபயோகிப்பதில் சில சிக்கல்கள் இருக்கின்றன. இந்த வாக்ஸின் மருந்தில் உயிருள்ள க்ஷயரோக அணுக்கிருமிகள் இருக்கின்றன. இதை உற்பத்தி செய்து உபயோகிப்பதில் விசேஷ ஜாக்கிரதை தேவை. பள்ளிக்கூடத்தில் படிக்கும் சிறுவர் சிறுமியர்களை முதலில் இந்த வாக்ஸின் மருந்து குத்துவதற்கு லாயக்குள்ளவர்களா என்று பரீக்ஷை செய்து, பிறகுதான் இதைக் குத்துவார்களாம். நூற்றுக்கு இருபது கூட லாயக்குள்ளவர்களில்லை என்பது "பொதுஜன சுகாதாரம்" என்ற சென்னை மாதாந்திரப் பத்திரிகையின் ஆசிரியரவர்களது அபிப்பிராயம். இந்த வாக்ஸின் மருந்தை ஏராளமாக உபயோகப்படுத்தத் தீர்மானித்து அதற்கேற்ற சாதனங்களையும் சர்க்கார் திட்டம் செய்து இருக்கிறார்கள். நோயைத் தடுப்பதற்கான இம்முறையின்றும் ஆராய்ச்சி நிலையிலேதான் இருப்பதாகப் பலர் அபிப்பிராயம். அதனால்தான் தர்க்கங்கள் இடையில் ஏற்பட்டன.

வைத்தியப் பரிசீலனை (Medical Inspection) என்ற முறையை ஆரம்பப் பள்ளிக் கூடங்களில் திட்டமாகவும் நன்றாகவும் கையாளுவதற்கு இதுவே நல்ல சமயம் (B. C. G) பி. ஸீ. ஜி. மருந்து குத்துவதற்கேற்ற குழந்தையா இல்லையா என்று பரீக்ஷை செய்து தீர்

மானிக்கவும் மருந்தைப் பிரயோகிக்கவும் வைத்திய சாஸ்திரம் பயின்று யோக்யதைப் பத்திரம் பெற்ற வைதியர்களே தேவை. இவர்களைக் கொண்டே குழந்தைகளின் பொதுவான சுகாதார நிலையையும் தேகாரோக்கிய நிலையையும் பரிசீலனை செய்வித்தல் அசாத்தியமான காரியமா? இதையும் கவனித்து கிண்டர்கார்டன் ஆரம்பப் பள்ளிக்கூட வகுப்புகளின் தேகாரோக்கியப் பரிசீலனையைக் கட்டாய முறையாக அனுஷ்டித்தல் அவசியம். தேவையானால் எவ்வளவு ஏழையாயிருக்கும் பெற்றோர்கூட மாதாமாதம் பள்ளிக்கூட சம்பளத்துடன் குழந்தை ஒவ்வொன்றுக்கு இரண்டு அணா அதிகமாக சேர்த்து வைத்தியப் பரிசீலனைக்காகக் கொடுக்க ஆக்ஷேபிக்க மாட்டார்கள். வருஷம் குழந்தையொன்றுக்கு 1-8-0 வீதம் வசூலித்த பணத்தைக் கொண்டே வைத்திய பரிசீலனையினால் ஏற்படும் செலவில் பெரும் பாகத்தை ஒப்படைத்து விடக்கூடும்.

மூலாதாரப் படிப்பு (Basic Education) முக்கியமெனத் தீர்மானித்திருப்பதுடன் நமது சர்க்காரின் கல்வி இலாகா அதிகாரிகள் சிறுவர் சிறுமியர்களது தேகாரோக்கிய நிலையைப் வருஷா வருஷம் தவறாமல் பரிசீலனை செய்யப் போதுமான ஏற்பாடுகளையும் திட்டஞ் செய்யவேண்டியது அத்தியாவசியமான கல்வி முறைகளில் மற்றொன்று என்பதை நமது கல்வி மந்திரியவர்களுக்கு இதன் மூலம் தெரியப்படுத்தலானேன்.


செருப்புகள் கால்களுக்கு பாதுகாப்பு அளிப்பதுடன் அழகையும் கொடுக்கின்றன.

கண்களைக் கவரும் வனப்பும், நீண்டகால உழைப்பும் ஒருங்கே அமைந்த செருப்புகளும், உத்திரவாதமுள்ள தோல் பைகளும், பெட்டிகளும் கிடைக்குமிடம்:—

**பண்ட் அண்டு கம்பெனி**

**பிராட்வே, சென்னை**

# ஜப்பானியப் பெண்கள்

(சின்னப்பா)

"ஜப்பானில் பெண்கள் செளந்தர்ய உணர்ச்சி உள்ளவர்கள் என்பது பழைய காலம் முதலே பிரசித்தம். புருஷர்களை விட பெண்கள்தான் ரொம்ப காரண பூதர்கள் இந்த பிரசித்திக்கு. அவர்களது மதுரமான புன்சிரிப்பு, அன்பான பரிமாற்றம், கவர்ச்சியும் வர்ணக் கட்டுமுள்ள அலங்காரம் இவை எல்லாம் புகழ் பெற்றவை. ஜப்பான் தேசத்தை கவர்ச்சிகரமாக்குவது அங்குள்ள பெண்கள்தான்." இவ்விதம் ஜப்பானில் சுற்றுப் பிரயாணம் செய்த ஒரு அமெரிக்கர் கூறுகிறார்.

ஜப்பானிய ஸ்திரீகளின் ஆடைகள் மிக மனோகரமானவை. கூடுமான வரை சரீரத்தின் எல்லா பாகங்களையும் மூடியே அலங்கரித்துக்கொள்வார்கள் என்றாலும், அவர்களது சரீரத்தின் வளைவு, நெளிவு,ஒயில், செளந்தர்யம் எடுப்பாக இருக்கும்படியான ஏற்பாட்டுடன் ஆடைகளை அமைத்துக் கொள்கிறார்கள். சரீரத்தின் கூடுதல் பாகம் வெளியில் காட்டினால்தான் செளந்தர்யம் வெளிப்படும் என்ற அமெரிக்கப் பெண்களின் போக்கை இவர்கள் ஆதரிப்பதே இல்லை. இது விஷயத்தில் ஜப்பானிய ஸ்திரீகள் இந்தியப் பெணகளுடன் கைகோர்த்து நிற்கிறார்கள்.

ஜப்பானிய ஸ்திரீகள் தங்கள் நேரத்தின் ரொம்ப பாகத்தை வீட்டிலேயே கழிக்கிறார்கள். விவாகம் ஆகும் வரை யுவதிகள் வித்யாலயத்தில் செலவழிப்பது வழக்கம். அவர்களுடைய கல்விமுறை எழுதுவதும் வாசிப்பதோடு மட்டுமல்ல. பாதி நேரத்திற்குமேல் கலைகள், சங்கீதம், சாகித்யம், சித்ரம், நடனம் முதலியவைகளைத்தான் அவர்கள் அப்பியசிக்கிறார்கள். இது மட்டுமல்ல. விருந்தாளிகளை வரவேற்பதில் அவர்கள் பிரதானப் பங்கு எடுத்துக் கொள்ளுகிறார்கள். ஜப்பானில் விருந்தாளி வரவேற்பு என்ற விஷயம் சமானியமானதல்ல. ரொம்ப கஷ்டமும் வேலைப்பாடும் உள்ளது.

ஜப்பானிய ஸ்திரீகள் தங்களது நேரத்தை சித்ரம் வரைதல், பின்னல், ப்ளவர் லேஸ் (Flower lace) அலங்காரம், விசித்ரமும் அற்புதமும் உள்ள விளக்குகள் உண்டாக்குதல், மனோகரமான விளையாட்டுப் பொம்மைகள் செய்தல், வீட்டையும் அதன் சுற்றுப் புறத்தையும் வினயமாய்க் கவனித்தல் முதலியவற்றில் உணர்ச்சியுடன் ஈடுபட அவர்களுக்கு நேரமும் வசதியும் தாராளமாய் உண்டு. இப்படியெல்லாம் நம்முடைய இந்திய சகோதரிகளும் சிரத்தை காட்டினால்...........?

ப்ளவர் லேஸ்களில் பலவித புஷ்பங்களும் இலைகளும் அமுக்கி வைப்பது என்ற கலையின் நுணுக்கங்களெல்லாம் தெரிந்துகொள்ள ஜப்பான் ஸ்திரீகளுக்கு ஏகதேசம் ஐந்து வருஷம் பிடிக்கின்றது. இவைகளை இவ்வளவு சிரத்தையுடன் படிப்பானேன்? அதற்கு காரணம் உண்டு.

ஒரு யுவதிக்கு எவ்வளவு தூரம் விருந்தாளிகளை உபசரிக்கத் தெரியும்? கலா உணர்ச்சியுடன் ப்ளவர் லேஸ்களை அலங்கரிக்கத் தெரியும்? அழகாக சங்கீதம் இசைக்கத் தெரியும்? இதையெல்லாம் விவாகம் செய்ய ஆசைப்படும் ஒவ்வொரு யுவனும் விசேஷமாக விசாரிக்கும் காரியங்கள். மாப்பிள்ளையும் பந்து ஜனங்களும் இதெல்லாவற்றையும் நேரிட்டுப் பரிசோதனை செய்ததின் பின்தான் விவாகம் உறுதி செய்யப்படுகிறது.

நல்ல "டீ" தயார் செய்யவும் முடியும் என்பது விவாகச் சந்தையில் ஒரு யுவதியின் விலை மதிப்பை ஏற்றிவைக்கும் ஒரு விஷயம்!

அவர்களது ஆடை உடுத்தும் முறை இந்திய ரீதியை அடுத்து வரும் என்றாலும் அதிலும் காணத் தக்க ரீதியில் ஒரு பிரத்யேக பாணி தோன்றும். உடுப்புகள் எல்லாம் பட்டுப் பூச்சியின் வர்ணப்பாட்டை எடுத்துக் காட்டும். பல நிறத்தில் ஓராயிரம் பூக்கள் விரிந்து நிற்கும் ஒரு "லத்தர்" அலங்காரம் அவர்களது ஆடைகளை காணும்போது நமக்கு ஞாபகத்துக்கு வரும்.

ஜப்பானிய ஸ்திரீகள், முக்கியமாக யுவதிகள் அதிகமாக விரும்பும் ஒருவித உடுப்பு 'கிமானே" இடுப்போடு ஒட்டிக்கிடக்கும். அதை அணிந்ததும் அவர்களுடைய சரீரத்தின் நெளிவு லாவண்யம் பதின் மடங்கு அதிகரித்து வனப்பு கொடுத்துவிடுகிறது கவிகளின் பாவனை சிருஷ்டியான சௌந்தர்ய தாருணி போல கவர்ச்சிகரமாக மாறிவிடுகிறார்கள். வேனில் காலத்து இளங்குளிர் காற்றில் சாயந்திரம் நடக்கப் போகும் யுவதிகளை அஸ்தமான சூரியனின் செங்கதிர்களுக்கும், உத்யான வனத்தின் புது பூக்களில் பூமணம் நுகர இறங்கியிருக்கும் பொன்வண்டுகளுக்கும் ஒப்பிட்டு அவர்களை கவிகள் வர்ணிப்பதுண்டு. வேனில் காலத்தில் யுவதிகள் அதிகமாக இஷ்டப்படும் ஒருவித உடுப்பு "எக்கூட்டா." சிறு விருக்ஷங்களின் இடையே வளைந்தும் நெளிந்தும் போகும் சிற்றோடைகளினோட கலகலப்புடன் சிரித்து ரஸித்துப்போகும் காட்டாற்றின் தீரங்களில்தான். எக்கூட்டா அணிந்து குளிர்ச்சிக்குப் போவார்கள்.

சந்திரன் நிலவு பொழியும் ராக்காலங்களில் ஏகாந்தத்தில் லயித்து அழகான சின்னஞ் சிறு விசிறிகளுடன் சிறு மரங்களில் சாய்ந்து அழகாகப் பின்னி விடப்பட்ட வார் கூந்தலை முன்னெடுத்து விட்டு அந்த வன தேவதை இருக்கின்ற காட்சியைக் கண்டால் கவி இருதயங்களில் ஆனந்தம் பொங்கித் ததும்பும். இவ்வித சந்தர்ப்பங்களை அனுசரித்து சுப்ரதீப ஜப்பான் கவியான ஸயுஹோயாம சொன்னது ஞாபகத்திற்கு வருகிறது. "Ah; It is a shift of irresistible appeal to an artiste's inspiration!" ஒரு உண்மையான கலைஞன் கவி துள்ளிக் குதித்துப் பொங்கும் ஆவேசத்துடன், அவன் சந்தர்ப்பத்தில் மீண்டும் சொல்கிறான் "Japanese Fair Sex is Fairest in Summer season"—இதற்கு எல்லாம் காரணம் இந்த காலத்தில் யுவதிகள் ஆதரிக்கும் "எக் கூட்டா" ஆடைகளை கவி மறப்பதில்லை.

மனித ஹிருதயம் உள்ளவர்கள் யாரும் கண்ணீர் விட்டழும் கோர காட்சிகள் இந்த இரண்டாம் யுத்தத்

தினல் ஜப்பானில் காணப்பட்டன. ஏன் எதற்காக யுத்தம் நடந்தது என்றாலும் "காதல் புரியும்" அரம்பையர் போல் இளம் கன்னியர்களையும் ஸ்திரீகளையும் அணுகுண்டு சுட்டு சாம்பலாக்கி விட்டது. பத்து இருபது வருஷத்து அறிவு உள்ள ஸ்திரீகள் ஆயிரக்கணக்கில் இறந்து மாண்டது ஜப்பானுக்கு ஒரு ஈடில்லா நஷ்டம். "கிமோனுவும" "எக் கூட்டாவும்" அணிந்து வீகையில் விசிறியுடன் நின்று சிரிப்புடன் அதிதிகளை வரவேற்ற ஜப்பான் வனிதைகள் காக்கி உடை தரித்து மிஷின் துப்பாக்கிகளுடன் நின்று அமெரிக்க சைனியத்தை எதிர்த்தார்கள். வீணையில் களி நடமிடும் வெண்தாமரைக் கைகள் துப்பாக்கியையும் ஏற்கும் என்பதை கழிந்த ஜப்பானிய யுத்தம் நிரூபித்து விட்டது!

---


# இனம் ரூ. 10,000

## அமிருதசரஸில் தங்கம் ஒரு தோலா ரூ. 3

எல். முன்ஷி ராம், ஜவுளி வியாபாரி, தாமஸாலர் எழுதுகிருர்: "12 தோலா அமெரிகக புது தங்கம் கொண்ட உங்கள் பார்ஸல் கிடைத்தது. உங்களுடைய புது தங்கத்துக்கும், அசல் தங்கத்துக்கும் வித்தியாசமேயில்லை என்பதைக் காண மகிழ்ச்சியடைகிறேன். இந்தப் புது தங்கத்தை தயாரிப்பதின் மூலம் நீங்கள் பொதுமக்களுக்கு அரிய சேவை செய்திருக்கிறீர்கள். மறு தபாலில் மேலும் 12 தோலா அனுப்பவும். மேற்கொண்டு ஆர்டர்கள் தொடரும்." இந்த நற்சாட்சி தவருனது என்று நிரூபிப்பவருக்கு ரூ. 10,000 ரொக்கம் பரிசு அளிக்கப்படும். பரிட்சைக்கல்லில் எங்கள் புது தங்கம் அசல் தங்கத்தைப் போன்ற அடையாளத்தைக் கொடுக்கும். அதை உருக்கலாம்; அசல் தங்கத்தைப் போல், நினைத்ததைச் செய்யலாம். எவ்விதமான நகைகளும் அதைக் கொண்டு செய்யலாம். மிக்க சாமர்த்தியமான நகை வியாபாரியினலும் எங்களது புது தங்கத்துக்கும், அசல் தங்கத்துக்குமிடையே வித்தியாசம் பார்க்க முடியாது. இந்தப் புது தங்கத்தைப் பிரபலப் படுத்துவதற்காக, ஒரு தோலா ரூ. 3, 3 தோலா ரூ. 8, 6 தோலா ரூ. 15, 12 தோலா ரூ. 28 என்று விலைகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன.

முக்கியக் குறிப்பு: 3 தோலா வாங்கும் ஒவ்வொருவருக்கும் 2 பம்பாய் பாஷன் மோதிரங்கள் இனம்; 6 தோலா புது தங்கம் வாங்குபவருக்கு 2 பம்பாய் பாஷன் மோதிரங்கள், ஒரு ஜதை காது அணி, ஒரு ஜதை வளையல்கள் இனம். 12 தோலா புது தங்கம் வாங்குபவருக்கு, பதக்கத்துடன் கூடிய ஒரு கழுத்துச் சங்கிலி, இரண்டுஜதை வளையல்கள், இரண்டு பம்பாய் பாஷன் மோதிரங்கள், தபால் செலவு இலவசத்துடன், இனம். ஒப்புக் கொள்ளப்படாவிட்டால், விலைகள் வாபஸ்.

**சந்தர்ப்பத்தை இழக்காமல், இன்றே ஆர்டர் செய்யுங்கள்.**

நியூ கோல்டு சப்ளை கம்பெனி, (K. M.) ஹால்கா 22, அமிர்தசரஸ்

**NEW GOLD SUPPLY CO., (K. M.) Halka No. 22, Amritsar**


---

# கண்ணனும் கந்தனும்

(ஸ்ரீமதி எஸ். வி.)

நீலக் கடலோரத்திலே நின்றுகொண்டிருந்தேன். சமுத்திர அலைகளை விட வேகமாக என் எண்ண அலைகள் மோதிக் கொண்டிருந்தன. தாங்காமல் ஒரு பெருமூச்சு விட்டேன். ஒரு பெரிய அலை புரண்டோடி வந்து என் சேலையை நனைத்துவிட்டு ஓடியது. உலகத்திலே இந்த அலைகளைப்போலத்தானே பிறப்பும் இறப்பும் அமைந்திருக்கின்றன என்று யோசிக்கும்போது இன்னொரு அலை கோர சப்தத்துடன் என்னைத் தேடி வந்தது. முழுதும் நனைந்து விடப் போகிறோமே என்று அஞ்சி கரை நோக்கி நடக்கலானேன்.

"எவ்வளவோ சம்பாதித்து வைத்திருக்கிறாய். உனக்கும் உன் மனைவிக்கும் பிற்பாடு சொத்தெல்லாம் என் குழந்தைகளைத்தானே சேரப்போகிறது. இந்த மாதம் எப்படியாகிலும் ஐந்நூறு ரூபாய் அனுப்பிவைத்தாயானால் ரொம்ப சௌகர்யமாயிருக்கும்———." இப்படியாக என் மைத்துனரிடமிருந்து வந்திருந்த கடிதத்தை எண்ணி எண்ணி என் மனம் தவித்தது.

"பெற்றெடுத்தால்தான் குழந்தைகளா? எவ்வளவோ அனாதைக் குழந்தைகள் உடுக்கத் துணியின்றி, படுக்கப் பாயின்றி, உண்ணவும் உணவில்லாமல் பிச்சை யெடுத்துப் பிழைக்கின்றனவே. அவைகளுக்கு நான் தாயாரா——" என்று யோசித்துக் கொண்டே நடக்கும்போது மெழுகு தடவப்பட்ட கயிற்றில் தடுக்கி, விழாமல் சமாளித்துக் கொண்டேன். இரண்டு சிறுவர்கள் ஓடி வந்தார்கள். என் காலடியில் மாட்டிக்கொண்ட கயிற்றை சீர் படுத்தி "அம்மா அப்படி போங்கள். வலைக்கயிறுக்கு மெழுகு போட்டு கிழிந்த வலைகளை பழுது பார்க்கிறோம்" என்றான் அதில் பெரியவனாகத் தோற்றமளித்தவன் என் கூடவே நடந்து கார் வரைக்கும் வந்தான்.

ஆபீசுக்குப்போய் என் கணவனையும் அழைத்துப் போக வேண்டியிருந்ததால் சீக்கிரமாக வண்டிக்குள் ஏறிக்கொண்டேன். கண்ணாடியின் வழியாக நோக்கியபோது இரு சிறுவர்களும் நின்று கொண்டுதானிருந்தார்கள். அண்டையில் கூப்பிட்டு பையன்களிடம் ஒரு நான்கணாத் துண்டை நீட்டினேன்.

அவர்களில் பெரியவன் "அம்மா எங்களுக்குத் துட்டு வேண்டாம். உங்களைப் பார்த்தால் எங்கள் தாயார்போலிருக்கிறது. அதனால் வந்தோம். நாங்கள் உழைத்து சீவனம் செய்கிறோம். பகவான் நிரம்ப படியளக்கிறார். இன்று பூராகவும் புழுதியில் இருந்ததால் எங்களைப் பார்த்தால் பிச்சைக்காரர்களைப்போலிருக்

குத் தங்களுக்கு" என்று விருவிருப்பாகச் சொல்லிக்கொண்டே போனான். எனக்கு நேரமாகி விட்டதால் கிருஷ்ணனை வண்டியை ஓட்டச் சொன்னேன்.

"அடேயப்பா! பிச்சக்கார பசங்களுக்கு எவ்வளவு கர்வம்" என்று டிரைவர் கிருஷ்ணன் முணு முணுத்தது காதில் விழுந்தது.

அன்றிரவுபூராவும் தூக்கமே வரவில்லை. சிறுவர்களே என் அகக் கண்முன் தோற்றமளித்தனர். மறுநாள் சாயந்திரம் சீக்கிரமே என்னை அறியாமல் கடலோரஞ் சென்றேன். பையன்களைக் கவனித்தேன். எங்கேயும் காணோம். ஆறு மணிக்கெல்லாம் கணவனின் ஆபீஸுக்குப் போகவேண்டுமே என்று காரில்வந்து ஏறிக்கொண்டதும் அதே சிறுவர்கள் இரண்டு சிறிய கூடைகளில் எலந்தைப் பழம் வைத்துக்கொண்டிருந்தனர். "அம்மா வாங்கிக்கிறேளா!" என்றான் பெரியவன்.

"திருட்டுப் பையன்கள். அம்மா இவர்களிடம் வாங்காதேங்கோ. டவுனுக்குப் போகிறோமே. பழக்கடையில் சீமை எலந்தம்பழம் வாங்கிக்கொள்ளலாம்" என்று கிருஷ்ணன் கொஞ்சம் கடுமையாகவே சொன்னான்.

"பாவம் அழுக்கு உடையைத் தரித்திருப்பதாலன்றோ அவர்களுக்கு இவ்வளவு மரியாதைக் கிடைக்கிறது. அழுக்கு உடையும், ஏழ்மையும், அவலக்ஷணமும் இக்குழந்தைகளிடம் ஏற்படுத்தியக் கடவுள் அவர்களுக்கு வயிற்றையாகிலும் கொடுக்காமலிருந்தானா?" என்று சொல்லிக்கொண்டே கூடை பழத்தையும் வண்டிக்குள் என் காலடியில் கொட்டச் சொல்லி எட்டணா காசையும் கொடுத்தேன். சந்தோஷம் தாங்க முடியாமல் குதித்தோடினர் சிறுவர். கிருஷ்ணனை சில குடிசைகள் வழியாகப் போகும்போது அப்பழங்களை சேரியிலுள்ள சிறுவர்களுக்கு விநியோகம் செய்யச் சொன்னேன்.

மத்தியான வேளைகளில் வலைகளைப் பழுது பார்த்து, சாயங்காலங்களில் பழங்களை விற்கும் சிறுவர்களுக்குப் பெற்றோர்களில்லையா? யாரைக் கேட்பது? காக்கி நிஜார். கிழிந்த காக்கி சட்டை இவைகள்தான் பெரியவனின் உடைகள். சிறியவன் ஒரு சிறிய துண்டும், கிழிந்த காக்கி சட்டையும் அணிந்திருந்தான். அவர்கள் இருப்பிடத்தை அறியவேண்டும் போல் எனது ஆவல் என்னைத் தூண்டியது. வதங்கிய மேனியுடைய அவர்களிடம் ஒரு தனியான தேஜஸ் இருப்பதைக் கண்டேன். கிருஷ்ணன் அவர்களிடம் பேச்சுக் கொடுத்து அவர்களிருவரும் சகோதரர்கள் என்று அறிந்திருந்தான். ஒருவன் கண்ணன். மற்றவன் கந்தன்.

கண்ணனுக்கு வயது பன்னிரெண்டு. கந்தனுக்கு வயது பத்து. இப்படியாக சிலநாட்கள் அவர்களிடமிருந்து பழம் வாங்கி சேரிக்

குழந்தைகளுக்குக் கொடுத்துக்கொண்டிருந்தேன். ஒரு நாள் சாயந்திரம் அவர்களைக் காணவில்லை. கிருஷ்ணனை மோட்டாரை டவுன் பக்கம் ஓட்டச் சொன்னேன். அன்று சேரிக் குழந்தைகளுக்கும் ஏமாற்றந்தான்.

ஜனக் கூட்டத்தினிடையே மோட்டார் மெதுவாகச் செல்ல வேண்டிவந்தது. அங்கே அச்சிறுவர்களைப் பார்த்தேன். கிருஷ்ணனை வண்டியை நிறுத்தச் சொல்லி சிறுவர்களிடம் சென்றேன். என்னைக் கண்டதும் சிறியவன் என்னிடம் ஓடி வந்தான்.

"ஏனப்பா பழம் பொறுக்கி விற்பதை நிறுத்தி விட்டீர்களா?"

கந்தன்: "ஆமாம் அம்மா. பழம் கிடைக்கும்போது பழம் விற்போம். காலம் மாறிவிட்டதால் பழம் விற்பதில்லை. இப்போது பேப்பர் விற்கிறோம். எங்களிடம், வாரப் பத்திரிகைகள், தினப் பத்திரிகைகள் எல்லாம் உண்டு. உங்களுக்கு எது தேவையோ அதை வாங்கி போணி பண்ணுங்கோ அம்மா" என்று என்னை கந்தன், பத்திரிகைகள் புடைசூழ உட்கார்ந்திருந்த அண்ணனிடம் அழைத்துச் சென்றான். இரண்டு ரூபாய்க்குப் பத்திரிகைகள் வாங்கிக்கொண்டு ஆபீசுக்குப் போய்விட்டேன்.

ஒரு வாரத்திற்குமேல் அவர்களைச் சந்திக்க சமயம் ஏற்படவில்லை. ரிப்பேருக்காக மோட்டார் கார் கம்பெனிக்குப் போய் விட்டது.

சனிக்கிழமை இரவு பத்துமணியிருக்கும். "கடலோரஞ் சென்று வெகுநாளாயிற்று. இன்று நீங்களுந்தான் வாருங்களேன்" என்று என் கணவனையும் அழைத்துக்கொண்டு கடலோரஞ் சென்றேன். மணலின்மேல் உட்கார்ந்து அவர் குடும்பம், என் குடும்பம், எங்கள் குடும்பம், உலகம் எல்லாவற்றையும் பற்றிப் பேசிவிட்டு நான் தினந் தோறும் காணும் சிறுவர்களைப்பற்றிப் பேச ஆரம்பித்தேன். மறு நாள் சாயந்திரம் அவ்விடம் வரும்போது இவர்களுக்கு சட்டைகளும், நிஜார்களும் வாங்கிக் கொடுக்கும்படி உத்தரவிட்டார் என் கணவர்.

மோட்டார் மெதுவாகச் சென்றுகொண்டிருந்தது. மனித சஞ்சாரமே இல்லை. பஸ் நிற்குமிடத்தில் சிறுவர்கள் இருவரும் உட்கார்ந்துகொண்டிருந்தனர். பெரியவன் ஒரு கம்பத்தின்மேல் சாய்ந்து தூங்கிக்கொண்டிருந்தான். மற்றொருவன் அண்ணன் முதுகின்மேல் தலையை சாய்த்துத் தூங்கிக்கொண்டிருந்தான். பரிதாபமாயிருந்தது. விற்பனையாகாத பத்திரிகைகள் அவர்களண்டையில் குவிந்து கிடந்தன.

வண்டியை நிறுத்தி இறங்கினேன். அவர்களண்டையில் சென்று "கந்தா எழுந்திரு. இன்னேரமாச்சே, வீட்டுக்குப் போக

வில்லையா?'' என்றேன். சிறியவனாகிய கந்தன் விழித்துக்கொண்டு அவன் அண்ணனாகிய கண்ணனைத் தட்டி எழுப்பினான்.

கண்ணன் விழித்து அலக்ஷியமாக என்னை ஒருமுறைப் பார்த்தான். நிதானமாக, "நாங்கள் கடைசி பஸ்ஸுக்காகக் காத்திருக்கிறோம். பன்னிரண்டு மணிக்கு வரும். எல்லாப் பத்திரிகையும் அப்போது விற்பனையாகிவிடும் என்றான்."

"உங்களைப் பார்த்தால் மிகவும் சிரமமாயிருக்கிறதே."

"சிரமம் என்று நாங்கள் சொல்லவில்லையே. அவரவர்கள் உண்பதற்காக உழைப்பதை சிரமமென்று எப்படியம்மா சொல்வது" என்று சொல்லும்போது "இச்சிறுவர்கள் பலே ஆசாமிகள் போலிருக்கு. வா. சீக்கிரமாக வீடு போவோம்," என்று என்னை என் கணவர் நினைவூட்டியதும்தான் எனக்கு என் ஞாபகம் வந்தது. அவர்களை அதற்குமேல் கேட்டு அவர்கள் மனதைப் புண்படுத்த நான் நினைக்கவில்லை. அதனால் கிளம்ப யத்தனிக்கும்போது கந்தன் என்னிடம் ஓடிவந்து "அம்மா எங்களை நாளைக்கு உங்கள் வண்டியிலே கீழ்ப்பாக்கத்திலிருக்கும் ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போகிறீர்களா?" என்றான்.

கந்தனை கண்ணன் ஒரு முறை முறைத்துப் பார்த்தான்.

அவர்களை அழைத்துப் போவதாகச் சொல்லிவிட்டு வீடு திரும்பினோம். அச்சிறுவர்கள் பேரில் என் கணவனுக்கு அலாதி காருண்யம் ஏற்பட்டுவிட்டது. மறுநாள் காலை தனக்கு ஏதோ ஜோலியிருப்பதாகவும், அன்று ஞாயிற்றுக்கிழமையாகையால் கிருஷ்ணனும் வரமாட்டானாகையால் என்னையே அச்சிறுவர்களை கீழ்ப்பாக்கத்திற்கு அழைத்துப் போகும்படியாகவும் உத்தரவுப் போட்டார்.

திருவல்லிக்கேணி பஸ் 'ஸ்டாண்டில்' சிறுவர்களிருவரும் என் வருகைக்காகக் காத்துக்கொண்டிருந்தனர்.

"கரையோரம் செல்லும் கனவான்களுக்கு பூட்ஸுகளுக்கு 'பாலீஷ்' போட்டுப், பத்திரிகைகள் விற்றும், காலேஜ் மாணவர்களுக்கு சிகரெட்டு, சிற்றுண்டி முதலியன வாங்கிக் கொடுப்பதினால் சிறு தொகைகள் பெற்றும் சம்பாதிக்கும் பணத்தையெல்லாம் இச்சிறுவர்கள் என்னதான் செய்கிறார்களோ! வயிறோ முதுகுடன் ஒட்டிக்கிடக்கிறது. அணிந்திருப்பது கந்தல் ஆடைகள்," என்று என் மனம் மோட்டார் வேகத்தைவிட அதிகமாகவே பிரயாணம் செய்தது.

"பல துறைகளில் சம்பாதிக்கிறீர்களே. பணத்தையெல்லாம் என்னப்பா செய்கிறீர்கள். நீங்கள் பஞ்சாபிலிருந்து வந்த அகதிகள் கூட்டத்தைச் சேர்ந்தவர்களா!" என்று அவர்களை நோக்கிப்

பேச்செடுத்தேன். மோட்டார் சக்கரங்கள் நாற்பது மைல் வேகத்தில் புரண்டோடிக்கொண்டிருந்தன.

"எங்கள் செலவிற்கு ஒரே வழிதான் அம்மா உண்டு" என்று சொல்லிவிட்டு ஜன்னல் வழியே பார்க்க ஆரம்பித்து விட்டான்.

முயலைப் போன்ற உதடுகளையுடைய சிறியவன் என் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு ஜன்னல வழியாக வேடிக்கைப் பார்த்துக் கொண்டு வந்தான்.

"இதுதான் மவுண்டு ரோடு. இதுதான் குழந்தைகள் பிறக்கும் ஆஸ்பததிரி. இது மியூஸியம்," என்று அவர்களுக்கு இடங்களைக் காட்டிக்கொண்டே பூநதமல்லி ஹைரோடைத் தாண்டி பயித்தியக்கார ஆஸ்பத்திரிக்கு வந்தோம்.

ஆஸ்பத்திரி வாசலில் வண்டி நின்றதும் இரு சிறுவர்களும் குதித்து என்னைப் பார்த்து "அம்மா இதோ உள்ளே சென்று பத்து நிமிஷத்திற்குள் வந்துவிடுகிறோம். இங்கேயே இந்த மரத்தடியிலிருங்கள" என்று சொல்லி உள்ளே ஓடிவிட்டனர். எனக்கு ஒரே ஆச்சர்யமாக இருந்தது. இவர்கள் ஆஸ்பத்திரிக்குள் போகவேண்டிய காரணத்தை அறிய ஆவலேற்பட்டதால் உள்ளே சென்று மணியை அடித்தேன். 'நர்ஸு'ம் வந்தாள்.

"உங்களுக்கு யாரைப் பார்க்கவேண்டும்" என்று இனிமையான குரலில் கேட்டாள் அந்த நர்ஸ்.

"நான் இரண்டு சிறுவர்களை அழைத்து வந்தேன்."

"ஆமாம், கண்ணனும் கந்தனுமா! வாருங்கோ. அவர்களிடம் அழைத்துச் செல்கிறேன்" என்று உள்ளே அழைத்துச் சென்றாள்.

ஒரு அறையின் கண்ணாடி கதவிடுக்கால் என்னை உள்ளே பார்க்கச் சொன்னாள். சோகமே உருவெடுத்தாற்போல் ஒரு பெண் உருவம் சுருண்டு படுத்திருந்தது. இரு சிறுவர்களும் அவளண்டையில் உட்கார்ந்திருந்தனர். ஒரு மேஜைமேல் பழங்கள் வைக்கப்பட்டிருந்தன.

"தமக்கையா? தாயாரா" என் மனோ வேதனையை அடக்க முடியவில்லை. அவள் யாரா யிருக்கக்கூடுமென்று நர்ஸை நோக்கி "படுத்திருக்கும் ஸ்திரீ அச்சிறுவர்களுக்குத் தாயாரா? தமக்கையா!" என்றேன்.

நர்ஸு விவரமாக சொல்லலுற்றாள். "ரங்கூனிலே அவளுடைய கணவன் இறந்தான். நடந்து இந்திய தேசமடைந்த குடும்பங்களில் இதுவுமொன்று. சென்னைவரை வரும் வரைக்கும் நன்றாய்த்தானிருந்

தாளாம். கணவனிறந்த துக்கத்தினுல் ஏக்கமேற்பட்டு திக்கற்ற இரு குழந்தைகளேயும் கவனியாது தெருக்களில் சுற்றிக்கொண்டிருந்த இவளே பயித்தியக்காரி என்று இவ்விடம் கொண்டுவந்து சேர்த்திருக்கிருர்கள். ஆறு வருஷங்களாகின்றன. இப்போதுதான் கொஞ்சங் குணமடைந்திருக்கிறது. இச்சிறுவர்கள் எப்படியோ சம்பாதித்து தாயாருக்குத் தேவையானப் பொருள்களே வாங்கி வருகிருர்கள். சுகமாகி 'டிஸ் சார்ஜ்' செய்துவிட்டால் எங்கே இருப்பது என்பதைப்பற்றி சிறுவர்களும் தாயாரும் கூடி யோசிக்கிருர்கள்," என்று அந்த நர்ஸுக்குத் தெரிந்தவரைக்கும் சொன்னுள்.

சிறுவர்களா யிருந்தாலும் தாயிடம் உள்ள அன்பையும், பக்தியையும் வியந்துகொண்டே என் வாகனத்தில் வந்து உட்கார்ந்து கொண்டேன். பின்னுலேயே சிறுவர்களும் வந்து ஏறிக் கொண்டார்கள்.

சிறுவர்கள் இறங்கவேண்டிய இடத்தில் இறங்கி விட்டார்கள். அதுதான் கடைசி சந்திப்பு. அவர்கள் எங்கே? வெளிச்செல்லும்போதெல்லாம் அவர்களேக்காண மனம் ஆசைக் கொள்கிறது.

கண்ணன் எங்கே? கந்தனும் எங்கே? சுயநலமற்று சேவை செய்ய ஈன்றெடுத்த அவர்கள் தாயார்தான் எங்கே? வீரர்களேயும், வீராங்கனேகளேயும் ஈன்றெடுத்த பாரதமாதா வீரத் தாய்மார்களாகவே ஈன்றெடுப்பாளா?

---

டாக்டர் பெஸண்ட் அம்மாள் ஒரு சந்தர்ப்பத்தில் கூறியிருப்பதாவது:—"மக்களேப் பேணும் மேலான கடமையைப் பெண்கள் சரிவர நிறைவேற்றுவிட்டால், புருஷர்கள் எவ்வளவு தைரியசாலிகளா யிருந்தாலும் சரி, அவர்கள் ஒரு நாளும் சிறப்படையமாட்டார்கள்."

"நன்னெறி, சுதந்தரம், தைரியம் ஆகிய குணங்கள் மாதர்களின் பாத கமலங்களில் சரணமடைந்து கிடக்கின்றன என்று உலகப் பெரியார்களெல்லாம் ஒருமுகமாக அபிப்பிராயப்படுகிருர்கள். ஆகையால் மக்களேப் பேணும் விஷயத்தில் இந்திய மாதர்கள் பிரத்தியேக கவனம் செலுத்த வேண்டும்."

# சாந்தி

(சித்திரைத் திலகத் தொடர்ச்சி)

(வித்வான் வை. செல்லம்மாள்)

## காட்சி 2

இடம்: வைகுண்டத்தில் ஓர் பூஞ்சோலை.

காலம்: மாலை.

[திருமால் ராமாவதாரத்து வடிவுடன் உலாவிக்கொண்டிருக்கிறார். இலக்குமியும் ஆதிசேஷனும் சீதையாகவும், இலக்ஷ்மணனாகவும் ராமர் பக்கத்தில் பேசிக்கொண்டு வருகிறார்கள். அந்த சமயம், நாரதர் வீணையுடன் "சாந்தி நிலவவேண்டும்" என்ற பாட்டைப் பாடிக்கொண்டு வருகிறார்]

ராமர்: நாரதரே! வாருங்கள், வாருங்கள். இம்மலர் மேடையில் அமருங்கள்.

நாரதர்: ஐயனே! நான் என்ன பாக்கியம் செய்தேன். தங்களை ராம வடிவத்தில் காண. இந்த வடிவு இப்பொழுது எதற்காக?

ராமர்: நாரதரே! ஓர் பக்தன் ராமன் உருவில் தனக்கு காட்சி அளிக்க வேண்டினான். அவனுக்கு காட்சியளித்துவிட்டு இப்பொழுது தான் வந்தேன். சிறிது ஆயாசமாக இருந்ததால் இப்பூங்காவில் உலாவ நினைத்து இங்கு வந்தேன். அதிருக்கட்டும் பூவுலகத்தில் ஏதேனும் விசேஷமுண்டா?

நாரதர்: தங்களுக்குத் தெரியாத விசேஷமா? ["சாந்தி நிலவ வேண்டும்" எனப் பாடுகிறார்].

ராமர்: முனிபுங்கவரே! வந்த காரியத்தைக் கூறாது...... இது என்ன இந்த பாட்டை எங்கு கற்றுக் கொண்டீர்?

நாரதர்: இவ்வளவுதானா நீங்கள் அறிந்தது. ஒலிபரப்புக் கருவியில், இசைத்தட்டில், குழந்தைகள், பெரியவர்கள் வாயில் இப்பாட்டு "டாம் டாம்" அடிக்கிறதே. எங்கு? பாரத நாட்டில்.

ராமர்: பாரத நாடுதான் இன்று விடுதலை அடைந்து சாந்தமாக இருக்கிறதே. அப்படியிருக்க இந்த "சாந்தி" பாட்டு எதற்கு?

நாரதர்: பாம்பணையில் துயிலும் பரமனுக்கு, பாரத நாட்டின் 'அமளி துமளி' என்ன தெரியப் போகிறது?

ராமர்: என்னையா நீங்கள் கூறுவது? என் அப்பன் காந்திப் பெருமகனால், அவனுடைய அஹிம்சா தர்மத்தால் பாரத புனித பூமி அடிமைத்தனத்தை நீங்கி அன்பு மயமாகக் காணப்படுகிறதே. கலைமிய கொலையாகக் காணப்படும் இக்காலத்தில் அன்பின் அருட்சுழியாக வன்றோ என் குழந்தை காணப்படுகிறான்.

நாரதர்: நீங்கள் கூறுவது உண்மை. ஆயின் இந்துக்கள் சுதந்திரமடைந்தபோதும், அவர்களிடத்தில் அச்சுதந்திரத்தை அனுபவிக்கக்கூடிய மனப்பண்பாடு இன்னும் உண்டாகவில்லை. பாரத மக்களிடத்தில் "சகோதரத்வம், தியாகம, தேசபக்தி" முதலிய அரிய குணங்கள் பூரணமாக உண்டாகவில்லை. இக்காரணத்தால் இந்து முஸ்லீம் சண்டைகள் மதவெறி கொண்டு தலைவிரித்தாடுகின்றன.

ராமர்: அப்படியா? புத்தர் பிறந்த புனித நாட்டிலா?

நாரதர்: ஆம். அம்மட்டோ? முஸ்லீம்கள் பாரதப் பெண்மணிகளைக் கற்பழித்து மகம்மதிய மதத்தில் சேரும்படி வற்புறுத்துவதை பார்க்கவே சகிக்க முடியவில்லை.

ராமர்: ஹா! [தன் இரு கைகளாலும் இரண்டு காதுகளையும் பொத்திக் கொள்கிறார். முகத்தில் பயம், கோபம், வெறுப்பு, வீரம் முதலிய குறிகள் தோன்றுகின்றன] இது உண்மையா? நாரதரே!! ஈதென்ன அக்கிரமம்? ஓர் சீதா தேவியை ராவணன் சிறை எடுத்துச் சென்றதற்கே அவன் குலத்தையே நிர்மூலமாக்கினேன். இவ்வளவுக்கும் சீதையை அவன் நெருங்கக்கூடவில்லை. அவ்வாறு இருக்க இப்பேதை முஸ்லீம்கள் பாரத நாரீமணிகளை கற்பழிப்பதா? மதமாற்றமா? ஏ! இலக்குமணா!! எடு என்னுடைய கோதண்டத்தை; தூங்குகின்ற புலியை முஸ்லீம்கள் காலால் உதைத்து விட்டார்கள். அதன் பலனை கண்மூடும் நேரத்திலேயே அனுபவிக்கப் போகிறார்கள்.

நாரதர்: அவசரப்படாதீர்கள். எந்த பாரத தேசத்திற்கு தன்னுடைய உடல், பொருள், ஆவி எல்லாவற்றையும் தியாகம் செய்தாரோ அப்பெரியாரே இன்று கலகங்களை அடக்க முன்வந்துள்ளார். முஸ்லீம் இந்துக்களை ஒன்றுபடுத்த கடவுள் வாழ்த்துப்பாவில், "ஈஸ்வர அல்லா தேரே நாம் சப்கோ சன்மதி தேபகவான்" என்ற அடியைச் சேர்த்து 'முஸ்லீம் இந்து' எல்லோரையும் பாடச் செய்கிறார். நல்லுபதேசங்களை நவநவமாக வாரித் தெளிக்கிறார். ஸ்ரீமதி கிருபாளினியை உடன் அழைத்துச் சென்று மதமாற்றமடைந்த பெண்களைக் காப்பாற்றி, குங்குமம், வளையல்கள் கொடுத்து இந்து மதத்தில் சேர்த்துக் கொண்டார்.

ராமர்: இந்துக்கள், முஸ்லீம்கள் செய்யும் பாபச் செய்கைகளை பொறுத்துக்கொண்டா இருக்கிறார்கள்?

நாரதர்: இல்லை, இல்லை. தாங்கள் அவதரித்த நாட்டில்தானே அவர்களும் பிறந்திருக்கிறார்கள். இந்துக்களும் முஸ்லீம்களை அழிக்கத் தொடங்கிவிட்டனர். ஆயின் மகாத்மா தன்னுடைய அஹிம்சா தர்மத்தால் எல்லோரையும் சாந்தமடையச் செய்து வருகிறார்; செய்து விட்டார் எனவே கூறலாம்.

ராமர்: ஹா! புனிதக் குழந்தாய்!! மகாத்மா!!! என்னாலும் செய்தற்கரிய செயல்களையல்லவோ நீ செய்து முடித்திருக்கிறாய்? என் அமுதச் சுவையே! அன்பின கொழுந்தே!! [ஆனந்தத்தால் கண்ணீர் சிந்துகிறார்]

நாரதர்: உமது அருமைக்குழந்தை இம்மட்டோ செய்திருக்கிறான். இந்த தள்ளாத வயதில் முஸ்லீம் நிறைந்துள்ள நவகாளிக்குச் சென்று அவர்களுக்கு 'சாந்தம், ஒற்றுமை' இவைகளின் பெருமையை எடுத்து உபதேசித்தான். மகாத்மாவின் உபதேசங்களால், நல்லுரைகளால் அனைவரும் ஜாதி பேதமின்றி அவரை தங்களுடைய தெய்வமாகப் பாவிக்கின்றனர்.

ராமர்: நாரதரே! எனது அருந்தவப் புதல்வனின் அருஞ்செயலை நோக்க நான் ஓர் தூசுக்கும் ஈடாகமாட்டேன். நான் மிக அற்பன். [பெருமூச்சு விடுகிறார்].

நாரதர்: சரணாகதரக்ஷகனல்லவா நீர். ஈதென்ன ஆச்சரியம்? அங்கு பூவுலகில் தங்கள் காதற் செல்வன் தங்கள் அத்யந்த பக்தனாக இருந்து எல்லோரையும் ராம பஜனை செய்யும்படி தூண்டிக்கொண்டும் தான் ஒவ்வொரு விநாடியும் தங்களை பஜித்துக்கொண்டும் இருக்கிறார்.

ராமர்: என்னையா? பஜனையா? வெட்கக்கேடு. அந்த அஹிம்சா மூர்த்தியா இக்கொலைபாதகனை பஜனை செய்கிறான்? ஊம் [பெருமூச்சு விடுகிறார்].

நாரதர்: வள்ளலே! இது என்ன வேடிக்கை? தங்களுக்கு புத்தி ஏதேனும் பேதலித்து விட்டதா? திரேதாயுகத்தில் அவதரித்து நீர் செய்த புனிதச் செயல்களை, இன்னும் பாரதநாட்டில் புகழ்கிறார்களே! கதையாக, பாடலாக, கவியாக. உம்முடைய சரித்திரம் பாரதத்தாயின் ஒவ்வொரு அங்கத்திலும் பரிமளிக்க, தாங்கள் கூறுவது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

ராமர்: பாரத மக்கள் என்னையறியாது, நான் செய்த தவறுதல்களைத் தெரியாது, என்னைப் போற்றி புகழ்கிறார்கள்.

**நாரதர்:** தாங்களா? தவறு செய்தீர்களா? [ஆச்சரியத்தால் விழிக்கிறார்].

**ராமர்:** ஆம், கணக்கிட முடியாத தவறுகள் செய்திருக்கிறேன். அப்பொழுது என் புனிதக் குழந்தை மகாத்மா இருந்தால் எனக்கு அஹிம்சையின் தர்மத்தை எடுத்துக் கூறியிருப்பானே.

**நாரதர்:** தாங்கள் செய்த தவறுதல்கள் என்ன? அதைச் சொல்லுங்கள்.

**ராமர்:** சிறு வயதிலிருந்தே தவறுதான் செய்தேன். பாவம்! கூனி முதுகில் மண்ணுண்டையால் அடித்தேன்.

**நாரதர்:** அப்பா! இது ஒரு தவறு? குழந்தை விளையாட்டு?

**ராமர்:** அது போகட்டும். தேவியைக் காத்து நின்ற என் சகோதரன் இலக்குவனுக்கு என்ன பரிசளித்தேன்? தேவியின் கடு மொழியால் துன்புற்று வந்த அவனை நானும் சுடச் சுடக் கொடுத்தேன்.

**நாரதர்:** அடைக்கலப் பொருளை தன்னடக்கமின்றி காக்கத் தவறினன். அதனல் அவனை அன்புடன் கடிந்தீர். இலக்குவன் சக்தி ஆயுதத்தால் அடிபட்டுக் கீழே விழுந்தபொழுது தாங்கள் கதறியதைக் கண்டு, தங்களுடைய சகோதர அன்பைக் கண்டு கன்னெஞ்சும் உருகியதே.

**ராமர்:** நாரதரே! நான் மகா பாபி. அன்று என் மனைவியை அடைவதற்காக சுக்ரீவனுடன் நட்பு கொண்டு வாலியை மறைந்து நின்று அடித்துக் கொன்றேன். சே! என்ன இழிவான செய்கை? நினைத்தாலும் மனம் வெந்துவிடும். 'இன்னு செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல்' என வள்ளுவர் கூறியிருக்க எனக்கு ஓர்துன்பமும் செய்தறியாத வாலியைக் கொன்றதைவிட மறச் செய்கை எங்கேனும் தாங்கள் கேட்டிருக்கிறீர்களா?

**நாரதர்:** தாங்கள் சுக்ரீவனுக்கு அபயமளித்தீர்கள். அதன் காரணமாக வாலியைக் கொல்ல நேர்ந்தது. மேலும் காஞ்சனமாலையை வாலி அணிந்திருந்ததால் மறைந்து அடிக்கும்படி நேரிட்டது. இதில் என்ன தவறு இருக்கிறது?

**ராமர்:** இது குருட்டு சமாதானம். வாலியே பகைவனை அடக்கு முறையை ஓர் இடத்தில் காட்டி இருக்கிறான். வாலி சந்தியாவந்தனம் செய்து கொண்டிருக்கும்பொழுது தன்னை உபத்திரவப்படுத்திய ராவணனைக் கொல்லவாச் செய்தான்? தனது வாலினல் கட்டி அவன்

செருக்கைக் குலத்து புத்தி கற்பித்து துரத்தி விட்டான். நான் என்ன செய்தேன்? [பெருமூச்சு]

ராமர்: ஏன்? ராவணனையும் நான் கொன்றது தன்னலங் கருதியல்லவா அவன செய்த ஒரு சிறு பிழைக்காக அவன் குலத்தையேவோ அறுத்து விட்டேனே!

நாரதர்: ப்ரபோ! தாங்கள் வருந்துவது சிறிதும் நியாயமில்லை. குலசதளமே யாகுமாம் குணம். நிருதர் குலத்தில் பிறந்தவன் எவன் நல்லவன? அவர்கள் அழிந்தது நியாயமே.

ராமர்: என்ன நாரதரே! தாங்கள் கூறுவது? விபீஷணன் எந்த குலம்?

நாரதர்: அவன் ஒருவன் நல்லவனாக இருந்ததால்தான் அவனுக்குச் சரணளித்தீர்?

ராமர்: ராவணன் அவனுடைய சகோதரனல்லவா? எவ்விதத்தும் நான் சாந்தமாய் அவர்களுக்குப் புத்தி புகட்டாது கொன்றது நியாயமல்ல. இந்த என்னுடைய செய்கையை தமிழ் நாட்டுக்கவி கம்பர் நன்ருய்த் தன்னுடைய செய்யுளில் இடித்துரைத்திருக்கிறார்.

கார்த்த வீரியன் என்பானல்
  கட்டுண்டான் என்னக்கற்கும்
வார்த்தை உண்டு அதனைக்கேட்டு
  நாணுறும் மனத்தினேற்கு
போர்த் தொழில் பிறகிட்டு எற்ற
  புண்ணுடை தழும்புபோலாம்.

இச்செய்யுள் நான் கூறுவது போன்றே அமைத்துள்ளார். இராவணனைக் கார்த்த வீரியன் கட்டிச்சிறை வைத்துப்பிறகு புத்திபுகட்டி விரட்டி விட்டான். நானே அந்த இராவணனைக் கொன்றேன், இச்செய்கை முதுகில் புண்ணடைந்து தழும்பு பெற்றது போலல்லவா?

மற்ெருரு கவியையும் பாருங்கள். இதுவும் நான் கூறுவது போன்றே அமைத்திருச்கிருர்.

மாண்டு ஒழிந்து உலகில் நிற்கும்
  வயங்கு இசை முயங்க மாட்டாது
ஊன் தொழில் உகந்து தெவ்வர்
  முறுவல் என் புகழை உண்ண

பூண் தொழில் அமைந்த மார்பா!
போர் புறம் கொடுத்தாற் போன்ற
ஆண் தொழிலோரிற் பெற்ற
வெற்றியும் அவத்தம்!

ஆமாம்! நான் போர்க்களத்தில் மாண்டு ஒழிந்து வீரசுவர்க்கம் புகாது உண்டும் உறங்கியும் வாழ்கின்றேன். பகைவர்கள் என்னுடைய புலனடக்க மற்றச் செய்கையைக் கண்டு புன்முறுவல் என்ன? ஏளன நகைதான் செய்வார்கள். நானும் ஓர் ஆண் மகனு? என் வெற்றியும் ஓர் வெற்றியா? மகாத்மா அஹிம்சா தர்மத்தால், அறப்போரினுல், அன்பென்னும் ஆயுதத்தால், கொண்ட வெற்றியன்றோ வெற்றி.

["டமீர், டமீர், டமீர், என்று மும்முறை துப்பாக்கி வெடிக்கும் ஒலி கேட்கிறது].

ராமர்:—ஹா! நாரதரே!! ஈதென்ன ஒலி? [அங்கு ஓர் மூலையில் ஒலி பரப்புங்கருவி. "மகாத்மா சுடப்பட்டார், மகாத்மா சுடப்பட்டார்" என அலறுகிறது].

ஐயோ! நாரதரே!! என் குழந்தை!! என் அஹிம்சாமூர்த்தி [மூர்ச்சையாகி கீழ் வீழ்கிருர். நாரதர் பூவுலகுக்கு ஓடுகிருர்].

## காட்சி 3

இடம்:—பிர்லா மாளிகை.

காலம்:—மாலை ஆறுமணி.

[மகாத்மா புன்முறுவலுடன் இருப்பது போன்று படுத்திருக்கிருர். அவருடைய பூத உடலைச் சுற்றி அவருடைய பக்தர்கள் "வைஷ்ணவ ஜனதோ" பாடுகிருர்கள். அப்பொழுது புஷ்பக விமானத்தில் ராமர் தனது குழந்தையை, மகாத்மாவை இரு கையாலும் அணைந்து எடுத்துச் செல்லுகிருர். செல்லும்பொழுது],

ராமர்:—ஏ! நன்றிகெட்ட பாரத மக்களே! எவன் ஓர்ச் சிறு புழுவின் இரத்தமும் சிந்தச் சகியானே? எவன் பாரத நாட்டின் உயிரோ அப்பரமாத்மாவின் இரத்தத்துளியால் உங்களுடைய நாட்டை புனித மற்றதாகச் செய்துகொண்டீர்கள். உங்கள் நாட்டில் மழையின்றி போகக் கடவது. [மகாத்மாவின் ஆத்மா உணர்ச்சிகொண்டு எழுகிறது. அவ்வாத்மா ராமருடன் பேசுகிறது].

மகாத்மா:—ஆண்டவனே! பாரத நாட்டினர் நன்றியற்றவரல்ல. இது ஓர் அறியாக் குழந்தை செய்த சிறு தவறு. இதற்காக பாரத நாட்டிற்கே சாபங்கொடுப்பது நியாயமல்ல. என் பாரத நாட்டிற்கு சிறிது

தீங்கு ஏற்பட்டாலும் நான் சகியேன். தங்களிடம் அனுபவிக்கும் சுவர்க்க பதவியைவிட என் பாரத நாட்டின் எளியவர் குடிசையே எனக்கு ஆனந்த மளிக்குமிடம்.

ராமர் :—குழந்தாய்! நீயல்லவோ சுத்த வீரன். நீ விரும்பியதையே செய்வேன். ஆயின் ஓர் நிபந்தனை உண்டு. சத்தியம், சாந்தி, சகோதரத்வம் இக்குணப் பண்புகளில் உன் நாட்டு மக்கள் பூரணத்துவம் அடையவேண்டும். நாடு நன்னிலை அடையும்.


நாரதர் :—ஆம் உண்மை, உண்மை.

சாந்தி நிலவ வேண்டும் [பாடுகிறார்]

திரை விழுகிறது.

---


## ரூ. 10,000 மதிப்புள்ள அசல் கடிகாரங்கள் இனும்!



எமது கருப்பு ஹேர் ஆயில் நெ. 501 (ரிஜிஸ்டர்ட்) ஐ உபயோகித்தால் எத்தகைய கூந்தலும் கன்னங் கரேலென்று ஆகும். அந்தக் கருப்பு நிறம் எப்போதும் இருக்கும். மூளைக்கு டானிக். தலைமயிர் உதிருவதைத் தடுத்து அடர்த்தியாகவும் பளபளப்பாகவும், நீளமாகவும், சுருள் சுருளாகவும் வளரச் செய்யும். கண்பார்வை தீக்ஷண்யமாகும். தலையைக் குளிர்ச்சியாக்கும். ஒரு புட்டி விலை ரூ. 2-8-0. மூன்று புட்டிகள் விலை ரூ. 6-8-0. இந்த அற்புதத் தைலத்தைப் பிரபலமாக்குவதற்காக ஒரு அமெரிக்கன் கோல்ட் மோதிரமும் 12 வருஷ காரண்டியுள்ள அமெரிக்கன் கை கடிகாரமும் ஒவ்வொரு புட்டி தைலத்துடனும் இனும். மூன்று புட்டிகள் வாங்குபவர்களுக்கு 3 அமெரிக்கன் கோல்ட் மோதிரங்களும் 3 கை கடிகாரங்களும் இனும்.

குறிப்பு: பிடித்தமில்லாவிடில் பணம் வாபஸ். ஏமாற்றமடையாதிருக்க, உடனே ஆர்டர் செய்யுங்கள். ஆர்டரையும், விலாசத்தையும் இங்கிலீஷிலேயே எழுதவும்.

சந்நியாசி ஆயுர்வேத பார்மஸி (K.M.) ஹால்கா நம் 22, அமிர்த்ஸார்

SANYASI AYURVEDIC PHARMACY (K.M.)
Halka No. 22, (P. P. M.) Amritsar.

# வசீகரம்

(புனிதவதி)

வசீகரத்திற்கு உடையும், நகையும் பெரும் பொறுப் பேற்கின்றன. மராட்டியர் அதிக ரூபலாவண்யவதிகளா யில்லா விட்டாலும் அவர்களுடைய 'சோளி' ரவிக்கையும், 'கொட்டடி' புடவையும், மூக்கில் நத்தும், கழுத்தில் கருகு மணியும் சேர்ந்து வசீகரத்தைப் பன்மடங்கு அதிகரிக்க வைக்கின்றன என்றால் மிகையாகுமா?



மராட்டியரின் உடையை தற்காலத்துத் தென்னாட்டுச் சிறுமிகளும 'காப்பி'யடித்து வருகிறார்கள். வயிற்றின் மடிப்புகள் தெரிய கோடுகளிட்டத் துணிகளில் இறுகலாக கைகளுக்குக் கரைவைத்துத் தைக்கப்பட்ட ரவிக்கைகளை உபயோகிக்கிறார்கள். ரவிக்கைக் கழுத்திற்கு மேல் கருகு மணியும் காரையும் அணிந்திருப்பார்கள்.

மராட்டியர் வெப்பப் பிரதேசத்திலிருப்பதாலும், வயல்களிலும், திறந்தவெளிகளில் வேலை செய்வதாலும் தலையைப் புடவைத்தலைப்பால் மூடிக்கொள்வது வழக்கமாகப் போய் அம்முறை ஜாதிக்கட்டுப்பாடாக மாறிவிட்டது.

வெள்ளையர்கள் தொப்பி அணியும் வழக்கம் கேரள தேசத்திலிருந்து ஏற்பட்டதாக சரித்திரம் கூறுகிறது. கோரையினுல் பின்னப் பட்ட உடைகளை தலைக்கு அணிந்து கொண்டு பொசுக்கும் சூரியனிடமிருந்து தப்பித்துக்கொண்டு கேணிகளிலும், வயல்களிலும் வேலைசெய்து வந்தனர். அம்முறையைக் காப்பி அடிக்க வந்தனர் வெள்ளையர். சமூகம் பூராகவும் அப்பழக்கம் மாறி அது ஒரு 'பாஷனுக' மாறிவிடவில்லையா?

கரை போட்ட புடவையை 'முஸ்கு' போட்டுக்கொண்டு மராட்டியர் வீட்டுக் காரியங்கள் செய்வதைக் காண வெகு அழகாக இருக்கும். அவர்கள் தினந்தோறும் உடுத்திக்கொள்வது நூலில் குறுக்கும் நெடுக்குமாக கோடிட்ட புடவைகள் தான். பூராகவும் நூலாகவோ, நூலும் பட்டும் கலந்தோ தானிருக்கும்.

நம்மிடையே கல்யாணக் காலங்களிலே கொட்டடி புடவைகளை உபயோகப் படுத்துகின்றனர். நிரம்ப சரிகை போட்டிருக்கும். ஆனுல் அவர்களுடைய ஆடை ஆபரணங்கள் குறைந்த விலையுள்ளதாயும், அதிக எழில் தருவனவாகவும் இருக்கின்றன.


## சினிமா நடிகர்கள்

மாதம் ஒன்றுக்கு ரூ. 100—1500 வரைக்கும் ஊதியம் பெறும் சினிமா நடிகர் ஆவதற்கு விரும்புவதாயிருந்தால் எங்களுக்கு எழுதுங்கள். சிறிது எழுத படிக்கத் தெரிந்தால் போதும். உங்களுடைய முழுடபெயரும், விலாசமும் எழுதுங்கள்.

**அமெரிக்கன் கார்பொரேஷன், ஹால்கா 22 (K.M.), அமிர்த்ஸார்**

**American Corporation, Halka No. 22 (K M.), Amritsar**

# "தியாகி யார்?"

(ருக்மணி எஸ். வி. ராஜகோபாலன்)

தண்மை பொருந்திய வெண்மதி இவ்வுலகத்தை அழகு படுத்த கீழ்த்திசை அடி வானத்திலிருந்து வேகமாக மேலே வந்துகொண்டிருந்தது. மதியின் தன்மையிலே தண்மை யிருப்பினும் வேகத்திலே மென்மையில்லை. வானளாவி நின்ற மரங்களின் கிளைகளை யெல்லாம் ஒரே மூச்சில் கடந்து மேன் மேலும் வான வீதியில் பிரயாணத்தி லீடுபட்டிருந்த அன்றைய மதியின் முகத்திலே மகிழ்ச்சியில்லை. முகத்திலே களங்கத்துடன் மூவுலகையும் கவர்ச்சிக்கும் அந்த எழில் மதி ஏதோ ஒரு விபரீதத் தோற்றத்துடன் விளங்குகிறானென்றால் அதற்குக் காரணமு மில்லாமலில்லை.

'ஹூம்' என்ற பெரு மூச்சுவிட்டு கலவரம் நிறைந்த உள்ளத்துடன் தன் கடமையை ஆற்றும் கருவியாக பிரகாசிக்கலானான். "ஐயோ! இன்றைய தினம் இருண்டதொரு அமாவாசையாக யிருந்திருக்கக் கூடாதா?" என்று ஏங்கித் துடிப்பது போன்ற காட்சியுடன் மேல் வானத்திலே முன்பை விட சற்று நிதானமாகச்சென்று தன்னெதிரே கூடிவரும் கார் முகில் கூட்டத்தினுள் புகுந்தான். அதன் பின்புகூட பூமியின் மேற்பரப்பிலே காணப்படும் அக்கோரக் காட்சி அவனது இருதயத்தை விட்டு இளகியோடவில்லை. என்ன பயங்கர படுகளம்! எவ்வளவு பிணங்கள்! பிறப்புரிமைக்காக தன்னுடலைப் பிணமாக்கிக்கொண்ட தியாகிகளின் அலங்கோலக் காட்சி! இன்னும் சற்றே இருண்டிருந்தால் நாயும், நரியும், வீரர்களின் சடலத்தை சுவைக்க நேரிடும். இச்சந்தர்ப்பத்திலே இருளை விலக்க வேண்டியவனைப் சந்திரன் அப்போர்க் களத்தை எட்டிப்பார்த்தான். கடமையாற்றிய கர்ணனைப்போல.

காலம் முதுமையுற்று அகாலமாகி யிருந்தது. பாஞ்சாலக் குறிச்சி பயங்கரமானதொரு படுகளமாக மாறி ஆங்காங்கே பிணக் குவியல் கற்குவியலென காணப்பட்டன. குற்றுயிர் வீரர்கள் குருதிக் குட்டையிலே மிதந்துகொண் டிருந்தனர். ஒடிந்து பிரிந்துவிட்ட கால்கள், சிதறிய தலைகள், குடல் சரிந்த வயிறு, உடலுடன் ஒட்டிக்கொண்டு துன்புற்ற அங்கங்கள்

இப்படியாக மனித உடல்கள் போர் ஆயுதங்களின் பசியைத் தணித்து சிதறிக் கிடந்தன. அக்கோரக் காட்சியைக் காணும் பேய்கள்கூட குலை நடுங்கி நிற்கவேண்டி யிருக்கும். உயிரிழந்து கிடந்தவர்களைவிட உயிரிழவாமல் கிடந்த பாஞ்சாலக் குறிச்சியின் பரம்பரை வீர சிகாமணிகளின் உடல்கள், தங்களுடைய பாளையத்தைப் பறங்கிகளின் கையில் விட்டுவிட உள்ளம் சகியாமல் துடித்துக்கொண்டிருந்தன போலும்! "நமது நாடு; நமது தமிழகம்; நமது பிறப்பிடம்; நமக்குத்தான் சொந்தமே தவிர எங்கோ யிருந்து வந்த வெள்ளைக்காரர்களுக்கல்ல" என்ற எதிரொலி அப்போர்க்களத்தையே வலம் வந்து ஒலிப்பன போலத் தோன்றியது.

இப்படியாக படுகளத்திலே பிணங்களைக் குவித்துவிட்ட எதிரிப் படைகள் தங்கள் குதிரைகளில் ஏறி கும்மாளமாகச் சென்றனர். பாசறையான பாஞ்சாலக் குறிச்சி கோட்டையை நோக்கி, ஆங்கிலேய தளபதி ஆக்னியுவின் முகம் அளவிலா ஆனந்தக் களிப்பிலே பூரித்துப்போயிருந்தது. "ஆற்காடு நவாப் மண்டியிட்டு சலாம் செய்யும்பொழுது பாளையக்காரர்களின், தலைவனான இந்த கட்டபொம்மனுக் கென்ன அத்தனை ஆணவம்? இன்றுடன் அவனையும் அடக்கியாகிவிட்டது. இனி ஆங்கில கம்பெனியாரின் ஆதிக்கத்தைக் குலைக்க ஆண்டவனாலும் முடியாது" இத்தகைய மமதை வெறியிலே ஆங்கில வீரர்கள் ஆர்ப்பாட்டமாக யிருந்தனர்.

அத்தகைய மமதையும் ஆதிக்க வெறியுங்கொண்ட ஆங்கிலப்படையை சின்னாபின்னமாக்க யெண்ணி தியாக தீரத்துடன் போர் புரிய முன்வந்த வீரன் கட்டைப் பொம்மன். பாண்டி நாட்டு பாளையங்களில் ஒன்றாகிய பாஞ்சாலக் குறிச்சியின் அரியாசன மேறியவன். அவ்வரிய ஆசனத்தின் கடைசீ அரசன். தங்கள் குல கௌரவத்தைக் காத்து சரித்திர ஏடுகளிலே என்றென்றும் அழியா சிறந்த புகழைச் சம்பாதித்து வைத்தவன்.

ஜக வீர பாண்டியனென்ற பாளையக்காரருக்கும் ஆறுமுகத்தம்மாள் என்ற அருங் குணவதிக்கும் மும்மணி மைந்தர்கள் பிறந்தனர். முதலவர் கட்டபொம்மன், இரண்டாமவர்

தளவாய் குமாரசாமி என்ற அதிபராக்ரமசாலி, மூன்றுமவா ஊமைத் துரை என்ற வீரச் சிங்கம்.

இந்த தீரக்குடும்பம் இன்றைய திருநெல்வேலி ஜில்லா விலே கோயில்பட்டி தாலுக்காவில் ஒட்டப் பிடாரத்துக்கு அருகாமையில் பாஞ்சாலக் குறிச்சி என்று வழங்கப்பட்ட இடத்திலே குல கௌரவத்துடன் வாழ்ந்து வந்தது.

இது சமயம் 1801 ஆம் ஆண்டில் ஆங்கில வியாபாரக் கம்பெனியின் பேராசைப் பேய்கள் தமிழகத்தைச் சுருட்டி விழுங்கி ஏப்பமிட முனைந்தனர். இவர்களது அடாத செய லைக் கண்டித்து இவர்களை விரட்டியடிக்க வேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்ட கட்டைப் பொம்மனும் அவனது இளைய சகோதரனான ஊமைத் துரையும் ஒன்று சேர்ந்து படை திரட்டினர். பாளையக்காரர்களின் படையைக் கண்டு பறங்கிக்காரர்கள் குலை நடுங்கலாயினர். கட்டபொம்மனை விட ஊமைத்துரை யென்றால் பாஞ்சாலக் குறிச்சி மக்களுக்கு பால் பொங்கி யெழுவதுபோன்ற மகிழ்ச்சி யுண்டாகும். ஊமைத்துரையே அவர்களது நடமாடுந் தெய்வம். பட்டா ளத்து வீரர்கள், அவனே சிறந்த தளபதியென்னும் தமிழ் மரபின் தகைமைசால் வீரனென்றும் பறை யறைவித்துப் போற்றினர்; பாராட்டினர். ஊமைத் துரையின் உத்வேக சக்தி ஊருடன் திரண்டு உணர்ச்சியுடன் தாக்கியது.

ஆங்கிலேய கம்பெனியின் கையாட்களாக தேசத்தைக் காட்டிக் கொடுத்த காவாலிகள் பாஞ்சாலக் குறிச்சியாரை போர்க்களத்திலே சந்தித்தனர்.

வெளியிலிருந்து வந்து புகுந்த வெள்ளையரை வெறுத்து, சமயத்தை எதிர் நோக்கி ஆழக் குழி பறித்துக்கொண் டிருந்த ஊமைத்துரை ஆங்கிலேயரை ஆலிலை சருகென ஊதி விட திட்டமிட்டிருந்தான். அவனது அஞ்சா நெஞ்சமும் ஆத்ம பலமும் பாஞ்சாலச் சேனையை பன் மடங்கு ஊக்கி யிருந்தன.

ஒரு நாள்....

அந்த நாள் மிகவும் துக்ககரமான நாள்; துன்பம் மிகுந்த நாள்; துயரத்தின் சிகரமேறிய நாள். யாருக்கு? பாஞ்சால வீரர்களுக்கு. பிறப்புரிமைக்குப் பாடுபட்ட பாளையக்காரர் களுக்கு. சுதந்திர வாழ்க்கையிலே மோகங் கொண்ட சுத்தத் தமிழ் மரபினருக்கு. ஆனல்....ஆங்கிலேயருக்கோ....சொல்ல மனமிடந்தரவில்லை....ஆஹா!

நல்ல நாள். இன்றைய ஒன்றறை வருடங்களுக்கு முன்பு வரை நம்மைக் கட்டி அடிமையாக்கி ஏகபோக மனு பவிக்கத் தக்கதொரு சூழ்ச்சிக்கு ஆழமான அஸ்திவாரம் நிலை பெற்ற நாள்.

போர் நடைபெற்றது. ஆங்கிலேயரின் ராஜதந்திர சூழ்ச்சியில் சிக்கிய எட்டையாபுரத்தினர் தங்களது தேச மக்களையே எதிர்த்து நின்றனர். தீர்க்கமும் திறமையும் நிறைவுற்ற போர்.

ஊமைத்துரை தன் உயிரை குறிச்சிக்குக் காணிக்கை யாக வைத்து கடும் போரில் கலந்து கொண்டான். படைகளை இயக்கி முன்னணியில் நின்று முனைந்து போரிட்டான். சகாக்களுக்கு அவ்வப்போது ஊக்க மளித்து உவகையுடன் பொருதுற்ருன்.

ஆங்கிலப்படையும் அஞ்சாமல் நின்றது. ஆற்றலுடன் போரிட்டது அடிமையைக் கையாள.

மாலை நேரம்.

அந்தி சூரியனின் செந்நிற கிரணங்கள் பஞ்சாலக் குறிச்சியின் படுகளத்திலே ஊடுருவிப் பாய உவகை யின்றி தவித்துக் கொண்டிருந்தன. குருதி வழிந்தோடும் வீரர்கள் குற்றுயிராகக் கிடந்தனர். அவர்களது முகங்களிலே வீரக் களை மட்டும் தாண்டவமாடிக் கொண்டிருந்தது. மார்பகங் களிலே ஆங்கிலேயரின் துப்பாக்கி ரவைகளினல் துளைக்கப் பட்ட காயங்கள். பாஞ்சாலக்குறிச்சியினர் சோர்வுற்றனர். சீர்குலைந்து தோல்வியுற்றனர்.

வெற்றிகண்ட வெள்ளையர் மதுவுண்ட குரங்கு கூட்ட மென கூடாரத்தில் சென்று குதூகலித்தனர். பல நாளைய

பாளையக்காரரது கனவு பகற்கனவாக முடிந்தது. நினைவு நீருபூத்த நெருப்பாகியது.

பாஞ்சாலக்குறிச்சியாரின் படையிலே சேர்ந்து போர் புரிய, தேவியை வணங்கி குங்கும திலகமிட்டு தங்கள் மைந்தரையும், கணவரையும் போர்க்களத்திற்கு அனுப்பிவைத்த குறிச்சியின் வீரப் பெண்மணிகள் படுகளத்தைப் பார்வையிட அந்தி நேரத்திலே புறப்பட்டனர். மாண்டவர்களையும் காயமுற்றவர்களையும் கண்டு ஒப்பாரி பாடி அழுவதற்கல்ல. "அவர்கள் வீரச் சாவு எய்தினரா? அல்லது தோல்வி கண்டு புறமுதுகிட்டோடி மாண்டு மடிந்தனரா" என்ற சோதனையிலீடுபட்டு தியாக மகிழ்ச்சியுறவே விரைந்து சென்றனர் அக்கிராம மாதர் மாணிக்கங்கள்.

படுகளத்தின் கோரக் காட்சி பாளையக்கார தீர தாய்மார்களின் வீர மனப்பான்மையை குலைக்க முடியவில்லை. பிணமாகிய வீரர்களின் காயங்களை பார்வையிட்டனர். அவைகள் யாவும் மார்பகங்களிலேயிருக்க மகிழ்ச்சியுற்றனர்.

அதன் பிறகு வீரர்களை அப்புறப்படுத்தி அந்திமகால சடங்குகளைச் செய்ய அப்பெண்மணிகள் முனைந்துவிட்டனர்.

தாய்மார்கள் தங்களது சேய்களைத் தேடி யலைந்தனர். அந்நிலையில் மறவர்குல மரபில் தோன்றிய தாய் ஒருத்தி போர்க்களம் புகுந்த தன் இளமகனைத் தேடி அலைந்தாள். வெகு நேரம் தேடினுள். மகன் மடிந்து விட்டிருப்பானென்ற கவலை அவளுக்கில்லை. ஆனல் அவனது மரணம் தன் தாய்க்கு பெருமை கொடுக்கக் கூடியதா? தன் நாட்டிற்கு இழுக்கு தரத்தக்கதா? அதுவே அவளது விருப்பமும், ஆத்திரமும்.

அப்புனிதத் தாயின் எண்ணம் குலைந்து விடவில்லை. கண்டு பிடித்த தன் இளமகனை வாரி மடியிலிட்டு குற்றுயிரும் கொலை உயிருமாக குருதிக் குட்டையிலே மிதந்த அவ்விளங் காளையின் உடலைப் பரிசோதித்தாள். தாயின் மார்பகம் அகன்று விரிந்து மேலேறி மகிழ்ச்சியுற்றது. அவனது மார்பக காயங்களைத் தன் விரல்களினல் தடவிக் கொடுத்தாள்.

மகன் தாயின் முகத்தில் தன் இறுதிப் பார்வையைச் செலுத்தினன். தாய் மகனைத் தூக்கி இல்லம் கொண்டு செல்ல முயன்ருள். ஆனல் மரண வாசலில் நிற்கும் மைந் தன் தாயிடம் ஏதோ சொல்ல வாயெடுத்தான். பற்கள் கட்டிக்கொண்டு விட்டன. அந்நிலையிலும் அவன் பேசாம லிருந்து விடவில்லை.

“தாயே! தங்களது தாயுள்ளம் இவ்வகால நேரத்தில் போர்க்களம் புகுந்த புதல்வனைக் காண விரைந்து வந்திருக் கின்றது. அத்துடன் தன் மகனெரு சுத்த வீரனென்பதை யும் கண்டு களித்து விட்டது. தாயே! தங்களுக்கு நான் ஒரே புதல்வனுயினும் என்னை இந்நிலையிலிருந்து மீட்கும் பிரயத்தனத்தை தாங்கள் கைவிட்டு விடவேண்டும். என்னை மீட்டு அதன்படி நான் செய்யப் போகும் காரியமெதுவு மிருப்பதாகத் தெரியவில்லை.

நம் பாஞ்சாலக் குறிச்சியை வெள்ளையர் ஒழித்துக்கட்ட திட்டமிட்டிருக்கின்றனர். குறிச்சி வீழ்ந்தால் தமிழ் மரபின் தனிப் பெரும் வீரம் குன்றிவிடும். தமிழகம் கம்பெனியாரின் ஆதிக்கத்திலே அழிந்து விடும்.

இதனைத் தடுக்க தாயே....தாங்கள் என் வேண்டுகோளை யேற்க வேண்டும். இனி அரை கணமும் தாமதிக்காது அதோ காயமுற்றுக் கிடக்கும் நமது வீர தளபதி ஊமைத் துரை சிங்கத்தை யெடுத்துச் சென்று சிகிச்சை யளித்து காப்பாற்றுங்கள். அவரது வீரமும், தியாகமும், என்போன்ற பல்லாயிர உயிர்களைக் காத்து நாட்டுப் பெருமையையும், நம் குல மானத்தையும் குன்றின் மீது வைக்கப்பட்ட விளக்கென பிரகாசிக்கச் செய்வார். அவர் வாழ்ந்தால் நம் நாடு தீங் கின்றி வாழும். அவரது தலைமை நிலைக்குமானல் நமது பிறப்புரிமை நிலைக்கும்.

ஆகையால்....அம்மா....என்னை நினையாதீர்கள்! உங்கள் அருமை மகனை யெண்ணி கலங்காதீர்கள்! உங்கள் தீரத்தை தமிழகம் கண்டு வியக்கத்தக்க முறையிலே இன்று தாங்கள் செய்யப் போகும் தியாகம் என்றென்றும் தமிழ் மாதர்களின் வீரத்தை எடுத்துக் காட்டட்டும்.

எங்கே என்னை விட்டுவிடுங்கள். எழுந்து சென்று நம் துரையை வாரியெடுங்கள். அவரை கண்ணென கண் காணித்து சிகிச்சை யளியுங்கள். உங்கள் உதவியிலே துரைச் சிங்கம் பிழைத்துக் கொண்டால் அதுவே நம் பாளயத்தைக் காத்து பறங்கியர்களை அழித்த அளவுக்கு பயன்படும். எங்கே! தாயே! புறப்படுங்கள்."

இது குற்றுயிராகக்கிடந்து நமனுடன் போராடும் ஒரு மறவர் குல வீர மகனின் வேண்டுகோள். தன்னருமை மகனின் தியாகத்தைச் செவிமடுத்த தாய் மடியில் கிடந்த மைந்தனைப் போர்க்கள புழுதியிலே கிடத்தி விட்டு புறப்பட்டாள் புதல்வனின் போதனையை நிறை வேற்ற.

உயிருக்கு ஊசலாடிய ஊமைத்துரையை யணுகினாள் அப்புனிதவதி. தலைவனின் பரிதாபக் காட்சியைக் கண்ட அவள் மற்றும் ஒரு சில பெண்களை யழைத்து ஊமைத் துரையை தன் இல்லம் கொண்டு சேர்த்தாள்.

தன் மைந்தனின் விருப்பம் போல தாயும் தலைவனை தன் மகனைப் போலப் பார்த்தாள். ஊமைத்துரையின் காயங்கள் குணமாயின. ஊமைத்துரை உயிர் பெற்று புத்தொளியுடன் கிளம்பினார்.

---

"உன்னருமை மகனைக் கொன்ற வெள்ளையரைச் சின்னா பின்னமாக்குவேன். இல்லையேல் வீர சொர்க்கம் சேர்வேன்" என ஆர்ப்பரித்தான் ஊமைத்துரை.

மைந்தனின் தியாகமும், புதல்வனைப் பெற்றெடுத்த தாயின் வீரமும், பாளயத்தைக் காக்கப் பாடுபட்ட துரைச் சிங்கத்தின் தீரமும் பாஞ்சாலக் குறிச்சியின் தேடிக் கிடைக்காத திரவியங்கள். தமிழகம், இவர்களில் யாரைத் தியாகி யென மதிப்பதென முடிவின்றி விழிக்கிறது. பெருமையுடன் மார்புயற பெருமிதங் கொள்கிறது.

# பெண்களின் பொறுப்பு

(தென்னுப்பிரிக்கா—டர்பன் திருமதி ச. மு. பிள்ளை)

இப்பொழுது நமது ஜன சமூகத்தில் காணப்படும் ஊழல்களைச் சொற்பகால உழைப்பினுல் நீக்கிவிடலாமென்று எண்ணுவது பகற்கனவேயாகும். இந்த சமூக ஊழல்களுக்கு மூல காரணமாயிருப்பது எது என்று நாம் நுட்பமாக ஆராய்ச்சி செய்தால், நமது சமூக வாழ்வில் பெண்கள் முக்கியஸ்தானம் பெருமையே எல்லாத் தீமைகளுக்கும் மூலகாரணம் என்பது இனிது விளங்கும்.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் குடும்பத் தலைவி பெண்ணுகவே இருக்கிருள். குடும்ப வாழ்வில் பெண்ணுக்கே புருஷனை விட அதிகப் பொறுப்பு ஏற்பட்டிருக்கிறது.

இல்லாள் அகத்திருக்க இல்லாத தோன்றில்லை
இல்லாளும் இல்லாளே ஆமாகில்

என்னும் ஔவை மொழியும் இதனையே வலியுறுத்துகின்றது.

குடும்ப அங்கத்தினரின் க்ஷேமத்தைப் பாதுகாப்பதும், குடும்பத்தாரை நல்வழிப் படுத்துவதும் பெண்கள் கடமையாக இருக்கிறது. ஒரு சமூக மக்களை நல்லவராக்கவோ தீயவராக்கவோ பெண்களுக்கு சக்தியுண்டு. ஒரு சமூகத்தை உருப்படுத்தும் பொறுப்பு இயல்பாக மாதரிடமே அமைந்திருக்கிறது. உலகத்தில் பெயர்பெற்ற மகான்களின் சரித்திரங்களை நுட்பமாக ஆராய்ந்து பார்த்தால் அவர்களுடைய உயர்ச்சிக்கும் புகழுக்கும் காரணமாயிருந்தது அவர்கள் தாய்மாரே என்ற உண்மை நிச்சயமாகப் புலனுகும். "என் பன்னிரண்டு புத்திரர்களும் போர்க்களத்தில் இறந்தாலும், அவர்களில் ஒருவனுவது வீட்டில் சோம்பி யிருப்பதை நான் பொறுக்கமாட்டேன்" என்று கூறிய "வனப்னியோ" என்ற உரோம மாதைப்போன்ற வீரத் தாய்மாரையுடைய சமூகம் முன்னேற்ற மடையாதொழியுமோ?

குடும்பத்துக்கும், சமூகத்துக்கும், தேசத்துக்கும் அவமானத்தை யுண்டுபண்ணும் அதம புத்திரர்கள் தோன்றுவதற்குக் காரணம் உத்தமத் தாய்மாரின் குறைவேயாகும். மாத்ரு

தர்மத்தைச் செவ்வனே யுணர்ந்த தாய்மார் வாழும் நாடே நன்னாடு—பொன்னாடு—புனிதநாடு.

மாதர்களின் முதற்கடன் இல்லறம் நடத்தலே யாகும். மேனாடுகளில் பெண்கள் தேசிய விஷயங்களில் தாராளமாக ஈடுபட்டு உழைக்கின்றனர். கீழ் நாடுகளிலும் பெண்கள் ராஜீய விஷயங்களில் ஈடுபட முன் வந்திருக்கின்றனர். பெண்கள் ராஜீய உழைப்பில் ஈடுபட வேண்டியது தேசீய முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது என்று ஒரு சாரார் கூற்றம் செய்கின்றனர். ஆகவே மாதர்களின் முதற்கடன் இல்லறம் நடாத்தலே என்று கூறியது பொருந்துமா என்று சிலர் சந்தேகம் கொள்ளலாம். இல்லறத்தின் புனிதத் தன்மையையும், மேப்பாட்டையும் பற்றிச் சிறிது சிந்தனை செய்வோருக்கு இந்த சந்தேகம் உண்டாகவே செய்யாது. மனித வாழ்க்கையை நரகமாக்கவும் சுவர்க்கமாக்கவும் உள்ள சக்தி மக்களிடத்திலேயே இருக்கிறது. உலகம் தோன்றியது முதல் நாளது வரை மகான்கள் செய்துள்ள அரும்பெரும் காரியங்களுக்கெல்லாம் மூல காரணமாயிருப்பது தாய்மாரேயாகும்.

இல்லற மகிமையைச் செவ்வனே அறிய வேண்டுமானால், அதன் ஒவ்வொரு பகுதியையும் நாம் ஆராய்ந்துணரல் வேண்டும். மனைவியின் முதன் கடமை கணவரைப் பேணல். இரண்டாவது கடமை மக்களைப் பேணல். கணவரைப் பேணல் மாதர்களின் முதற் கடமை என்று கூறும்போது தற்காலப் பெண்களுக்கு வெறுப்புண்டாகக் கூடும். அவ்வாறு அவர்களுக்கு வெறுப்புண்டாவதற்குக் காரணம் கணவரைப் பேணல் என்னும் சொற்றொடரின் உட்பொருளை அறியாமையே யாகும்.

கணவனுக்கு சதா அடங்கி நடப்பதும், அவனுக்கு மகிழ்ச்சி புகட்டுவதும், சிற்றின்ப சுகமளிப்பதும் பெண்களின் கடமை என்றெண்ணுவது தவறானதாகும். குடும்பத்தைக் காப்பாற்றுவதற்கும், சமூக தேசமும் முன்னேற்றமடைவதற்கும், அல்லும் பகலும் உழைக்கும் ஒரு புருஷனைப் பேணுவது அவனது மனைவியின் கடமையல்லவா? அத்தகைய புருஷனைப் பேணுவதைப் பெண்கள் ஒரு பெருமையாக மதியார்களோ? ஒரு உத்தம கணவனுக்கு ஊழியம் செய்யும் மனைவி, மறைமுகமாக உலகத்துக்கே ஊழியம் செய்கிறாள் என்பதை யாவரும் மனதில் பதிக்கவேண்டும்.

மக்களைப் பேணல் மாதர்களின் நீங்காக் கடன். பெண்கள் இந்தக் கடனை மிக்க பயபக்தி விசுவாசத்துடன் ஆற்றல் வேண்டும். இந்தக் கடன் ஜாதிமத வித்தியாசமின்றி எல்லா மாதர்களுக்கும் பொதுவானதாகும். உலகத்தின் பிற்கால நிலை பெண்கள் கையிலேயே அடங்கி யிருக்கிறது. லோக நாயகனாகிய கடவுள் மக்களைப் பேணும் உயரிய பரிசுத்தமான கடமையை மாதர்களிடம் ஒப்படைத்திருக்கிறார்.

இந்த சந்தர்ப்பத்தில் ஓர் தமிழறிஞர் இந்தியத் தாய்மாரை நோக்கிக் கூறிய பொன் மொழிகள் என் ஞாபகத்துக்கு வருகின்றன. அவையாவன:—குழந்தைகள் துஷ்டர்களாய் வேண்டுமானாலும் போகட்டும், ஆனால் அவர்களைப் பயங்காளிகளாக மட்டும் ஆக்கிவிடாதீர்கள். "நெல்சன் என்னும் ஆங்கிலக் கப்பல் வீரன் சிறு பையனாக இருக்கும் போது ஒரு நாள் முழுதும் காட்டிலும் மேட்டிலும் அலைந்துவிட்டுச் சாயங்காலந் தான் வீட்டுக்கு வந்தானாம். அவன் பாட்டியார் "தெரியாத இடங்களெல்லாம் சுற்றினாயே, உனக்குப் பயமாக இல்லையா?" என்று அவனைக் கேட்டதற்கு "பயம் எப்படியிருக்கும் பாட்டி, சொல்லு!" என்று நெல்சன் பதில் சொன்னானாம். ஜப்பானில் சாமுராயர்களின் குழந்தைகளுக்கு ஐந்து வயதானதும் அவர்களைத் துணையின்றிச் சுடுகாட்டுக்கு அனுப்பி அங்கிருக்கும் எலும்புகளைப் பொறுக்கி வரச்சொல்லுவார்களாம். ஸ்பார்த்தாவில் மனவுறுதி காட்டாத குழந்தைகளை ஜாதியிலேயே சேர்த்துக்கொள்ள மாட்டார்கள். நம்முடையமுன்னோர்களும் வீரத் துறைகளில் தங்களுக்கு யாரும் நிகரில்லை என்று சொல்லும்படி நடந்துகொண்டார்கள். நீங்களும், உங்கள் பிள்ளைகளை சிவாஜி போலவும், பிருதிவிராஜன் போலவும், தேசிங்கைப் போலவும் பிரகலாதனைப் போலவும், துருவனைப் போலவும், குரு கோவிந்தன் புத்திரரைப் போலவும், தயாநந்த சரஸ்வதி போலவும், நிர்ப்பயர்களாய், தைரிய லக்ஷ்மி பிரசன்னர்களாய் இருக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு வளர்த்தீர்களானால், நாட்டில் தீரம் பெருகும். உங்களுக்கும் வீரத் தாய்மார் என்ற பெயருண்டாகும்.

மக்களை உத்தமர்களாக வளர்ப்பதே பெண்கள் சமூக முன்னேற்றத்திற்காகச் செய்ய வேண்டிய பெரிய வேலை.

# கடிதங்கள்

அன்புள்ள சரோ,

எனது நல் வாழ்த்துக்கள். உனது கடிதம் கிடைத்தது. ஆனால் கடந்த இரண்டு வாரங்களாகக் கிராமப் புனருத்தாரணத் தொண்டர் படையோடு பல் வேறு கிராமங்களுக்கும் சென்றிருந்ததால் உனது கடிதத்தை உடனே பெற முடியவில்லை. எனினும் கடிதம் கிடைத்தவுடன் உனக்கு இந்த பதிலை அனுப்பியிருக்கிறேன்.

கல்லூரி மாணவர்கள் சுமார் இருபது பேர் கூடி காந்திய அடிப்படையில் கிராமப் புனருத்தாரண வேலையை ஆரம்பிப்பது என்ற முடிவுக்கு வந்தோம். விடுமுறை நாட்களை, நாட்டின் நலன் கருதிக் கழிக்க வேண்டுமென்ற ஆர்வமே இதற்கு காரணம். இன்றைய இந்தியாவிலே சுமார் ஏழு லக்ஷம் கிராமங்கள் உள. ஒவ்வொரு பத்து இந்தியரில் ஒன்பது பேர் கிராமவாசி. அவ்வொன்பது பேரில் ஏழுபேர் விவசாயிகள். ஆகவே நாட்டின் ஜீவ நாடி கிராமங்களே. ஆனால் நாட்டின் முதுகெலும்பாக விளங்கும் இக் கிராமங்களின் நிலை இன்று மிகவும் சீர் கேடடைந்துள்ளது. இன்றைய நகரங்களில் வாழும் பெரும்பான்மை மக்களுக்கு கிராமங்களைப்பற்றி மிகக் கொஞ்சமாகவே தெரியும் என்பது என் கருத்து. இதை என் சொந்த அனுபவத்திலிருந்து சொல்கிறேன்.

நாங்கள் கிராமங்களுக்குச் சென்ற போது, இதுவரை கண்டிராத புதிய அனுபவங்கள் ஏற்பட்டன. உல்லாச வாழ்விலே ஊறி, உலகை மறந்து வாழ்ந்த கல்லூரி மாணவர்களைத் தமது சீர் கேடடைந்த கிராமங்களிலே காணக் கிராமவாசிகள் திரள் திரளாகக் கூடினர். வறுமை, ஓயாத உழைப்பு போதாத உண்டி, நோய் இவற்றால் நலிவையுண்டு நைந்துபோன உடலையும், ஏங்கி நின்ற உல்லாசத்தையும் காணத் துக்கம் பீறிட்டுக் கொண்டு வந்தது. சரோ, நான் சென்ற கடிதத்தில் குறிப்பிட்டபடி மனிதன் உண்மையாகவே காலத்தால் உண்மையினின்று வெகுதூரம் இழுக்கப்பட்டிருக்கிறான். சுய நலத்திரை மக்களின் கண்களை வெகுவாக மறைத்திருக்கிறது.

எந்தக் கிராம வாசியின் உழைப்பில் நாங்கள் ஊதிய மடைந்தோமோ, எந்த விவசாயியின் சலிப்பற்ற உழைப்பு எங்களுக்கு உணவும், உடையும் வழங்கியதோ, எவனது உழைப்பில் எங்களது அன்றாட வாழ்வு பெரும்பான்மையும் நடந்து வந்ததோ, அவனை நாங்கள் இதுவரை நினைக்கக்கூட இல்லை! என்றும் எங்கள் சுகம், எங்கள் ஊதியம், எங்கள் சொத்து என்றே வாழ்ந்திருந்தோம்!

சரோ, நீ ஒரு கல்லூரி மாணவி. இளைஞரும், யுவதிகளும் கல்லூரி நாட்களில் எத்தகைய வாழ்வு நடத்துகின்றனர் என்பதை அறிவாய். ஓரிருவர் விதிவிலக்காகஇருப்பினும், பெரும்பான்மைக் கல்லூரி மாணவருலகம், வெறும் உல்லாசங்களிலும், வீண் ஆடம்பரங்களிலும், காலத்தையும், பணத்தையும், சக்தியையும் விரயம் செய்கின்றனர் என்பது மறுக்க முடியாத உண்மை. இந்தியா சுதந்திரமடைந்து விட்டது. ஆனால் அது வெறும் அரசியல் சுதந்திரமாகவே இருக்கிறது. உண்மையான சுதந்திரத்தின் பிரதி பலிப்பு வாழ்விலே ஏற்பட வேண்டும். இன்றைய நிலை இனியும் நீடிக்குமானால் தேசத்தின் சுதந்திரம் பறி போகுமென்பது மட்டுமல்ல, நாட்டின் எதிர்காலம் மிகவும் இருளடைந்ததாகவே இருக்கும்.

வெளியுலகத் தொடர்பே இன்றி எத்தனையோ கிராமங்களிருக்கின்றன. போக்கு வரவு சாதனங்களோ, கல்வி வசதியோ, அல்லது வைத்திய வசதியோ கொஞ்சமுமின்றி, கொடிய இருளில் ஏனென்று கேட்பாரற்றுத் துவண்ட கிராம வாசிகளை நேருக்கு நேர் கண்டோம். எங்கள் இளம் இதயங்கள் சொந்த நாட்டு மக்களின் இந்த அவல நிலை கண்டு என்ன பாடு பட்டிருக்குமென நீ ஓரளவுக்கு ஊகித்துக் கொள்ளலாம். பாழடைந்த குடிசை, கிழிந்த பாய், கந்தல் உடை, ஒட்டி உலர்ந்த கன்னங்கள், குழி விழுந்த கண்கள், ஓடி உழைத்து அலுத்துப்போன கூனிக் குறுகிய உடல், தெரு மத்தியில் திறந்த சாக்கடை, உழைப்பதற்கென்றே பிறந்து, உரிமையைப் பறி கொடுத்து நிற்கும் சேரிமக்கள் இவையெல்லாம் கிராமப் பகுதியிலே நாம் காணக்கூடிய நிரந்தரமான காட்சிகள்.

சரோ, இன்றைய மனிதன் பெரிதும் சுய நலப் பண்

புடையனு யிருக்கிறுன் என்றே எண்ண வேண்டி யிருக் கிறது. பிறப்பவர்களெல்லாம், தமக்கென்றே வாழ்வாராயின் வாழ்விலே பாமரராய், பஞ்சைகளாய், துரதிருஷ்டசாலிக ளாய் உழல்பவருக்காக வாழ்பவர் யார்? ஆம். அவ்வாறு பிறருக்காக வாழ நாம் விரும்பாதவரையிலும், முயலாத வரை யிலும் மனிதக் குலம் காலப் போக்கில் நசித்துப் போகும். தகுதியுள்ளோருக்கே வாழ்வு (Survival of the fittest) என்ற விதி விலங்கினத்துக்கே தகுமே அன்றி அவற்றினின் றும் மேம்பட்ட மனித குலத்துக்கு ஒவ்வாது. ஆகவே வாழ்க் கையில் நலிந்தவர் பால் நமது பொறுப்பைத் தட்டிக் கழிப் பதில் அர்த்தமில்லே. ஒவ்வொருவரும் குறைந்தது ஒவ்வொரு பாமரனே, ஏழையை, நலிந்தவனைக் கைதூக்கி விடும் பணி செய்தால், கவிகளும், அறிஞரும், கண்ட அந்த அற்புத அமர உலகை (Utopia) இங்கு நிச்சயம் காணலாம். பெரும் பான்மை யானவர்களுக்கு வாழ்வில் அமைதியாகச் சிந்தனே செய்வதற்கு அவகாச மிருப்பதில்லே. சுய நலத்தின் அடிப் படையில் தமது அன்றுட அலுவல்களேயும், கால அட்ட வணையையும் வகுத்துக் கொண்டு ஆர அமர நின்று சிந்திக்க நேரமின்றி ஓடி ஓடி உழைக்கின்றனர்.

மனிதன் மட்டும் ஒரு கணம் தனது சிந்தனைப் பறவையைச் சிறகடித்துப் பறக்க விடுவானுகில் அது அவனே உண்மைக்கு வெகு அருகில் இட்டுச் செல்லு மென்பதில் ஐயமில்லே. பூசைக்குரிய சாமான்களோடு கர்ப்பக் கிரகத்துக் கருகில் சுவாமி தரிசனத்துக்காக நின்றிருப்பவனைப் பார்த்து ஏளன மாகவும், குறிப்பாகவும் "இறைவன், கடினமான நிலத்தைக் கொடும் வெயிலில் உழுது பயிரிடும் உழவனிடமிருக்கிறு" றெனக் கவி தாகூர் சொல்வதில் உண்மை இருக்கிறது. பொதுவாகக் கிராம வாசி கள்ளங் கபடற்ற அன்பிதயத் தினன். கிராமங்களிலே நான் கண்ட ஒன்று மட்டும் மிகவும் வருந்தத் தக்கதாயிருந்தது. அதுதான் கிராமியப் பெண் களின் நிலே. உனக்குத் தெரியும், ஏற்கனவேயே நாகரீக மடைந்த மக்களாகக் கருதப் படுவோரிடையில் பெண்களின் நிலே என்னவென்று. ஆகவே நாகரீக மென்பதையே கண்டி ராத மக்களினத்தில் பெண்கள் நிலேபற்றிக் கூறவேண்டிய தில்லே. கிராமியப் பெண்கள் அடிமைகளாகவே பிறந்து, அடி

மைகளாக வாழ்ந்து, அடிமைகளாகவே மடிகின்றனர். இதற்கு எவ்விதத்திலும் ஆண்களையும், குறை கூறுவதற்கில்லை. ஏனெனில் அவர்களைப் பெற்றெடுத்த தாயினமும் அடிமைத் தனத்திலே வாழ்ந்திருக்கிறது. பரம்பரையான பழக்கம் நிலைத்துப் போயிருக்கிறது. “ஆண்களே ஆளப் பிறந்தோர், உரிமை படைத்தோர், பெண்டிர் உழைக்க, உண்டி சமைக்க, உடலின் பமளிக்கவே படைக்கப்பட்டோர்” என்ற அறியாமை நிறைந்த எண்ணம் அவர்களது இரத்தத்தில் ஊறிப்போயிருக்கிறது. பெண்டிரும் காலம் பரம்பரையாகத் தனக்களித்த பணியைப் பொறுமையுடனும் பெருமையுடனும் (!) ஒரு இயற்கையான பரிசாகவே கருதி ஆற்றிவந்திருக்கின்றனர். நான் கிராமப் பகுதிகளில் கண்ட பெண்களின் நிலை எதிர் காலம் பற்றிய எனது நம்பிக்கையையும், கற்பனைகளையும் பெரிதும் குலைப்பதாயிருந்தது. அந்தப் பாமரப் பெண்களைப் பார்த்த போது நகரங்களிலே உல்லாசமான மெத்தென்ற பஞ்சணை மெத்தையிலே பாலும் பழமுமுண்டு, துயிலுறங்கும் நாகரீகமடைந்த (!) பெண்களைப் பற்றியும், பொது மேடைகளிலும் சங்கங்களிலும், உரிமை, சமத்துவம் இவை வேண்டுமென இடைவிடாது உரிமைப் போராட்டம் (!) நடத்தும் படித்த பெண்களைப் பற்றியும் ஞாபகம் வந்தது. சரோ, உன்னினத்தவர் (பெண்கள்) கோடானு கோடி கணத்துக்கு கணம், நோயாலும், வறுமையாலும், அறியாமையாலும் பிணிப்புண்டு கண்ணீர் சிந்தி, அபலைகளாய் கிராமங்களில் மடிந்துக் கொண்டிருக்கிறார்கள். தாய்மை சின்னா பின்னப்பட்டு நிற்கிறது. அன்னை சீர் கேடுற்றிருக்கிறது. இந்த நிலையிலும் கூட நீ உரிமை சமத்துவம் என்று வெறும் கூக்குரலிட விரும்புகிறாயா?

சரோ, வேண்டாம், உண்மையாகவே உரிமை உனக்கு வேண்டுமானால், உண்மையாகவே நீ சமத்துவம் விரும்புவாயானால், ஓடு. ஓய்வின்றி ஓடு. ஒவ்வொரு கிராமங்கட்கும் ஓடு, ஒவ்வொரு குடிசைக்கும் ஓடு, உன்னோடு உன் ஏனைய கல்லூரித் தோழிகளையும் ஆயிரம் ஆயிரமாக இழுத்துச் செல். செத்துக் கொண்டிருக்கும் தாய்மையை உயிர்ப்பிக்க உன்னால் ஆனதைச் செய். அறியாமையால் உழலும் பெண் தெய்வங்களை ஒளியின் பக்கம் இழுத்து வா. முழுமூச்சோடு வேலை செய்.

சோர்வுறாதே. பிறருக்காக உன்னை அர்ப்பணித்துக் கொள்வாயானால் ஓர்புதிய சக்தி உன்னைத்தேடிவரும். "பலனுக்காக ஏங்காதே உன் கடமையைச் செய்" என்ற கீதை மொழியை ஞாபகத்தில் வைத்துக் கொள். தியாகத்தின் அடிப்படையில் புரியும் சேவைப் பணியில் உன்னையே அழித்துக் கொண்டால் கூட நான் வருந்த மாட்டேன். பெருமைப் படுவேன்.

கிராமங்களுக்கு நாங்கள் சென்ற போது அங்குள்ள பெண்களிடையே கலந்து பழக எங்களால் சாத்திய மில்லாது போயிற்று. இதற்குக் காரணம் அங்கு நிலவிய மாறுபட்ட சூழ் நிலையே. அப்பொழுதுதான் கல்லூரி மாணவிகளின் தேவையை உணர்ந்தோம். உண்மையில் ஆர்வம் மட்டு மிருக்குமானால் உன்னினத்தவரிடையே நீ அற்புதமான சீர் திருத்தங்கள் செய்ய முடியும். நீ வாழ்வில் உயரிய லட்சியங்களையும், உன்னதமான கொள்கைகளையும் கொண்டிருக்க வேண்டும.

பல்வேறு துறைகளில் பல்வேறு விஷயங்கள் பற்றியும் படிப்படியாக உனக்கெழுதுவேன். எனது இதய எழுச்சியின் பிரதி பலிப்பைக் கடிதஙகளின் மூலம் உனக்கு வெளிக் காட்டுவதில் நான் இன்பம் காண்கிறேன். பெரிதும் மன அமைதியும் கிடைக்கிறது. நீயும் பயனடைவாய் என எதிர்ப்பார்க்கிறேன். பரீட்சைக்காக கவனமாகப் படிக்கிறாய் என்றெண்ணுகிறேன். உடல் நலன் கருதுக. ஏனெனில் நீ பெரியதொரு வாழ்க்கைப் பரீட்சையில் தேற வேண்டியவள். விடுமுறையின் போது உன்னை ஆவலோடு எதிர்ப்பார்க்கிறேன். உனது கடிதத்தில் கண்ட விஷயங்களுக்கு அடுத்த கடிதத்தில் பதில் எழுதுகிறேன்.

"பித்தன்"

---

குங்குமத்திற்கு பல கடிதங்கள் வருகின்றன. கிராம முன்னேற்றத்துக்கான விஷயங்கள் அடங்கியுள்ள கடிதங்கள்தான் பிரசுரிக்கப்படும். பிரசுரிக்கப்படாத கடிதங்களுக்கு தேவையான தபால் பில்லைகள் அனுப்பினால்தான் திருப்பி அனுப்பப்படும்.

# அதிசயங்கள்

(குஞ்சு)

"எங்கள் வாத்தியார் இன்று கிளாஸில் உலகத்தி லிருக்கும் ஏழு அதிசயங்களைப் பற்றிச் சொல்லிக் கொடுத்தார். அவைகளைப்பற்றி உங்களுக்கு நினைவிருக் கிறதோ? நீங்கள் உலக டூர் போனபோது எதையாகிலும் பார்த்திருக்கிறேளோ?" என்று 'படபட' என்று நான் என் தாத்தாவைக் கேட்டேன்.

"ஆஹா எனக்கு சிலவற்றின் பெயர்களைத் தெரி யும். பாபிலோனிலிருக்கும் 'தொங்கும்தோட்டம்' மகுதி சீமை மியூசியத்திலிருக்கிறதே அது உனக்குத் தெரி யுமோ குஞ்சு" என்றார் தாத்தா.

"மோசோலஸ்."

"பிடியாஸ் கட்டிய ஜூபிடர் சிலை, இன்னம் என் னமோ பெயர்கள் மறந்து விட்டன. ஆனால் அந்த பிர மிடுகளைத்தான் நான் கண்ணால் கண்டிருக்கிறேன்.

எனக்குச் சிரிப்பு வந்தது. பெரியவரானதால் மேலும் கேள்விகள் கேட்க வில்லை. ஆனால் "ஏன் தாத்தா. உங்களிடம் அந்த ஏழு அதிசயங்களையும் கொடுத்தால் எதை தாங்கள் முதலில் எடுத்துக் கொள் வேள்" என்றேன்;

தாத்தா யோசித்து சொல்லுவதாகச் சொல்லி நாற் காலியில் சாய்ந்து கொண்டார்.

"கிரீஸ் பள்ளிக்கூடங்களில் படிக்கும் பையன்களை இவ்வேழு அதிசயங்களைக் குறித்துப் படிக்கச் சொல்லு கிறார்கள். ஏனென்றால் அவர்களுக்கு அவைகள்தான் பெரியனவாகத் தோன்றுகிறது. ஆனால் நாம் அவை களைக் குறித்து மாத்திரம் அறிந்தால் போதாது. அதை விட எத்தனையோ மடங்குகளைப்பற்றி அறியவேண்டும். இவ்வேழு அதிசயங்களை குறித்துப் பெயர்களைச்சொல்லி

விடுவது அவ்வளவு கஷ்டமல்ல. இதைவிட அதிசயமில்லாத வஸ்துக்களாக ஏழு எடுத்துச் சொல்லத் தெரிய வேண்டும். "இப்புவியில் ஒன்றும் ஒன்றைப் போல் இல்லை" என்று ஒரு பெரிய ஆங்கில பேராசிரியர் கூறியுள்ளார். அதைத்தான் நாம் தெரிந்துகொள்ள வேண்டும்; நமக்கு எவ்வித அறிவும் நாம் அடையும் அதிசயத்திலிருந்துதான் விருத்தியடையகிறது. நாம் குழந்தையாயிருக்கும் போது "ஏன், என்ன" என்று கேட்கிறோம். கேள்வியுடன் விட்டுவிடக் கூடாது. ஆராய்ச்சி செய்யப் பிரயத்தினம் செய்யவேண்டும்.

"பண்டைக் கால ஏழு அதிசயங்களைக் குறித்து நீ என்ன அறிகிறாய். எல்லாம் மனிதனின் அபாரபுத்தியும் சூக்ஷ்ம அறிவுந்தான் காரணம். ஒரு மாளிகையும், ஒரு சிலையும், கோபுரமும் தான் அவர்கள் மனதிலிருந்தது. ஒரு கல்லை எடுத்துக்கொண்டு ஒரு சிற்பி ஒரு சிலை செய்தான். எகிப்தில் ஒரு பெரிய தீநா மண்டபம் கட்டி கடலில் செல்வோரைக் கரைக்கு வழி காட்டினான். ஏடனில் இருந்த ஜனங்களுக்கு மாளிகைகளும், கூட கோபுங்களும் மிகவும் நன்றாகக்கட்டி, அதனால் பெரிய பிரக்யாதி பெற்று வந்தனர். நாம் அதிசயங்களைக் குறித்து யோசித்தால், ஒரு ஆங்கிலேயனுக்கு 'வெஸ்ட்மினிஸ்டர்' ஆபீசு அதிசயமாயிருக்கும். பிரெஞ்சு தேசத்துப் பையனுக்கு ஆமீன்ஸ் கோயில் பிரமாதமாக இருக்கும். ஒரு இத்தாலிப் பையனுக்கு பிஸாவிலிருக்கும் சாய்ந்த கோபுரமும், முலானிலிருக்கும் கோயிலும் அதிசயமாயிருக்கும். ஆனால் இக்காலத்தில் ஏரோபிளேனும், பனாமா வாய்க்காலும் பேரதிசயங்களல்லவா? மனிதனென்பவன் உற்பத்தியானதிலிருந்து பல அதிசயங்களைக் கண்டுபிடித்துளான். அவ்வதிசயங்கள் எப்பொழுதும் ஸ்திரமாய் இருக்கின்றன.

"நமது ஆராய்ச்சி பிரம்மாண்டமான வஸ்துக்களைப்பற்றியல்ல. ஆனால் சிறியவைகளைக் குறித்துதான். நீ தோட்டதிற்குச் செல்லும்போது உன்னை 'சுற்றிச் சுற்றி' வரும் பல வண்டுகளைக் கவனித்திருக்கிறாயா?

அவை நமக்கு அருவருப்பைக் கொடுப்பதாயிருப்பினும் அவைகளும் ஓரதிசய வர்க்கத்தில் சேர்ந்ததல்லவா. பல புஜ கோபுரம் அல்லது பிரமிட் என்பதைக் கட்டின எகிப்து தேசத்தினருக்கு இவ்வண்டுகளைக் குறித்துத் தெரிந்துள்ளதைவிட நமக்கு அதிகமாகத் தெரியும்.

"இவ் வண்டுகளின் சுமார் முன்னூறு நானூறு முட்டைகள் ஒரு தண்ணீர் பூண்டுடன் ஒட்டிக்கொண் டிருக்கும், பிறகு அவை அப்பட்டையைக் கிழித்துக் கொண்டு தப்பித்த பிறகு அவைகளின் நடவடிக்கைகள் மிகவும் அதிசயமாயிருக்கின்றன. பேபர் என்ற பிரெஞ்சு மனிதர் தன்னுடைய ஆயுள் முழுவதையும் சிற்றுயிர் களைப் பற்றி ஆராய்ச்சி செய்வதிலேயே செலவிட்டிருக் கிறார்.

"உலகத்திலுள்ள எல்லா ஜீவராசிகளும் விசித்திர மானவைதான். பதார்த்த விஞ்ஞானியான டார்வினை பிரமிக்கக்கூடிய அணு எது என்று கேட்டபோது அவர் சொல்லுகிறார். ஒரு எறும்பின் மூளைதான். அதற்கு ஒரு குண்டுசியின் தலையை போல்தான் ஒருதலை இருக்கிறது. ஒரு எறும்புப் புற்றைப்பார். அவைகள் எவ்வளவு ஒற் றுமையாக வேலை செய்கின்றன. சில உணவு பொருள் களுக்காகத் தேடச் செல்கின்றன. சில சண்டைக்குச் செல்கின்றன. அவர்களிடையே எத்தனையோ ஆபீஸர் கள், மந்திரிகள் ஒரு பெரிய படை. அப்படைக்கு ஒரு வீரன். படையில் சிகிச்சைக்கு பல நர்ஸுகள். ஒரு நிமி ஷம் அவைகளை கவனி. அப்பொழுது ஒரு எறும்பின் மூளை எவ்வளவு அபாரமென்பதை நீயே ஒப்புக்கொள் வாய்" என்று சொல்லி தாத்தா பெருமூச்சு விட்டார்; மறுபடியுந் தொடர்ந்துசொல்லலானார்.

"இவைகளனைத்தையும் கண்டு பிடித்தானே 'மனி தன்' அவன் எவ்வளவு அதிசயப் பிறவி. பெரியமிருகங் களை எடுத்துக்கொள்வோம். மிகப்பெரிய யானையையும் ஒட்டகத்தையும் நாம் மிருகக் காட்சி சாலைக்குச் சென் றால் பார்க்கத் தவறுகிறோமா? அச்சிறிய எறும்புகளுக் கும் மாபெரிய யானைகளுக்கும் நடுவே எவ்வளவோ அற்

புத ஜீவராசிகளிருக்கின்றன. முதுகெலும்புள்ள ஜீவன்கள் 25,000 இருக்கின்றன. ஆனால் முதுகெலும்பில்லாத ஜீவன்கள் 2500,000. நாம் எவ்வர்க்கத்தை சேர்ந்தவர்களெனக் கேட்டு விடாதே.

"நாம் முதுகெலும்புள்ள மிருகந்தான். ஜீவராசிகளைக் குறித்து மாத்திரம் நாம் அறிந்தால் போதாது. உயிரில்லாத சக்திகள் எவ்வளவோ இருக்கின்றன. நமது முன்னோர்கள் பள்ளிக்கூடம் சென்றபோது அவர்களுக்கு ரசாயன சாஸ்திரம் சொல்லிக் கொடுக்கப் பட்டது. ஆனால் அவர்கள் ரேடியத்தைப் பற்றி ஏதாகிலும் படித்தார்களா? இல்லவேயில்லை அது அதிகமாக உபயோகத்துக்குக் கிடைப்பதில்லை. உலகத்திலேயே கொஞ்ச அவுன்ஸ்கள் தான் கிடைக்கின்றன. ஒரு சிறிதளவு கிடைப்பதற்கு வண்டி வண்டியாக குங்கிலிய மிசிரணத்தை உருக்க வேண்டும். அச்சிறிதளவு ரேடியம் என்ன விந்தைகளைச் செய்கிறது தெரியுமா! வருஷா வருஷம் நெருப்பும் வெளிச்சமும் கொடுக்கிறது. அதனால் அதன் சக்தி குறைவதே கிடையாது. இது பரமாச்சர்யமில்லையா? டாக்டருக்கு எவ்வளவோ உதவி செய்கிறது. ஒரு கஜம் கனமுள்ள லோகத்தைத் துளைத்து விடுகிறது! இதெல்லாம் ஆச்சரியமில்லையா? குஞ்சு என்னமோ உலக ஏழு அதிசயங்களைக் குறித்து என்னை கேள்விகள் கேட்டு விட்டாயே! ஆகட்டும் அதையும் பற்றிக் கூறுகிறேன் கேள்—" என்று தாத்தா சொல்லிக் கொண்டே போனார்.

---

ஒரு பெல்ஜிய தேசத்துச் சிறுமி ஒரு ஜெர்மனி தேசத்துச் சிப்பாயிடம் சென்று,

"சிப்பாயே எப்போது யுத்தத்திற்குப் போகப் போகிறாய்" என்றாள்.

"யுத்தம் முன்னணிக்கு இவ்வாரக் கடைசியில் செல்வோம்" என்றான் சிப்பாய்.

"எனக்கு ஒரு சிறிய உதவி செய்வாயா?"

"கட்டாயமாக செய்கிறேன். என்னவென்று சொல்."

"இன்று இந்த ஆரஞ்சு பழத்தை வாங்கிக்கொள். நாளைக்கு என் உதவியைத் தெரியப் படுத்துகிறேன்" என்று சிறுமி சிப்பாயிடம் ஒரு பழத்தைக் கொடுத்து விட்டுச் சென்று விட்டாள். மறு நாள் குறிப்பிட்ட நேரத்தில் சிப்பாயிடம் வந்து சிறுமி ஒரு காகிதப் பொட்டலத்தைக் கொடுத்தாள். அதில் இரு போட்டோக்களிருந்தன.

"சிப்பாயே, அந்த இரண்டு படங்களையும் பார்த்தாயா? ஒன்று எனது தகப்பன். மற்றொன்று எனது அண்ணன். இருவரையும் சுடாதே" என்று கெஞ்சினாள். இருவர் கண்களிலும் நீர் ததும்பிற்று.

---

# குறுகிய பாலம்

ஓர் ஆழ்ந்த அருவி. அதைக் கடக்க ஓர் பனைமரத்தை வெட்டிப் போட்டிருந்தார்கள். இருவர் ஒரே சமயத்தில் அருவியைக் கடக்க முயன்றனர். இருவரும் பனை மரத்தின் நடுவில் சந்தித்தனர்.

"நான் தான் முதலில் வந்தேன்" என்றான் ராமன்.

"இல்லை, நான் தான். வேண்டுமானால் இந்தப்பனை மரத்தையே கேள்," என்று முறைத்தான் சுப்பன்.

வாக்குவாதம் பலத்தது. இருவரில் ஒருவனும் விட்டுக்கொடுப்பதாயில்லை.

கடைசியில் ராமன் சொன்னான்,

"நான் எப்பொழுதும் மூடர்களுக்கு முதலிடம் கொடுத்து விடுவது வழக்கம்" என்று பின்வாங்கினான்.

"அப்படி வழிக்கு வாருங்கள் அண்ணா. என் கொள்கையையே நீங்களும் பின்பற்றுகிறீர் என்று எனக்குத் தெரியாது" என்று சுப்பனும் பின்வாங்கினான்.

இவர்களுக்காக தலையில் புற்சுமையுடன் காத்திருந்த வீராயி சிரித்துக் கொண்டே ஓடையைக் கடந்தாள்.

# ஸ்ரீ கிருஷ்ணலீலா தரங்கிணி

[ஸ்ரீ. டி. வி. சீதாராமய்யர்]

ஸனகாதிகளுடைய ஸ்தோத்திரம்

பைரவி—ஆதி

(1) ராமகிருஷ்ண கோ3விந்தே3திநாம ஸம்ப்ரயோகே3
காம மிஹஸ்நாதவ்யம் ஸர்வோதத் தமப் ரயாகே3...
(2) தி3க்3தே3 ச காலா நபேக்ஷ வித்த3 ஸர்வ ஸுலபே4
ஸத்3கு3ரு க்ருபா ஸமுத்3ர ஸங்க3 ஹேது லாபே4...
(3) ராம நாம க3ங்க3 யா மிளித க்ருஷ்3ண3 நாம
யாமுனே கோ3விந்த3 நாம ஸரஸ்வதீ ப்ரதி2 தே...
(4) யோகி3 மானஸ பரம ஹம்ஸ குல கலிதே
வாகீ3ச விஷ்ணு ருத்3ராதி3 வாக்3 லஹரீ லலிதே...
(5) ஸர்வ லோகா லோக காம ஸாங்க3 ப2லதா3 நே
நிர் விசேஷ நித்ய ஸுக2 லாப4 ஸுநிதா3 நே
(6) ருக்3யஜுஸ் ஸாம தி3 வேத3 சாகி2 மூல விலஸி தே
ராக லோப 4 தி3 ஸந்தாப சாந்தி கர சரிதே...
(7) ஸ்நான ஸந்த்4யா ஜப ஹோம தர்ப்பணு நபே க்ஷிதே
ஹானிவ்ருத்4யா தி3 ரஹித அக2ண்ட ஸுக2 ப2லதே...
(8) ஸ்நாநம் மானஸிகம் தஸ்ய ஸ்மரணம் வாச நிகம்
கீர்த2னம் காயிகம் தஸ்ய கீர்த2னே ஸுனர்த2னம்
(9) யாக3 யோக3 ராக3 போ4 க3 த்யாக3 ஸம்ப3ந்த4ம்
விருபக்தி விரக்தி விக்3ஞான த்3வாரா முக்தி ப4லதே3...
(10) ப்3ருஹ்ம வித்4யால க்ஷண நிரீக்ஷண விசக்ஷணே
பா3தி4த கோ4ரஸம்ஸார வாரண தத் காரணே...
(11) ஸர்வ பா பௌக4 திமிர ச2ண்ட ஸூர்ய மண்டலே
ஸாது4 நாராயண தீர்த்த2 தீர்த்த2 ராஜ விமலே...

ராகம்: பைரவி -- ஆதி

| | | |
|---|---|---|
| ; ரிக மா பா ; பா ; | ; பமபாதா | பா ; பா ; ‖ |
| ; ரா...ம க்ரு ஷ்ண | ; கோ...விந் | தே...தி ‖ |
| ; மா மா ; பா ; தாபா | கா மப தப | ப ம கா ரீ ஸா ‖ |
| ; நா ம ஸம் ப்ர | யோ ......... | கே......... ‖ |
| ; ரி க மா ; கா கா ரீ ; | ரீகாக ரிஸா | ரீகாபா ; ‖ |
| ; கா...ம மி...ஹ | ஸ்நா......... | தவ்யம்...... ‖ |
| ; ரிக மா ; பா ; ஸ்நிதப | கா ; மபதப | பம கா ரீஸா ‖ |
| ; ஸர்வோ த்தம ......... | ப்ர...யா... | கே ............ ‖ |

இதர சரணங்களும் இது மாதிரியே.

# அச்சிடுதல்

மயில்துத்தம், அனிலைன் ஸால்ட், வெடியுப்பு மூன்று பொருள்களையும் தனித்தனியே சன்னமாக தூள் செய்து தண்ணீரில் கலக்கவும். இதே சாயத்தைக் கொண்டு மேஜை விரிப்பு திரைச்சீலை, தலையணையுறை முதலியவற்றிற்குச் சில சித்திர வேலைகள் செய்யலாம். முதலில் தயாரித்த பொடியை கருவேலங்கோந்துக் குழம்பில் கரைக்காமல். சுத்த ஜலத்தில் நீர்க்கக் கரைத்துக் கொள்ள வேண்டும். மேஜை விரிப்புக்கு நான்கு மூலைகளுக்கும் பொருத்தமான ஓர் சித்திரத்தை மை ஊறாத ஓர் காகிதத்தில் வரைந்து அதன் வெளிக் கோட்டில் கத்தரித்துச் சித்திரத்தைத் தனியே எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரே மாதிரி நான்கு காகிதம் சித்திரங்கள் தயாரித்துக் கொண்டு அவற்றை மேஜை விரிப்பின் நான்கு மூலைகளிலும் சரிபார்தது ஒட்ட வேண்டும். பிறகு தண்ணீரில் கரைத்த சாயத்தை இரண்டு பிரஷ்களின் உதவியால் துணியின் மேல் சிதறச் செய்ய வேண்டும். அதாவது ஒரு பிரஷை சாயத்தில் சிறிது தோய்த்து மற்றொரு பிரஷ்ஷால் சாயத்தைக் கண்ணுக் குத் தெரியாத சிறு சிறு புள்ளிகளாய்ச் சிதறச் செய்யவேண் டும். துணியின் முழு பாகத்திலும் சாயப்புள்ளிகள் ஒரே மாதிரி விழச்செய்து பிறகு துணியைக் கொஞ்சம் உலர வைத்து பிறகு தண்ணீரில் அலசி ஒட்டப் பட்ட காகிதச் சித்திரங்களை அகற்றிவிட்டால் மேஜை விரிப்பின் மூலைகளில் வெள்ளைப்பூ விழுந்திருப்பதைக் காணலாம்.

அச்சடிப்பதற்கு சாயத்தில் கோந்து கலக்க வேண்டியது அவசியம். இல்லாவிட்டால் சாயம் துணியில் பரவி விடும். சாயத்தைச் சிதறச் செய்யும் வேலை (Spray work) க்கு முத லில் துணியில் கஞ்சிப்பசை வற்றிக்கொள்ள வேண்டும். சாயத் தில் கலந்தால் அதைத் தெளிக்க முடியாது.

---

# சினிமா

சினிமாத் தொழிலினால் சமூகத்திற்கு பல விதத்தில் சேவை செய்யமுடியும். நமது சிறுவர்களும், சிறுமிகளும் ஆபாசப் படங்களைப் பார்த்து கெட்டுவிடாமலிருக்க இந்திய பார்லிமெண்டில் சினிமா சட்டம் ஒன்று செய்யப்பட்டிருக்கிறது.

மேனாடுகளில் பதினெட்டு வயது முடிந்தவர்கள் பார்க்கக் கூடிய படங்களென்றும், பதினெட்டு வயதிற்குட்பட்டவர்கள் பார்க்கத் தகுதியான படங்களென்றும் இருவிதப் படங்கள் தயாரிக்கப்படுகின்றன. ஆனால் நம் நாட்டில் இதுவரைக்கும் தயாரிக்கப் பட்டுள்ள பல படங்களிலும் பதிவிரதா தர்மத்தையே மேன்நோக்காகக் கொண்ட படமானால் அப்படத்திற்கு வருமானம் குறைந்துவிடுமென்ற பயத்தினால் குடும்ப சச்சரவுகளை மிகைப்பட சித்தரித்துக் காட்டி, ஆபாசமும், நையாண்டியும் நிறைந்த படங்களாகவே மேலாகத் தயாரித்து பட முதலாளிகள் பணக்காரர்களாவது கண்கூடாகக் காணும் காட்சி.

'எல்லோரும் பார்க்கக் கூடியவை,' 'சிறுவர் சிறுமியர் பார்க்கக் கூடியவை' யென இரு ரகங்களாகப் படங்களை பிரித்து அரசாங்கத்தார் லைஸென்ஸ் கொடுக்கப் போகிறார்கள்.

ஜன ரஞ்சகமானப் படங்களையே குழந்தைகளையும் இவ்வளவு காலமாகப் பார்க்கவைத்த அரசாங்கம் இப்பொழுதாகிலும் கண் திறந்ததே!

தாயுள்ளத்தையுடையபெண் பக்திரஸமானப் படமாயிருந்தால், அப் படத்தைப் பார்க்கப் போவதாயிருந்தால் துணைக்காக நான்கு பேரையல்லவா அழைத்துச் செல்கிறாள். பெண் கூட்டத்தை அதிகரிக்கச் செய்வதற்கு, தாய்மையும், பக்தியும் சேவையும் பிரதிபலிக்கும் படங்களாயிருந்தால் தான், பெண்கள் திரள் திரளாகச் செல்வார்கள். காதலையும், ஆண் பெண்களிடையே நையாண்டித் தன்மையுள்ள வசனங்களையும் பெண்கள் ஒருக்காலும் வரவேற்க மாட்டார்கள்.

சினிமாவினால் பெண்களிடையே சமூக சீர்திருத்தங்களை யும், அறிவு வளர்ச்சியையும் கட்டாயம் அபிவிருத்தி செய்ய முடியும். சிறுமிகளுக்குள் 'பாஷன்' பரவுவதும் சினிமா வினால்தான். தற்காலத்தில் பெண்கள் உடுத்திக்கொள்ளும் புடவைகளின் தலைப்புக்கு ஒரு சினிமா பெயர்; கரைக்கு ஒரு நடிகையின் பெயர், உடலுக்கு ஒரு விசிறியின் பெயர், புடவைகளை அணிந்து கொள்ளும் முறையோ கேட்பானேன், ஒரு நக்ஷத்திரத்தின் பெயர்!

---



பவளக்கொடியில் ஒரு காட்சி

# பவளக்கொடி

(ஸ்ரீமதி சௌ. தூரி)



காலம் மாறிக் கொண்டு வருகிறது. பழைய புராணப் பேடிக் கதைகளுக்கு இனி இடமில்லை. கால மாறுபாட்டிற்குத் தகுந்த சமூகக் கதைகளுக்கும், மக்களுக்கு நல்ல படிப்பினை யூட்டும் கதைகளுக்குமே இனி இடமுண்டு. இவ்வுண்மையை சமீபத்தில் வெளி வந்துள்ள ஓரிரு படங்கள நிரூபித்து விட்டன. மக்களிடையே அமோக ஆதரவும் பெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆயினும் இப்பட முதலாளிகள் பணத்தாசை கொண்டு கண்ட கேலிக் கூத்துகளையும், மக்களால் ஒதுக்கித் தள்ளப்பட்ட, அர்த்தம் சிறிதுமற்ற பழம் புராணங்களையே படங்களாகப் பிடிப்பதில் ஈடுபட்டுள்ளனர் என்பதை,

பக்ஷிராஜா கம்பெனியார் பவளக்கொடியைப் படமாக எடுத்த ததின் மூலம் நிரூபித்து விட்டார்கள்.

பவளக்கொடி ஓர் பெண்ணரசியின் சரிதம். எக்கதை யாயினும் ஒன்று ஆண்களின் வீரத்தைப் பற்றியும், ஆண்மை யைப் பற்றியும் சித்தரிப்பதாயிருக்க வேண்டும். அல்லது பெண் களின் அற்புத குணங்களுக்கு ஓர் எடுத்துக் காட்டாக இருக்க வேண்டும். அல்லது சிறந்த புரட்சிக் கருத்துக்களை, சமூக முன்னேற்றத்திற்காகப் பரப்புவதாக இருக்கவேண்டும். ஆனால் இப் பவளக்கொடி இம் மூன்று தன்மைகளில் ஒன்றையேனும் கொண்டிராமல் ஆண்களின் பேடித் தன்மையைப் பற்றியும், பெண்களின் பலவீனத்தைப் பற்றியுமே சித்தரிப்பதாக இருக் கின்றது. தமிழ்ப் பட முதலாளிகள், இந்தக் குறைகளை விட் டொழித்து சமூகக் கதைகளையும், படிப்பினை யூட்டக்கூடிய கருத்து நிறைந்த புராணப் படங்களையுமே படமாகப் பிடித்து, மக்களின் மடமையைப் போக்கப் பாடு படவேண்டும்.

பவளக்கொடியின் கதை யாவரும் அறிந்ததே. நாடகங் களிலும், தெருக் கூத்துக்களிலும் அதிகமாக நடிக்கப்பட்டு வந்தது. ஆனால் தற்காலத்தில் தெருக்கூத்துக்களில் கூட அதி கமாக நடிக்கப்படுவது கிடையாது. அல்லியின் மகன் பவளத் தேர் கேட்க, அர்ஜுனனாலேதான் பவளத்தேர் கொண்டு வர முடியும் என அறிந்த அல்லி, பல நாள் வராதிருந்த அர்ஜுன னைத் தந்திரமாக அழைத்து அவனைப் பவளத்தேருக்கு, பவள நாட்டிற்கு அனுப்ப அர்ஜுனன் கிருஷ்ணன் துணையுடன் அங்கிருந்து கல்யாணமே செய்துக் கொள்வதில்லை என விர தம் கொண்டிருந்த பவளக் கொடியைக் கண்டு மோகித்து, கிருஷ்ணன் சூழ்ச்சியால் அவளை மணந்து, தான் வந்த காரி யத்தை மறந்திருக்க, அர்ஜுனன் பலநாள் திரும்பாததைக் கண்டு கோபமடைந்த அல்லி, பவள நாட்டின் மேலேயே படை யெடுக்க, கடைசியில் கிருஷ்ணன் சூழ்ச்சியால் அல்லியின் கோபம் தணிந்து, அர்ஜுனனிடம் சேர்கிறாள். புலந்திரனுக் கும் தேர் கிடைக்கிறது. இதுதான் கதை.

படம் ஆரம்பத்திலிருந்து விருவிருப்பு அற்றதாக இருக் கிறது. அர்ஜுனனாக நடிக்கும் டி. இ. வரதன் அர்ஜுனனுக் கான வீரம் பொருந்திய நடிப்பு சிறிதும் இல்லை. உணர்ச்சி

யற்ற வசனங்களை ஒப்புவித்து விட்டு நிற்கிறார். குரலும் இரவல் போல் தோன்றுகிறது! கிருஷ்ணனாகத் தோன்றும் மகாலிங்கம் பல வேடங்களில் தோன்றி தன் பாகத்தை உணர்ந்து நன்கு நடித்திருக்கிறார். அவ்வளவு அதிக பாடல்கள் தேவையில்லை. ஏனோ இவர் பட ஆரம்பத்தில் ருக்மணியிடம் பவளக்கொடியின் கதையைச் சொல்ல ஆரம்பித்து, விட்டு கடைசியில் முடிக்காமல் விட்டு விடுகிறார். படத்தில் நடித்த அலுப்பு போலும்! அல்லியாக நடிக்கும் எம். எஸ். சரோஜினி வழக்கம் போல் பாடி நடிக்கிறார். இருந்தாலும் சில சமயங்களில் அவரது நடிப்பு நன்கு சோபிக்கவில்லை. அர்ஜுனன் மேல் அடங்காக் கோபம் கொண்டு, தன் கோபத்தைக் காட்டும் பொழுது கோபம் கொண்டதாகவே தெரியவில்லை. வேஷப் பொருத்தம் நன்கு அமைந்துள்ளது. பவளக்கொடியாக நடிக்கும் டி. ஆர். ராஜகுமாரி திருப்திகரமாய் நடித்திருக்கிறார். இவருக்கும் வரதனுக்கும் சிறிதும் பொருத்தமில்லை. பவளக்கொடியின் தோழியாக நடிக்கும் குமாரி ராஜத்திற்கு நடிக்க அதிக சந்தர்ப்பங்கள் கொடுக்கப் பட்டுள்ளன. நடிப்பும் பரவாயில்லை. கிட்டத்தட்ட எல்லாப் படங்களிலும் தோன்றும் லலிதா-பத்மினி சகோதரிகள் இதிலும் தோன்றி நடனமாடுகிறார்கள்.

காமிக் மிகவும் கீழ்த்தரமானது. நல்ல கருத்துக்களை காமிக்கின் மூலம் வெளியிடும் என். எஸ். கே. தம்பதிகள் இந்தப் படத்தில் எதற்காக இவ்வளவு மோசமாக நடித்துள்ளனரோ தெரியவில்லை. ராமன், ராமநவமி காமிக் மகாமோசம். புலந்திரனாக நடிக்கும் குழந்தை நன்றாக நடித்துப் பாடியுள்ளது. கோபித்துக் கொள்ளும் கட்டங்களில் வெகு அழகாக நடித்து உள்ளது. பொதுவாக நடிப்புக் குறைகளுக்குக் காரணம் டைரக்டரின் கவனிப்பின்மையே. மற்றபடி படப்பிடிப்பு, ஒளிப்பதிவு, ஒலிப்பதிவு, காட்சி ஜோடனைகள், உடையலங்காரங்கள், நன்கு அமைந்துள்ளன. செலவழித்த பணம் திரும்பக் கிடைத்தாலும், இதன் மூலம் வெற்றி யடைந்து விட்டதாக பக்ஷிராஜா கம்பெனியார் கருத முடியாது. இனி மேலாயினும் இத்தகைய குப்பைக் கதைகளைத் தள்ளி விட்டு நல்ல படிப்பினை யூட்டும் கதைகளைப் படமாக எடுக்க முன் வருவார்களா?

# பானங்கள்

(குமாரி சியாமளா)

தேநீர், காபி, கொக்கோ, கரிஈருயிரிக்கரையம் (சோடாகலர்) சர்பத்து முதலியவை நாகரீக சமூகச் சின்னங்களான பானங்கள். நமது தேசிய பானங்களான பால், மோர், சாத்தீர்த்தம் போன்றவை அநாகரீகமானவைகளாகக் கருதப்பட்டு அநேகமாக மறைந்துகொண்டு வருகின்றன.

சுமார் 10 வருடங்களுக்குமுன் யாராவது ஒருவர் நல்ல வெயிலில் நமது வீடுதேடி வந்தால் அவருக்கு கருகப்பிலையும் எலிமிச்சம்பழ ரசமும் சேர்த்து நீர்மோர் கொடுத்து உபசரிப்பது வழக்கம். காபீ, டீ போன்ற பானங்கள் அநாசார வஸ்துக்களாகக் கருதப்பட்டன. சிறிது பணக்காரர்களாக இருந்தால் பால் அல்லது சர்பத் சேர்த்த பால் அல்லது பாயசம் கொடுத்து உபசரிப்பார்கள். ஏழைகளாக இருந்தால் உப்பு சேர்த்த நீராகாரம் கொடுப்பார்கள். இவையெல்லாம் தேகசுகத்துக்கு மிக மிக உகந்தவை என்று தற்கால உடற்கூற்று நிபுணர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

ஆனால் மேனாட்டு ஆதிக்கம் காரணமாக இத்தகைய தேக சுகத்திற்கு உசிதமான உபசாரங்கள் மறைந்து அவற்றிற்குப் பதில் புகை உபகரணங்களும் (சிகரெட்டுகளும்) காபி, டீ போன்ற பானங்களும் நாகரிக சின்னங்களாக ஜனங்களின் சமூக வாழ்க்கையை ஆக்ரமித்துக் கொண்டுவிட்டன. நல்ல வேளையாக நமது தேசிய சர்க்கார் மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டுவந்து விட்டனர். இல்லாவிட்டால், காபியின் ஸ்தானத்துக்குச் சாராயம், நவநாகரீக சமூகத்திற்கு வந்திருக்கும்.

கேமில்லா தியா (Camilla Thea) என்னும் ஒரு பச்சைச் செடியின் உலர்ந்த இலைகளிலிருந்து தேநீர் தயாரிக்கப்படுகிறது. உலர்ந்த தேயிலை கொதிக்கும் ஜலத்தில் ஊறவைக்கப்பட்டால், அவை அண்டாகாரமாய், கூர்மையான நுனியோடு, வாள்போல் கருக்கமைந்த ஓரமுடன் விரியும். நரம்புகள் ஓடும் வடிவமும் சேர்ந்து தேயிலையோடு வேறேதாவது இலைகள் சேர்க்கப்பட்டுள்ளனவா என்றறிய ஓத்தாசையாக

இருக்கும். இவ்வாறு விரிந்த தேயிலை யொன்றை பூதக்கண்ணு டியில் பார்த்தால் பெரிய நரம்புகள் இலையின் ஓரம்வரையில் போகாமல் நடுநரம்பை நோக்கித்திரும்பி விடுவதைக்காணலாம்.

பச்சை தேயிலை என்றும் கருப்புத்தேயிலை என்றும் இரு வகையுண்டு. 12 மணி நேரம் இலைகளைக் குவித்து வைத்துப் பிறகு கரி அனலில் வாட்டி, கருப்புத் தேயிலை தயாரிக் கிறார்கள். இளந்தளிர்களை கட்டையடுப்பில் வாட்டி பச்சைத் தேயிலை செய்கிறார்கள்.

நல்ல தேநீர் இளந்தளிர்களிலிருந்துதான் செய்யமுடியும். முதிர்ந்த இலைத்தாள்களிலிருந்து தயாரிக்கப்படும் கஷாயம் அவ்வளவு உருசியாக இராது.

தேயிலையில் தண்ணீர் 8 சதவிகிதம். தீன் (Theine) 3 சதவிகிதம். தான்னின் (Tannin) 14 சதவிகிதம். தைலம் 0·4 கரையாப் பொருள்கள் 74·6 சதவிகிதம் அடங்கியுள்ளன.

தேயிலைக் கஷாயத்தில் தீன், தான்னின், தைலம் இம் மூன்றும் கரைந்துள்ளன. தைலத்திலிருந்துதான் தேநீருக்கு அதன் மணம் வருகிறது.

தீன் ஒருவகை உற்சாகம்தரும் பொருள். மூளையையும், நரம்புகளையும் தூண்டி விடுவதால் தேநீர் களைப்பை அகற்றி உற்சாகமளிக்கிறது.

தான்னீன் ஒரு புளியம். இலைகள் அதிகநேரம் ஜலத்தில் ஊறினால்தான் இது கஷாயத்தில் இறங்குகிறது. தான்னீன் அஜீர்ணத்திற்கும் மலச்சிக்கலுக்கும் காரணமாகும் விஷசத்து.

ஆகையால் நல்ல தேநீர் செய்வதற்கு உலர்ந்த சூடான தேநீர்க்குடத்தில் (Tea Pot) இலைகளைப் போட்டு, நன்றாகக் கொதிக்கும் ஜலத்தைவிட்டு இரண்டு, மூன்று நிமிஷத்தில் மற்றொரு சூடான குடத்திற்குள் வடித்துவிடவேண்டும். இப் படிச் செய்வதால் தான்னீன் சத்து இறங்காமல் தடுக்கலாம்.

தேயிலையோடு மற்ற இலைகளையும், மண், சிறு மணல் முதலியவற்றையும், ஒருமுறை உபயோகப்படுத்திய இலைகளை யும் சேர்த்து விற்பனை செய்கிறார்கள். ஆகையால் குறைந்த விலைக்கு விற்கும் தேயிலையை வாங்கக்கூடாது.

தேநீர் அருந்துவதால் அபாயம் ஒன்றுமில்லை. அதை ஒரு ஆகாரத்துடன் சேர்க்க முடியாதுதான். ஆனால் கடினமான வேலை செய்யும்போது தேகத்திற்கு அதிக ஆபத்தில்லாமல் நரம்புகளைத் தூண்டக்கூடிய பானமாக இருப்பதாலும், அது ஜீவாணுக்களை நசிக்கச் செய்யாததாலும் பயமில்லாமல் எல்லோரும் விரும்பிச்சாப்பிட உசிதமானது. தலை நோயை நீக்கிவிடும். ஆனால் தூக்கத்தைக் கெடுத்து விடவும் கூடும். சருமத்திற்கு இரத்தோட்டத்தை அதிகரிக்கச் செய்வதால் வேனிற்காலத்தில் தேநீர் குளிர்ச்சியை உண்டாக்குகிறது. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகுமல்லவா? மிதமிஞ்சி தேநீர் அருந்தினால் அஜீர்ண வியாதியும் மலசிக்கலும், பசியின்மையும், மார்பு படபடவென அடித்துக்கொள்வதும் ஏற்படலாம். புலாலுடன் தேநீர் அருந்தக்கூடாது. [அடுத்த திலகத்தில் காபியைக் குறித்து எழுதுகிறேன்.]

---


வீட்டிலிருந்து கொண்டே ஓய்வு நேரத்தில் ரூ. 100-500 வரை சம்பாதிக்க விருப்பமிருந்தால் இன்றே விவரங்களுக்காக எழுதவும்.

ஆல் இந்தியா ஹெல்பிங் சொஸைடி
பிக்ட்லிகர் (K.M.) அமிர்தசரஸ்

All India Helping Society Pictlighar
(K. M.) Amritsar

# பசியும் ருசியும்

(ஸ்ரீமதி சுந்தரம்மாள் ராகவாச்சாரி)

ராத்திரி வேளைகளிலும் பகல்வேளைகளில் கூட காலையில் பள்ளிக்கூடம் ஆபீஸுக்கு ஒன்பதுமணிக்கே புறப்பட்டுப் போக வேண்டியதாயிருக்கும் சமயங்களிலும், குழம்பு, துகையல், ரசம் முதலியன தயாரிக்க அவகாசமிருப்பதுமில்லை. தயாரித்தாலும் கொதிக்க கொதிக்க இருந்தும் சாதம் குழம்புகளை கைபொசுக்க வாய்பொசுக்க ருசி தெரியாமலே சாப்பிடப் பெரியவர்களும் சரி சிறியோர்களும் சரி இஷ்டப்படுவதில்லை. அந்த சமயங்களில், உடம்புக்கு நலந்தருவனவையும் வாய்க்கு மிக்க ருசியுள்ளவையும் முன்கூட்டியே தயாரித்து வைத்துக் கெடாமல் ஓரிரண்டு மாதம் வரை சேமித்துவைத்துத் தினம் உபயோகிக்க வல்லதுமான ருசிகர மான சில பொடிரகங்கள் உண்டு. அவை நமது சகோதரிகளில் வய தானவர்களுக்கெல்லாம் தெரிந்தவையேதான். நவீன நாகரிகப் படிப் புப் படித்து பி. ஏ. எம். ஏ பட்டம் பெற்றுக் கடைசியில் "மலை யிலே விளைந்தாலும் உரலிலேதான் மசிய" வேண்டுமென்றும் மூதுரைக்குக் கண்கூடாக விளங்கும் சிறு பிராய முள்ள சகோதரி கள் பலருக்குத் தெரிந்திருக்காது. ஆகையால் அவற்றில் சிலவற்றை செய்முறையோடு எழுதியிருக்கிறேன். இவையெல்லாமே நெய்யோ நல்லெண்ணெய்யோ சாதத்தில் சேர்த்துப் பொடியுடன் கலந்துண் ணுவதற்கு லாயக்கானவை.

**பித்தம் அஜீர்ணத்வேஷம் இவைகளைக் கண்டிக்கவல்ல கொத்துமல்லி விரைப்பொடி. தேவையான சாமான்கள் :—** கொத்தமல்லிவிரை (பூச்சி சொத்தை யில்லாதது) $2\frac{1}{2}$ பலம், காய்ந்த வற்றல் மிளகாய் எட்டு அல்லது பத்து, ஒரு பெரிய ஸ்பூன் (4 டீஸ்பூன் கொண்டது) உளுத் தம் பருப்பு, கருவேப்பிலை ஒரு ஆர்க்கு (காய்ந்த இலையாயிருந்தால் நல்லதே) தேவையான உப்பு.

செய்முறை:— மிளகாய் உளுத்தப் பருப்பு இரண்டையும் பொன்னிறமாய் எண்ணெயை ஊற்றி வறுத்து, உடனே (தனியா) கொத்தமல்லிவிரை, கருவேப்பிலை யிரண்டையும் போட்டு மணம் வருகிறவரையில் நன்ருக (கருகிப் போகாமல்) வறுத்து எடுத்துக் கொள்ளவும். முதலில் கல்லுரலில் உளுத்தம்பருப்பையும் மிள காயையும் போட்டு இடித்துப் பிறகு தனியா, உப்பு, கருவேப்பிலை யையும் போட்டு இடித்து நல்ல மாவாக ஆனவுடன் எடுத்து மூடி போட்ட ஈயம் பூசிய அல்லது பீங்கான், கண்ணாடி, அலுமினியம் பாத்திரத்தில் எடுத்து சேமித்து வைக்கவும். ஒரு எலுமிச்சம் பழம் அளவு புளியையும் வறுத்துள்ள சாமான்களோடு சேர்த்து இடித்து

உபயோகப்படுத்தலாம். அப்படியானால் உப்பு கொஞ்சம் தூக்கலாக இருக்கவேண்டும்.

## பருப்புப் பொடி (Protein food)

ஒரு ஆழாக்குக் கடலைப்பருப்பு, 2 ஆழாக்கு உளுத்தம் பருப்பு, ஒரு ஆழாக்குத் துவரம்பருப்பு 3 ஆழாக்கு தனியா, வற்றல் மிளகாய் 1 1/2 பலம் எடை, பெருங்காயம் 1/4 பலம், உப்பு வேண்டிய அளவு. இவைகளில் பருப்புகளைப் பொன்னிறமாய் இரும்பு சட்டியில் (எண்ணெய்யூற்றாமல்) மட்டுத் தணல் சூட்டில் நல்ல மணம் வரும் வரையில் தனித்தனியாய் வறுத்து எடுத்துக் கொண்டு மிளகாயையும் உப்பையும் தனித்தனியாக (எண்ணெய் ஊற்றாமல்) பிறகு வறுத்து எடுத்துக்கொண்டு பெருங்காயத்தையும் கடைசியில் வெற்று இலுப்பச் சட்டியிலேயே போட்டுப் பிரட்டிப் பொரித்தெடுத்துக்கொண்டு கொத்தமல்லி விரையையும் நறுமணம் பரிமளிக்கும் வரை வருத்து (எண்ணெய்யூற்றாமலே) எடுத்துக்கொள்ளவும். கடைசியில் கல் இயந்திரத்தில் தனியாவையும் மிளகாயையும் பெருங்காயத்தையும் கூடியவரை சன்னமான பொடியாக விழும்படி அரைத்துப் பிறகு பருப்புகளை (கலந்து விடலாம்) கொஞ்ச கொஞ்சமாகப் போட்டு மாவாக அரைத்து, வறுத்த உப்பையும் இடையிடையில் பருப்பு களோடு இயந்திரத்தில் போட்டு அரைத்துக் கடைசியில் எல்லா வற்றையும் ஒன்றாகக் கலந்து ஒரு ஈயம்பூசிய மூடியுள்ள டப்பியில் சேமித்து வைத்து உபயோகிக்கவும். சாதத்தில் போட்டுக்கொண்டு நெய், எண்ணெய் கலந்து பிசைந்து சாப்பிடுவதற்கு வெகு ருசியாய் யிருக்கும். கத்திரிக்காய் எண்ணெய்க் கறிசெய்யும் போது இந்தப் பொடியைக் கடைசியில் தூவி இறக்கிவைத்துச் சாப்பிட்டுப் பாருங்கள்.

பருப்புப் பொடியும் சாதமும் நல்ல எலுமிச்சங்காய் காரம் போட்ட ஊறுகாயுமிருந்தால் வேறுஒன்றுமே தேவையிராது. முக்கிய மாக வெளியூர்ப் பிரயாணம் யாத்திரா மார்க்கத்துக்கு இந்த இரண் டுமே முக்கியமானவை.

## எள்ளுப்பொடி (காரம்)

ஜலத்தில் போட்டு சோதித்துக் கல்லுப் போக்கிய எள்ளு ஒரு ஆழாக்கு. எட்டு மிளகாய் வற்றல், உளுத்தம்பருப்பு 6 டீஸ்பூன், உப்புத்தேவையான மட்டில், பெருங்காயம் இரண்டு சிறு சுண்டைக் காயளவு. வெள்ளை எள்ளுகிடைத்தால் ஜலத்தில் ஊறவைத்துத் தேய்த்து கறுப்புத்தோலை நீக்கவேண்டிய வேலையிராது. கறுப்பு எள்ளாக இருந்தால் ஜலத்தில் 1/2 மணி ஊறவைத்துக் கையால் தேய்த்தோ செங்கல் தரையில் தேய்த்தோ தோல் நீக்கவும். பிறகு கல்சோதித்து தோல் போக்கி எள்ளை ஈரம் போக காயவைத்து எடுத்துக்கொண்டு எண்ணெய்யூற்றாமல் இரும்புச் சட்டியில் போட்டு படபடவென்று நன்றாக எல்லா எள்ளும் வெடித்து நல்ல வாசனை வரும் வரையில் கிளறிக் கொடுத்துக்கொண்டே (கருகிப் போக

விடாமல்) வறுத்து எடுக்கவும். பிறகு மிளகாய் பெருங்காயம் உளுத்தம்பருப்பு இவைகளை நல்லெண்ணெய்யில் வறுத்து எடுத்துக் கொண்டு எல்லாவற்றையும் பிறகு சேர்த்துக் கல் உரலில் இரும்பு உலக்கை கொண்டு பொடி செய்து சேமித்து வைத்துக் கொண்டு ஒரு மாதம் வரை ருசி கெடாமல் உபயோகிக்கலாம்.

### (மெந்திய) வெந்தியப் பொடி (வயிற்றுப்போக்குகளுக்கு சிலாக்கியமானது)

4 டீஸ்பூன் நல்ல வெந்தயம், அரையாழாக்கு உளுத்தம் பருப்பு, ஒரு டீஸ்பூன் தனியா, சுண்டைக்காய் அளவு பெருங்காயம், அரை டீஸ்பூன் சீரகம், தேவையான உப்பு. உளுத்தம்பருப்பை முதலில் வெறும் இருப்புச் சட்டியில் பொன்னிறமாக வருத்து எடுத்துக் கொள்ளவும். பிறகு மற்ற சாமான்களை யெல்லாம் வறுத்து எடுக்கவும். (பெருங்காயத்தை மட்டும் கடைசியில் சிறிது எண்ணெய் ஊற்றி வறுக்கலாம். ஆனல் அவசியமில்லை. வெறுமனேயே வறுத்தால் பொரிந்து விடும். உளுத்தம் பருப்பை முதலில் பொடியாக்கிக் கொண்டு பிறகு மற்றவைகளையும் போட்டு இடித்து வைத்துக் கொள்ளவும். காய்ந்த கருவேப்பிலையையும் வறுத்துச் சேர்த்துக் கொள்ளலாம். உடம்புக்கு நல்லமருந்துப் பொடி.

### தேங்காய்ப் பொடி

நல்ல முற்றின தேங்காய் இரண்டு. 15 வற்றல் மிளகாய், கருவேப்பிலை, 1/4 ஆழாக்கு உளுத்தம்பருப்பு, பெருங்காயம், எலுமிச்சம்பழம் அளவு புளி, உப்புத் தேவையானபடி. தேங்காயை உடைத்து நன்ருகத் துருவி, துருவலையும் இரண்டு ஆர்க்கு கருவேப்பிலையையும், இரும்புச்சட்டியில் போட்டு இளந்தீயில் சுருள வதக்கி (வறுத்து என்றே சொல்லலாம்) எடுத்துக்கொண்டு, பிறகு உளுத்தம் பருப்பு மிளகாய் பெருங்காயத்தை எண்ணெய் ஊற்றி வறுத்துக் கல் உரலில் இடித்து (உப்புச்சேர்த்து) பிறகு தேங்காய் மொத்தையையும் புளியையும் போட்டு நைய பொடிப்பதம் வரும் வரையில் இடித்து அள்ளி ஈயம் பூசிப பாத்திரத்தில் சேமித்துவைத்து உபயோகிக்கவும். புளி சேர்க்காமலேயே இதை செய்து உபயோகிக்கலாம்.

குறிப்பு:—1 மேலே சொல்லிய எல்லாப் பொடிகளுக்குமே உப்பைத் தனியாக வறுத்து உபயோகிக்கலாம்.

2 "பருப்புப் பொடி" கல் இயந்திரத்தில் அரைத்தெடுக்க வசதியில்லாமற் போனல் தற்கால நவநாகரீக சக்தி சாதன இயந்திரத்திலும் அரைத்து வைத்துக் கொள்ளலாம். இப் பொடிகளுக்கெல்லாம் ப்ரோடின் சத்து மிகவும் அதிகம். புஷ்டி தருபவை.

---

# கேள்வி-பதில்

ரபேகா லேபம், நாகூர்

கேள்வி: எனக்கு ஒரு வயது குழந்தை இருக்கிறான். பயமே தெரியவில்லையே? அடுப்பை இழுக்கிறான், விளக்குடன் விளையாடுகிறான், நெருப்புப் பயம் ஏற்பட என்ன வழி?

பதில்: நீங்கள் பயப்படாதீர்கள். பயமுறுத்திப் பாருங்கள். கேட்காவிட்டால் சூட்டை அனுபவத்தில் அறிய விட்டு விடுங்கள். ஒரு வயதிற்குள்ளான குழந்தைகள்தான் சூட்டின் உணர்ச்சியை மறந்து விடும். ஒரு வயதிற்கு மேலானால் ஒரு முறை அனுபவித்து விட்டால் திரும்பியும் அதனிடம் செல்லாது.

ருக்மணி, ராசிபுரம்

கேள்வி: பால் கோவா கிடைக்காவிட்டால் பால் பவுடர்களை உபயோகிக்கலாமா?

பதில்: பாலை சுருண்டக் காய்ச்சினால் பால் கோவாவாக இறுகிக் கொள்கிறது. பால் கோவாவில் தண்ணீரும் வெண்ணெய் கொழுப்பும்தான். விடமின் சத்துக்கள் மிகுந்துள்ள பால் கோவாவுக்கு பதில் வேறெதையும் உபயோகிக்கக்கூடாது. ஜீவசத்துக்கள் மிகுதியாயுள்ள பாலைதான் உபயோகிக்க வேண்டும்.

சியாமளா, சென்னை

கேள்வி: ஊரிலே என்னைப்போலொத்த சிறுமிகள் திரள் திரளாக சினிமாவுக்குப் போகிறார்கள். அவர்களெல்லோரும் ஒரு நாளைக்காகிலும் சினிமா பார்க்காமலிருக்க ஏதாகிலும் நீங்கள் வழி செய்ய முடியுமா?

பதில்: அம்மாடி! அதெப்படி என்னால் முடியும். மின்சார வித்யுத் சக்தி காரியாலயத்தில் ஏதாகிலும் கோளாறு வர வேண்டுமென்று வேண்டிக் கொள்ளேன்!

ராமதிலகம், கோயம்புத்தூர்

கேள்வி: காலையில் எழுந்ததும் வாயில் பித்த நீர் சுரந்து கொண்டே இருக்கிறது. எனக்கு ஏதாகிலும் வழி சொல்ல முடியுமா?

பதில்: காலையில் எழுந்ததும் பத்து நிமிஷங்கள் தேகப் பயிற்சி செய்யவும். பயிற்சி செய்யப் பழகிக்கொண்டால் வழக்கத்தில் முகங்கழுவி காப்பி சாப்பிடுவதைப்போல் வழக்கத்தில் வந்து விடும். காலையில் எழுந்ததும் சோம்பலாயுள்ள எலும்புகளுக்கு விருவிருப்பேற்படும் முதலாவது பயிற்சியை வயிற்றுக்குக் கொடுக்க வேண்டும். வயிறு சுத்தமாயிருந்தால் ஒரு விதமான வியாதியும் ஏற்படாது. பத்து நிமிஷங்களுக்கு வயிற்றுக்கு வியாயமம் கொடுத்தால் உடலுக்கு வன்மையும், மேனிக்கு வசீகரமும் ஏற்படுவது திண்ணம். இரண்டு கைகளையும் தொடையில் வைத்துக்கொண்டு சிறிது குனிந்தாற்போல் நின்று கொண்டு வயிற்றை எக்கியும் உப்பியும் செய்யவும். இதற்குத்தான் 'உட்டியானு' என்று ஆசனப்பயிற்சியில் சொல்வது. இந்த ஆசனத்தைப்பற்றி விரிவாக படங்களுடன் பதில் வேண்டுமானுல் இரண்டு அணு ஸ்டாம்பு விலாசத்துடன் அனுப்பவும்.

### கேள்வி - பதில், குங்குமம், மதருஸ் 10

சுசீலா ரத்னவடிவேல், கொழும்பு

கேள்வி: நான் உயரமாக ஏதாகிலும் வழிசொல்லவும்.

பதில்: சில சுலபமான சரீரப் பயிற்சிகளின் மூலம் பெண்கள் உயரத்தை அதிகரித்துக் கொள்ளலாம். விரைவில் பலன் தெரிவதற்குப் பயிற்சிகள் 16 வயதிற்குள் மேற் கொள்ளப்பட்டால் உசிதம்.

#### முதலாவது பயிற்சி

நின்ற இடத்தில் ஓடப்பழகுவது. திரையிடப்பட்ட ஜன்னல்களுள்ள மெத்தை மீதுள்ள அறையில் அரைக்கால் நிஜாரும் பாடியும் மாத்திரம் அணிந்து இப்பயிற்சியைச் செய்வதால் ஒரு மாதத்தில் இரண்டங்குலம் உயரலாம்.

கட்டை விரல்களைப் பின்புறம் வைத்து நாட்டியத்திற்கு நிற்பது போல இடுப்பில் கைகளை வைத்துக்கொண்டு நிமிர்ந்து நிற்கவும். பிறகு வலது காலை வளைக்காமல் இடது முழங்காலை முகவாய்க் கட்டைக்குச் சரியாக உயர்த்தவும். துடைகள் வயிற்ருேடு ஒட்டினுற் போல இருக்கும் போது முதுகு கோணக்கூடாது. பிறகு இடது காலை ஊன்றி வலது

காலே உயர்த்தவும். முதலில் நிமிஷத்திற்கு நான்கு முறையில் ஆரம்பித்து கொஞ்சங் கொஞ்சமாக எண்ணிக்கையை அதிகரித்துக்கொண்டே போய் பதினைந்து நாட்களுக்குள் நிமிஷத்திற்கு முப்பது தடவை ஓடப்பழகி விடவேண்டும்.

இப்படி சுமார் மூன்று அல்லது நான்கு நிமிஷநேரம் ஓடிய பிறகு ஓய்வு எடுத்துக்கொள்ளவும்.

### இரண்டாவது பயிற்சி

ஒருவிரிப்பில் மல்லாந்து படுத்துக்கொண்டு கைகளை பூமியோடு படிந்தாற்போல் வைத்துக்கொள்ள வேண்டும். பிறகு முழங்கைகள் காதுகளோடு ஒட்டியிருக்க, அப்படியே எழும்பி மெதுவாக முன்னேக்கி வந்து காலின் பெருவிரல்களைப் பிடிக்கவேண்டும். முழங்கால்கள் மடியக்கூடாது. அடுத்த படியாக முழங்கைகளைத் தாழ்த்தி முகம் முழங்கால்களில் படும்படி கவிய வேண்டும்.

இந்நிலையில் சிலவினுடிகள் இருந்து ஓய்வு எடுத்துக் கொள்ளவும்.

சகுந்தலா, மைலாப்பூர்.

கேள்வி: பகலில் தூங்குதல் கெடுதல்தான். ஆனல் பழக்கமாய்விட்டது. அதனல் என் கண்கள் கோவைப் பழம் போன்று சிவந்து விடுகிறது. சிவக்காமல் இருப்பதற்கு என்ன செய்யலாம்?

பதில்: தினசரி காலையில் 10 நிமிஷம் சிரசாசனம் செய்யப் பழகிவிட்டால் பகலில் தூக்கம் வராது. கண்களுக்கும் இரத்தோட்டம் அதிகமாவதால் சிவப்பு நீங்கிவிடும்.

காலையிலும் மாலையிலும் ஒரு அகன்ற பாத்திரத்தில் குளிர்ந்த சுத்த ஜலம் விட்டு அதில் முகத்தை அமிழ்த்தி பல முறை கண்களை தண்ணீருக்குள் திறந்து மூடுவதாலும் கண்கள் சிவப்பு நீங்கும். இரண்டு நெல்லிடை சிங்க் சல்பேட்டை (நாககந்தகிதகஜம்) ஒரு அவுன்ஸ் பன்னீரில் (டிஸ்டில்ட் வாட்டர்) கரைத்து தினசரி காலையிலும் மாலையிலும் கண்களில் சில துளிகள் விட்டுக்கொண்டால் கண்ணெரிச்சல் நீங்கும்.

அதனுல் கலக்கம் தோன்றுது. வாரமிருமுறை எண்ணெய் தேய்த்துக் கொள்வதால் அதி சீக்கிரத்தில் குணம் தெரியும்.

ஜானகி, கோயமுத்தூர்

**கேள்வி :** எனக்கு வயது 22. என் பற்கள் பழுப்பாக இருக்கின்றன. வெளுப்பதற்கு என்ன செய்யலாம்?

**பதில் :** "நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி. ஆலும் வேலும் பல்லுக்குறுதி" என்ற முதுமொழியை மேற்கொண்டு கருவேலம் குச்சியிலாவது ஆலம் விழுதிலாவது பற்களைத் துலக்கினுல் அவற்றிலுள்ள துவர்ப்புப் பதார்த்தம் பற்களில் பழுப்பு நிறமுண்டாக்கும் வஸ்துவைக் கரைத்து வெண்மையாக்கும். இதோடு சிறிது சீமைச்சுண்ணும்புப்பொடி (சாக்) யையும் உபயோகித்தால் இன்னும் விரைவில் குணம் தெரியும்.

பிரஷ்களால் தேய்ப்பதால் பற்கள் வெண்மையாகலாம். ஆனுல் அவற்றை சுத்தமாக வைத்துக்கொள்வது எளிதல்ல. தற்காலத்தில் பலர் பல் வியாதிகளால் உபத்திரவப்படுவதற்கும் பிரஷ்களும் பற்பசைகளும் தான் காரணம் என்று சொன்னுல்கூட தவருகாது. பற்களிடையில் சிக்கிக்கொண்டிருக்கும் அழுகிப்போன துர்நாற்றத்திற்குக் காரணமான ஆகாரத் துணுக்குகள் பிரஷ்களின் மயிர்களுக்கிடையில் சேர்ந்து கெடுவதால் பலவகைக் கிருமிகள் உண்டாகின்றன. அதே பிரஷை திரும்பவும் உபயோகிக்கும்போது அந்தக் கிருமிகள் பற்களுக்கிடையே சேர்ந்து பற்கள் சம்பந்தமான வியாதிகளை உண்டாக்குகின்றன. பற்குச்சிகளை உபயோகித்தபின் எறிந்து விடுவதால் இந்த அபாயம் கிடையாது.

### குடும்ப வருவாயைப் பெருக்க வழி

ஸ்ரீமதி ச—தஞ்சாவூர்

**கேள்வி :** என் கணவருக்கு அரசாங்க உத்தியோகத்தில் சம்பளம் எண்பது ரூபாய் கிடைக்கிறது. கிம்பளம் கிடையாது. எனக்கு ஐந்து குழந்தைகளும் ஒரு வைதவ்யமடைந்த நாத்தியும் உண்டு. இந்த எட்டு வயிறுகளை நிரப்பவும், குழந்தைகளைப் பள்ளிகளுக்கு அனுப்பவும் என் கணவருடைய வருவாய் போதவில்லை. நாங்களெல்லோருமே அரைப்பட்டினி கிடக்கிறோம். சரியான உணவில்லாமையால் குழந்தைகளுக்கும்

அவருக்கும் அடிக்கடி தேகநலன் கெட்டு வைத்தியத்திற்காக அதிக செலவும் ஏற்படுகிறது. என் குழந்தைகளில் மூத்த வளுக்கு வயது 14. இதிலிருந்து சமீபகாலத்தில் அவர்கள் சம்பாத்தியத்தால் குடும்ப வருவாய் உயருமென்று கனவில்கூட நினைக்கமுடியாது. என்னுடைய முயற்சியால் மேல்செலவுக் காவது சம்பாதிக்க ஏதாவது வழி சொல்லுங்கள்.

பதில்: நீங்கள் உங்கள் குடும்பத்தைக் குறித்து எழுதி யுள்ளதிலிருந்து உங்களுக்கு ஓய்வு நேரம் அதிகம் இரா தென்றே ஊகிக்கிறேன். உங்கள் நாத்தனாரும் நீங்களுமாக உங்களுக்கு அறிமுகமானவர்களுக்கு சட்டைகள் தைத்துக் கொடுத்து ஊதியம் பெறலாம். அதற்கு அவகாசமில்லா விட் டாலோ, திறமை யில்லாவிட்டாலோ இன்னொரு சுலபமான வழி சொல்கிறேன். நீங்கள் குங்குமத்தை உங்கள் நண்பர் களுக்கு விற்பனை செய்யலாம். ஒவ்வொரு பிரதிக்கும் இரண் டணா கமிஷன் உண்டு. தினசரி நான்கு நண்பர்களைச் சந்தித்து 4 பிரதிகளை விற்பனை செய்தீர்களானால் எட்டணாவாயிற்று. உங்களுக்கு என் யோசனை பிடித்தமாயிருந்தால் உடனே எழு துங்கள்.

ஸ்ரீமதி சியாமளா, சென்னை

டால்டாவினால் அபாயம் உண்டா?

கேள்வி: இந்த மாத திலகத்தில் குலோப்ஜான் செய்ய வெண்ணெய்யாவது டால்டாவாவது உபயோகிக்கலாம் என்று எழுதியிருக்கிறீர்கள். சில மாதங்களுக்கு முன் ஒரு பத்திரி கையில் வனஸ்பதிகளால் தயார் செய்யப்பட்ட உணவு உடம் புக்குதவாது என்றும் அதன் உற்பத்தியை அரசாங்கம் தடை செய்ய வேண்டுமென்றும், அதில் நிக்கல் என்னும் உலோகம் சம்பந்தப்படுவதாயும் உலோகம் நமக்குத் தேவையில்லை என் றும் படித்ததாக எனக்கு ஞாபகம் இருக்கிறது. இப்படி நமக்குக் கெடுதல் உண்டாக்கக்கூடிய பொருளை நீங்கள் சிபார்சு செய்வது, அதிசயமாயிருக்கிறது. இதைக் குறித்து விவர மாக பதில் குங்குமத்திலேயே எழுதினால் என் போன்ற சகோ தரிகளுக்கு மிக்க உதவியாக இருக்கும்.

பதில்: வனஸ்பதியின் உபயோகத்தைக் குறித்துப் பத் திரிகைகளில் மாத்திரமன்று, அரசாங்க சபையிலும் கூட விவாதம் நடந்திருக்கிறது. அப்பொழுது உணவு மந்திரியாக

இருந்த ராஜன் பாபு அவர்கள் வனஸ்பதியால் மனித தேகத்துக்குக் கெடுதல் ஏற்படக்கூடும் என்ற வாதத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. அரசாங்கம் இதைக் குறித்துக் தீவிரமாக பரிசோதனைகள் நடத்த பங்களூர் இன்ஸ்டிடியூட் ஆப் ஸைன்ஸ் போன்ற பல இரசாயன சோதனைச் சாலைகளுக்கு எழுதியிருக்கிறார்கள். அவர்கள் தங்களது யாதாஸ்தை இன்னும் சமர்ப்பிக்கவில்லை. இந்த ஆண்டின் இறுதியில் அவர்களுடைய ஆராய்ச்சியின் உண்மைகள் வெயிடப்படும் என அறிகிறேன். நான் அறிந்தமட்டில் வனஸ்பதியால் ஒரு தீங்கும் ஏற்படாது என்றே நினைக்கிறேன். டால்டா விற்பனைக்கு வந்ததிலிருந்து இன்றுவரை நான் அதை உபயோகித்து வருகிறேன். அதனால் குழந்தைகளின் வளர்ச்சி தடைப்பட்டதாகவோ, தேகநலன் கெட்டதாகவோ எனக்குத் தோன்றவில்லை.

மனித ஆகாரத்தில் சுமார் 4 சதவிகிதம் கொழுப்புப் பதார்த்தம் இருக்க வேண்டுமென்பது உடற்கூற்று நிபுணர்களது அபிப்பிராயம். இதை புலாலுண்ணாதவர்கள் வெண்ணெய் அல்லது நெய்யிலிருந்துதான் பெறவேண்டும். வீசை வெண்ணெய் ஏழு ரூபாயும், நெய் 10 பத்து ரூபாயும் விற்கும் இந்நாளில் இந்த அவசியமான ஆகாரப்பொருள் எல்லோருக்கும் கிட்டாமல் போய்விடுகிறது. நெய்க்குப் பதில் டால்டாவை உபயோகிக்கலாம் என்று சொல்ல வரவில்லை. நெய் மிருகக் கொழுப்பு வர்க்கத்தில் சேர்ந்தது. டால்டா தாவரக் கொழுப்பு நெய். எளிதில் சீரணமாகும். ஏ, டி வைடமின் சத்துள்ளது. வனஸ்பதியில் இந்த வைடமின் சத்துக்கள் சேர்த்தால்தான் உண்டு. டால்டாவில் வைடமின் டி சேர்த்திருக்கிறார்கள். ஏ வைடமின் மீனெண்ணெய்யில்தான் இருக்கிறது. புலால் மறுக்கும் நம் நாட்டு மக்கள் தாவர நெய்யாகிய டால்டாவில் மீன் கொழுப்பு கலப்பதை சகிக்கமாட்டார்கள். டால்டா தயாரிக்கப்படும் தாவர எண்ணெய்களிலேயே இந்த வைடமின் சத்துக்கள் கிடையாது.

அப்படியென்றால் அந்த தாவர எண்ணெய்யையே உபயோகிக்கிறதுதானே என்ற கேள்வி எழலாம். அந்த எண்ணெய்கள் தெளிவாக இருப்பதில்லை. அதோடு விரைவில் 'சிக்கு' நாற்றமெடுக்கின்றன. அதோடு மனோபாவத்தையும் கவனிக்க

வேண்டும். நெய் கிடைக்காவிட்டால் அதைப் போன்ற ஓர் பொருள் இருந்தால் அதைக் கண் விரும்புகிறது. அதனுல் தான் கலப்பு நெய்யைக்கூட மக்கள் வாங்கிவிடுகிருர்கள்.

தற்சமயம் நெய்யும் வெண்ணெய்யும் பணக்காரர்களுக்குத்தான் கிடைக்கும். மிகமிகப் பெரும்பான்மையோர்களும் குலோப்ஜான் சாப்பிட விரும்பலாமல்லமா? அவ்விருப்பத்தை டால்டாவை உபயோகித்துப் பூர்த்தி செய்து கொள்ளலாம். எப்பொழுதாவது ஒரு தடவை வருஷத்தில் ஒரு நாள் உபயோகிப்பதால் பெருத்த தீங்கு நேரிட்டுவிடாது. அவ்வளவு கெட்ட பதார்த்தமாக இருந்தால் அதை சுகாதார அதிகாரிகள் அனுமதிக்கவே மாட்டார்கள். யுத்ததின் போது டால்டா கிடைப்பது அரிதாயிருந்தது. 1944-ம் ஆண்டில் மாத்திரம் துருப்புகளுக்காக 33,000 டன் வனஸ்பதி அரசாங்கத்தார் வாங்கினுர்கள். தேச பாதுகாப்புக்கு அவசியமான துருப்புகளுக்கு, தேகசுகத்துக்கு ஆபத்தான வஸ்துவை அனுமதிப்பார்களா? நீங்களே யோசித்து ஒரு தீர்மானத்திற்கு வாருங்கள்.

---


கிடைக்கப் பெற்ருேம்:

**கோதாவரி. ஆசிரியர் எம். லக்ஷ்மி.**

கிடைக்குமிடம்: **சக்தி காரியாலயம்,**

**விலை அணு ஆறு**

பாட்டிசைக்கும் பாக்கியம் பெற்றுள்ள ஸ்ரீமதி லக்ஷ்மியம்மாளின் காவ்யங்களில் இன்பம் நிரம்பி வழிகின்றது. கோதாவரியைக் கண்டதும் மடைதிறந்த வெள்ளம்போல் அம்மையாரில் பண்புடைய வார்த்தைகள் மிதந்து அடித்துக் கொண்டு வருகின்றன. "கண்கவர்ந்திடும் எழிலுடன் சேனகரைப் பசுமை, விண்ணளாவிட வெள்ள நீர் பாய்ந்திடும் வேகப், பண்புடைக்கோதாவரி பாக்கியம் கண்டேன்" என்கிருர். லளிதமான இஞ்சொற்களால் கோதவரிமட்டுமல்ல, 'அசோகாவனம்,' 'ராமஜெயம்,' 'காந்தி வாழ்த்து,' 'வீமனின் சிவபூஜை,' முதலியவைகளுடன் ஆங்கிலத்திலிருந்து அமைத்தெழுதிய சில பாக்களும் இடம் பெற்றிருக்கின்றன.

# பெண்கள் பார்லிமெண்ட்

பிரசன்னமாயிருக்கும் அங்கத்தினர்கள்: ஸ்ரீமதிகள் லலிதா சுப்ரமணியம், சரஸ்வதி, கமலா தாமோதரம், ஜானகிராமன், ஜான்மின் மிஸ்டிரி, கதிஜாபேகம், நளினி, க்ருஷ்ணம்மாள், விசாலாக்ஷி.

கதிஜாபேகம்: சித்திரை மாதத்தில் நமது பார்லிமெண்ட் கூடினபோது இந்திய சீர்திருத்த சட்டத்தை விவாதிக்க நேரமில்லாமையால் ஒத்திப் போடப்பட்டு விட்டதே. அந்த விஷயத்தையே தொடர்ந்து விவாதிப்போமா!

ஜானகி: சென்னை மாதர் சங்கத்தில் ராஜன் பாபு தலைமை வகித்துப் பேசும்போது தனது தர்ம பத்தினியைப் போன்ற தற்காலத்து நாகரீகத்திலீடு படாத ஸ்திரீகளை இச்சட்டத்தினாலேற்படும் நன்மை தீமைகளைப்பற்றிச் சொல்லி வழிக்குக் கொண்டு வந்தால் இச்சட்டத்தினால் ஏதாகிலும் உபயோக மேற்படுமென்று கூறினார்.

கமலா: தன்னால் இம்மசோதாவுக்கு எவ்விதத்திலும் ஆதரவுக் கொடுக்க முடியாதென்றும் ஏனென்றால் இந்தியப் பெண்கள் அனைவராலும் இம்மசோதா ஏற்கப்படவில்லையென்றும், சில பேர்களுடைய ஆதரவால் ஏற்படுத்தப்பட்ட எவ்விதச் சட்டமும் பயனளிக்காதென்றும் கூறினாராமே!

விசாலாக்ஷி: மசோதாவை ஆசாரக் கட்டுப்பாடுள்ளவர்கள் மாத்திரம் எதிர்க்கவில்லை. நீதித்துறையில் அனுபவமுள்ளவர்களும், இன்னும் பிரமுகர்களும் மசோதாவை எதிர்க்கிறார்கள். இம்மசோதாவுக்கு இரண்டரை மாதம் டயம்கொடுத்திருக்கிறார்கள். எம்மதத்தினரும் இதற்குள் சரிசெய்து கொள்ளவேண்டுமாம்.

நளினி: எங்கள் இன்டர்மீடியெட் பேப்பரெல்லாம் 'அவுட்' ஆகி மற்று மொருமுறை பரீக்ஷை எழுதிவிட்டு வந்திருக்கிறேன். இந்த காலேஜ் படிப்பில் எனக்கு வெறுப்பு தட்டிவிட்டது. ராப்பகலாய்ப் படிப்பது, அப்பாடா! பரீக்ஷைகள் முடிந்துவிட்டன என்று பெருமூச்சு விடுவதற்குள் 'பரீக்ஷை தாள்கள் வெளியாகி விட்டன. மறுமுறை எழுதவேண்டும்' என்று சட்டம் வருவது, என்ன விபரீதம் போங்கள்.

கிருஷ்ணம்மாள்: நளினி வெறுப்படைவதற்கு காரணமில்லாமலில்லை. சர்வகலாசாலைகளின் கமிஷனின் மெம்பரான டாக்டர் மார்கன் என்பவர் குறிப்பிட்டார். "கிராமங்களிலிருக்கும் சிறுவர்கள் மூன்று நாட்களைப் பள்ளியிலும் மற்றும் மூன்று நாட்களை தங்கள் பெற்றோர்களுடன் வயல்களிலும் பயிற்சிப்பெற ஏற்பாடு செய்யவேண்டும்" என்கிறார். நான்கு சுவர்களுக்கு மத்தியில் பயிற்சி பெறுவதைவிட பரந்த உலக வெளியில் குழந்தைகள் விருத்தியடைய எவ்வளவோ வழிகளிருக்கின்றன. புத்தகப் படிப்புடன் கைத்தொழில்களிலும் குழந்தைகளுக்குப் பயிற்சி யளிக்க வேண்டியதை அரசாங்கம் கவனிக்க வேண்டிய விஷயம்.

விசாலாக்ஷி: ஒரு ஐந்து வயது சிறுவன் இயந்திர சாஸ்திரத்தில் வெகுவாக ஈடுபடுவது வழக்கம. இருபத்தைந்து வயதையடைந்த ஒருவனால் அச்சிறுவன் திருப்புளி வைத்துக்கொண்டு ஸ்குரூ ஆணிகளை முடுக்குவதுபோல் முடுக்கவே முடியாது. பதினேழு வயதிற்குள் அவனுக்கு ரேடியோ ரிப்பேர் செய்யத் தெரியும். வீடுகளுக்கு "பாஸிடிவ், நெகடிவ்" அறிந்து மின்சார விளக்குகள் போடத் தெரியும். இயந்திர சாஸ்திரத்தில் நிபுணனாக விளங்கப் போகிறானென்று அவனை இன்டெர்மீடியட் படிப்பில் கணக்கு எடுத்துக் கொள்ளச் சொன்னேம்.

ஜாஸ்மின் மிஸ்டிரி: இன்ஜினீரிங் காலேஜில் இடங் கிடைக்க வில்லையாக்கம்!

விசாலாக்ஷி: இயந்திர சாஸ்திரத்தில் ஆர்வமுள்ள பிள்ளைக்கு 'லா' பயிற்சிக்குத்தான் நமது அரசாங்கத்தில் இடங்கிடைத்தது. பாஸ்செய்து விட்டான். ஊதியம் அதிகம் கிடைக்காததால் ஒரு கம்பெனியில் குமாஸ்தா வேலைக்குப் போகிறான்.

லலிதா: பிரதம மந்திரி நேரு லண்டனுக்கு விஜயம் செய்திருந்தாரே.

விசாலாக்ஷி: பிரதமர்கள் மகாநாடு ஒன்று லண்டனில் கூடிற்று. காமென்வெல்த்தில் மெம்பராக இருப்பதென்று முடிவுசெய்திருக்கின்றனர். இனிமேல் மன்னர் இந்தியாவுக்கு ஒரு சின்னமாகவேதான் விளங்குவாராம். அவருக்கு ஒருவரும் விசுவாசங்கூட தெரிவித்துக் கொள்ள வேண்டாமாம்.

கதீஜாபேகம்: பண்டிதநேரு அன்று ரேடியோவில் பேசும்போது தான் லண்டன் சென்றுதிரும்பியதையும், உலகத்தில் பரிபூரண அமைதியை நிலவச்செய்ய இந்தியா காமன்வெல்த்திலிருந்து கொண்டு பன்மடங்கு அதிகத் திறமையுடன் செய்யவேண்டுமென்று அழுத்தமாக வற்புறுத்திப் பேசினார்.

---

நான்கு ஊசிகளுடைய இந்த மெஷின் இரண்டினுடைய வேலைகளைச் செய்கிறது. இதனால் பூவேலை தைப்பது மிகவும் சுலபம். இலைகள், கொடிகள், புஷ்பங்கள், மனதுக்கேற்ற எவ்வித அலங்காரங்களையும் துணியில் தைக்கலாம். பக்ஷிகள், மிருகங்கள், படங்கள், இயற்கைக் காட்சிகள், முதலியனவும் செய்யலாம். வேலை நேர்த்தியாகவும், உறுதியாகவுமிருக்கும். நான்கு ஊசிகளுடன் மெஷின் விலை ரூ. 3/- போஸ்டேஜ் 14 அணா. டிஸைன்கள் புஸ்தகம் ரூ. 2-8-0 போஸ்டேஜ் 8 அணா. ஆங்கிலத்தில் எழுதவும்.

உஷா டிரேடிங் கம்பெனி,

(3303/R) 74 ஜி. பி. ரோடு, டெல்லி.

USHA TRADING CO., (3303/R) 74 G. B. Road, Delhi.

# ஆழ்வார் துதி

ஸ்ரீமதி மா. லக்ஷ்மி.

பெரியாழ்வார் கோதை பேய்பூதம் பொய்கை
திரு மழிசை தொண்டரடித் தூளார்-திருமங்கை
பாணர் சடகோபர் சேகர் மதுர கவி
வாணருரை மாற்றமே நன்று.

(பெரியாழ்வாரும் கோதையும்)

சூடிக்கொடுத்த மலரதனைத் துளபமார்பன் ஏற்றிடவும்
பாடிப் பாவை நோன்பியற்றிப் பரந்தாமனுக்கே தனைப்பணித்து
வாடிக் காதல் மேலீட்டால் வரித்தே அரங்கப்பெருமானைக்
கூடிக் கனவில் கைப்பிடித்தாள் கோதைபாடல் வாழியரோ.
கோதை யென்னும் ஒருமகளைக் கோவிந்தனுக்கே உரித்தாக்கிக்
கோதில் தமிழின் இசைச் செல்வம் குறைவில் சீராய்க்கொடுத்தே
யசோதை மனையில் வளர்கண்ணன் இளமைத்தோற்றம் மனங்கவர
ஆசி பாடல் பல அமைத்தார் ஆழ்வார் பெரியார் வாழியரோ.

---

Printed by T. V. Ramanath at Ramanath Press, 188 Royapettah High Road, Madras 14. Edited and Published by S. Visalakshi, "Murali," Pachayappa's Hostel Road, Madras 10.

சாது ராமதாஸர்



அன்னை கிருஷ்ணா பாயும்
அடியார்களும்



REGD. No. M. 3321 · KUMKUMAM

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
17 MAY 49
MADRAS

ak 2 copies




# ஸூரஜ்மல்ஸ்

"55 வருஷங்களுக்கு முன் ஸ்தாபிதம்"

தேவஸ்தானம்
கமிட்டி

திருப்பதி
26-3-48

பகவான் ஸ்ரீ வெங்கடேஸ்வரரின் ரத்ன கிரீடத்தில் திகழும் அபூர்வமான வேலைப்பாட்டை கவனிக்கும்போது அதைத் தயாரித்த ஸூரஜ்மல்ஸ் கம்பெனியின் உன்னதமான வேலைத்திறமையில் தங்களுக்குள்ள பெருமதிப்பை தெரிவித்துக் கொள்வதில் திருமலை திருப்பதி தேவஸ்தானக் கமிட்டியார் மிக்க மகிழ்ச்சி யடைகின்றனர். கலையின் சிகரம் பூரணப் பொலிவுடன் விளங்கலாமென்பதற்கு இக்கிரீடமே தகுந்த சான்று.

B. வீராசாமி நாயுடு,
கமிஷனர்.

மேன்மையான நல்முத்து நவரத்தினங்கள்
நாணயமான தங்க நகை வியாபாரிகள்

313, எஸ்பிளனேட் .. மதராஸ்